UNIVERSITY OF MADRAS

INTERMEDIATE EXAMINATION

IN ARTS AND SCIENCE

1952

PART II — TAMIL

SELECTIONS IN POETRY

UNIVERSITY OF MADRAS

INTERMEDIATE EXAMINATION

In Arts & Science

1952

PART II—TAMIL

Selections in Poetry

DOCTRINA VIM PROMOVET INSITAM

Printed at

THE ASSOCIATED PRINTERS (Madras) Ltd.,

MADRAS & BANGALORE.

பொருளடக்கம்

			பக்கம்
1.	புறநானூறு	... ...	1—6
	,, ,,	குறிப்புரை	62—65
2.	திருக்குறள்	... ...	6—10
	,, ,,	குறிப்புரை	66—70
3.	மணிமேகலை	... ...	11—17
	,, ,,	குறிப்புரை	71—75
4.	கம்பராமாயணம்	... ...	17—30
	,, ,,	குறிப்புரை	76—87
5.	வில்லிபுத்தூரார் பாரதம்	...	30—43
	,, ,,	குறிப்புரை	88—95
6.	திருவிளையாடற் புராணம்	...	43—51
	,, ,,	குறிப்புரை	96—101
7.	மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்		51—54
	,, ,,	குறிப்புரை	102—103
8.	புலவராற்றுப்படை	...	54—57
	,, ,,	குறிப்புரை	104—105
9.	சதகங்கள்	... ...	57—62
	,, ,,	குறிப்புரை	105—110

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111051

.।

புறநானூறு

புறநானூறு என்பது பத்துப்பாட்டு எட்டுத்தொகை எனத் தொகுக்கப் பெற்ற சங்க நூல்களுள் எட்டுத்தொகையைச் சார்ந்த ஒரு நூல். அகம், புறம் எனப்படும் இரு வகைப் பொருள்களுள், புறத்தைப் பற்றிய பாடல்களே இதன்கண் உள்ளன. இன்பத்தைப் பற்றியது அகம் எனப்படும். அறத்தையும் பொருளையும் பற்றியது புறம் எனப்படும். இந் நூல் புறத்தின் பகுதிகளாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைகளின் பொருளமைந்த 400 பாடல்களைக் கொண்டுள்ள தாதலின், இது புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இதற்கு வழங்கும் வேறு பெயர்கள் புறம், புறப்பாட்டு என்பன.

இந்த நூலிலுள்ள பாடல்களைப் பாடியவர் கடைச் சங்கப் புலவர் எனப் பெறுவராயினும், அவர் யாவரும் ஒரே காலத்தவ ரல்லர்; ஒரே மரபினர் அல்லர். பாடியவர்களுள் பெரும்பான்மையானவர் ஆண்பாற் புலவர்; சிறுபான்மையானவர் அரசர்களும் பெண்பாற் புலவர்களு மாவர்.

இந் நூலால், பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த சேர சோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், படைத் தலைவர்கள், வீரர்கள், கடையெழு வள்ளல்கள், கடைச் சங்கப் புலவர்கள் முதலியவர்களுடைய வரலாறுகளும், அக் காலத்து மக்களுடைய நடை உடை முதலியனவும், பிறவும் அறியலாம். இந்நூலின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

இங்கே பாடப் பகுதியாக வந்துள்ள பதினான்கு பாடல்களும் வேள் பாரியைப் பற்றியன. வேள் பாரியென்பான் கடையெழு வள்ளல்களுள் ஒருவன்; முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டிற்கும் பறம்பு மலைக்கும் தலைவன்; முல்லைக் கொடிக்குத் தேர் வழங்கிய பெருங்கொடையினன்; தன்னுடைய முந்நூறு ஊர்களையும் மற்றைய எல்லாப் பொருள்களையும் பரிசிலர்க்கு அளித்தவன்; மிக்க ஆற்றல் படைத்தவன்; சுந்தரரால், 'கொடுக்கி லாதானைப் பாரியே யென்று கூறி னுங்கொடுப் பாரிலை' என்று பாடப் பெற்றவன்.

முடிவேந்தர் மூவரும் இவனைப் போரில் வெல்லமாட்டாமல் வஞ்சித்துக் கொன்றனர். இவன் இறக்குங்கால், இவனுடைய உயிர்த் தோழராகிய புலவர் கபிலர் என்பாரும் இவனுடன் உயிர் துறக்க முற்பட்டார். ஆனால், இவன் அவரைத் தன்னோடு ஒருங்கு வரவிடாது, 'ஒழிக' எனக் கூற, பாரி, தன் மகளிரைக் காப்பாற்றும் பொருட்டே அங்ஙனம் கூறினான் என்று கருதிய கபிலர், அவன் மகளிர் இருவரையும், தம் இனத்தவரான பார்ப்பாரிடம் கொண்டு சேர்க்க அவரை அழைத்துக்கொண்டு புறப்பட்டார்; இடையில், விச்சிக் கோன், இருங்கோ வேள் இவர்களை யடைந்து பாரிமகளிரை மணந்துகொள்ளுமாறு வேண்ட, அவர்கள் மறுத்துவிட்டனர். 'பாரியை விட்டுப் பிரிந்திருக்கமாட்டாத கபிலர் அம் மகளிரைப் பார்ப்பாரிடம் விட்டுவிட்டு, வடக்கிருக்கச் சென்றுவிட்டார்; அவர்களை மலையமான் மணந்துகொண்டான்' என்பது ஒரு சாசனத்தால் அறியலாகின்றது. எனவே, பாரிமகளிரைப் பார்ப்பாருக்கு மணம் புரிவித்தார் கபிலர் என்பது பொருந்தாது.

இங்கு வந்துள்ள பாடல்களுள் ஒன்று, பாரிமகளிரே பாடியது; ஏனையவை, கபிலர் பாடியவை. கபிலர் பிறந்த ஊர் பாண்டி நாட்டிலுள்ள

திருவாதவூர் என்பர். இவர் அந்தண மரபினர்; வேள் பாரியின் உயிர் நண்பர். இவர் பாரியைப் பற்றிப் பாடியுள்ள பாடல்கள் படிப்பார் உள்ளத்தை உருக்குவன. இவர் காலத்துப் புலவருள், இவர் ஒப்புயர்வற்று விளங்கினர். குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறு நூற்றில் மூன்றும் நூறு, பதிற்றுப்பத்தில் எழாம் பத்து, குறிஞ்சிக்கலி, இன்னு நாற்பது, அகம் புறம் இவற்றில் தனிப்பாடல்கள் முதலியனவாக இவர் பாடியுள்ளன பலப்பல. பெருங்குன்றூர் கிழார், பொருந்தில் இளங்கீரனர், மாறோக்கத்து நப்பசலையார் முதலிய சங்க காலப் புலவர்கள், தங்கள் பாடல்களில் இவரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். பாடல்களின் சிறந்த தொடர்களால் பெயர் பெற்ற 'அணிலாடுமுன்றிலார்', 'தேய்புரி பழங்கயிற்றினர்' என்பவர்கள் போலவே, 'கபிலம்' என்ற சொல்லாட்சிச் சிறப்பினுல் கபிலர் என்ற பெயர் பெற்றுர் இவர் என்பது புறநானூறு 337-ஆம் பாடல் 11-ஆம் வரியால் விளங்கும்.

1 சேயிழை பெறுகுவை வாணுதல் விறலி
தடவுவாய்க் கலித்த மாயிதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினு மருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரு
நீரினு மினிய சாயற்
பாரி வேள்பாற் பாடினை செலினே.

திணை - பாடாண்டிணை ; துறை - விறலியாற்றுப்படை.
வேள் பாரியைக் கபிலர் பாடியது.

2 பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன் மொழி.
வேள் பாரியைக் கபிலர் பாடியது.

3 குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
யார மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்
பறம்பு பாடின ரதுவே யறம்பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னு னவர்வரை யன்னே.

திணை - பாடாண்டிணை ; துறை - இயன் மொழி.
வேள் பாரியைக் கபிலர் பாடியது.

4 அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே

நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே.

திணை - நொச்சி ; துறை - மகள்மறுத்தல்.

வேள் பாரியைக் கபிலர் பாடியது.

5 கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே.

திணை - நொச்சி ; துறை - மகள்மறுத்தல்.

மூவேந்தரும் பறம்பு முற்றியிருந்தாரைக் கபிலர் பாடியது.

6 அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையே மெங்குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே.

திணை - பொதுவியல் ; துறை - கையறுநிலை.

பாரிமகளிர் பாடியது.

7 மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவு
மட்டான் றூனுக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே.

திணை - பொதுவியல் ; துறை - கையறுநிலை.

பாரிமகளிரைப் பார்ப்பார்ப் படுக்கக் கொண்டுபோவான் பறம்பு விடுத்த கபிலர் பாடியது.

8 ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே.

திணை - பொதுவியல் ; துறை - கையறுநிலை.

பாரிமகளிரைக் கொண்டுபோம் கபிலர் பறம்பு நோக்கிநின்று சொல்லியது.

9 மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க
ணுமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்
பாசிலை முல்லை முகைக்கு
மாய்தொடி யரிவையர் தந்தை நாடே.

திணை - பொதுவியல் ; துறை - கையறு நிலை.

வேள் பாரியைக் கபிலர் பாடியது.

10 அறையும் பொறையு மணந்த தலைய
வெண்ணுட் டிங்க ளனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரிதண் பறம்பு நாடே.

திணை - பொதுவியல் ; துறை - கையறுநிலை.

வேள் பாரியைக் கபிலர் பாடியது.

11 கார்ப்பெய றலைஇய காண்பின் காலைக்
களிற்றுமுக வரியிற் றெறுழ்வீ பூப்பச்
செம்புற் றீயலி னின்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ
நிழலி னீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்து
மிரவலர்க் கீயும் வள்ளியோ னாடே.

திணை - பொதுவியல் ; துறை - கையறுநிலை.

வேள் பாரியைக் கபிலர் பாடியது.

12 பனிவரை நிவந்த பாசிலைப் பலவின்
கனிகவர்ந் துண்ட கருவிரற் கடுவன்
செம்முக மந்தியொடு சிறந்துசேண் விளங்கி
மழைமிசை யறியா மால்வரை யடுக்கத்துக்

கழைமிசைத் துஞ்சுங் கல்லக வெற்ப
நிணந்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேற்
களங்கொண்டு கனலுங் கடுங்கண் யானை
விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தண னீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுந
னினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்போ
ரடங்கா மன்னரை யடக்கு
மடங்கா விளையு ளுடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசிற்றுறை.

பாரிமகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

13 இவர்யா ரென்குவை யாயி னிவரே
யூருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமா
னெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளி
ரந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ண
லுரணி யானைச் சேட்டிருங் கோவே
யாண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
வொலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்
திருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வே
லுடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசிற்றுறை.

பாரிமகளிரை இருங்கோவேளுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

14 வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக்
கட்சி காணாக் கடமா நல்லேறு
கடறுமணி கிளரச் சிதறுபொன் மிளிரக்
கடிய கதழு நெடுவரைப் படப்பை

வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
யிருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
வொலியற் கண்ணிப் புலிகடி மாஅ
னும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
யிகழ்ந்ததன் பயனே யியறே ரண்ண
லெவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
றேற்ருப் புன்சொ னூேற்றிசிற் பெரும
விடுத்தனென் வெலீஇயர்நின் வேலே யடுக்கத்
தரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுக
லிரும்புலி வரிப்புறங் கடுக்கும்
பெருங்கல் வைப்பி னுடுகிழ வோயே.

திணை - பாடாண்டிணை ; துறை - பரிசிற்றுறை.

இருங்கோவேள் பாரிமகளிரைக் கொள்ளாஞகைக் கபிலர் பாடியது.

2

திருக்குறள்

திருக்குறள் என்பது அறிஞரால் விரும்பப்படும் தன்மை யுடையதாய்க் குறள் வெண்பாக்கள் ஆயிரத்து முந்நூற்று முப்பதால் ஆன ஒப்புயர்வற்ற ஒரு பெரு நூல். இந் நூல் — அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பகுப்புக்களையுடையது ; அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் பெற்று, முழுமையில் 133 அதிகாரங்களால் இலங்குவது. ஒவ்வோர் அதிகாரத் திலும் பத்துக் குறள் வெண்பாக்கள் உள்ளன. இங்கே பாடமாக வந்துள்ளவை அறத்துப்பாலில் 16 முதல் 20 வரையில் உள்ள அதிகாரங்கள் ஐந்தாகும்.

விழுமிய பெரு நூலாகத் திகழும் திருக்குறள், 'குறைந்த அடிகளையுடைய செய்யுள் தொகுதியால் அறம் பொருளின்பங்களை உணர்த்துவது கீழ்க் கணக்கு நூலாகும்' என்னும் இலக்கணத்தின் அமைதி பெற்றிருத்தல்பற்றி, நாலடி முதல் கைந்நிலை ஈருக எண்ணப்படும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருக வைத்து எண்ணப்படுவது ஆயிற்று. அவ் வரிசையில், முப்பால் என்று திருக்குறள் குறிக்கப்பட்டுள்ளது.

சங்க நூல்களுள் ஒன்ருகிய புறநானூற்றின் 34-ஆம் பாடலில், 'அறம் பாடிற்றே' என்பதால், ஆலத்தூர் கிழார், அறம் என்றே திருக்குறளைக் குறிக் கின்ருர். 'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம்'

என்று புறநானூறு 31-ஆம் பாடலில், முப்பொருளுள் அறத்தைச் சிறப்பாகக் கோவூர் கிழார் கூறியிருத்தல், திருக்குறளை ஆலத்தூர் கிழார் அறம் என்று கூறியதற்கு விளக்கம் அளிக்கும்.

சங்க நூல்களில் வரும் பல பாடல்கள் திருக்குறளின் பாடல்களையும், அடிக ளையும், கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளன. அவற்றிற்குப் பிறகு தோன்றிய நூல்களிலெல்லாம் திருக்குறளின் ஆட்சியைக் காணலாம். நம் நாட்டில் தமிழ் மொழியிலேமட்டு மல்லாமல் பிற மொழிகளிலும், அயல் நாட்டு ஆங்கிலம், ஜெர் மன், பிரெஞ்சு, இலத்தீன், கிரீக்கு மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க் கப்பட்டுள்ளது. எனவே, இஃது உலகப் பெரு நூல்களுள் ஒன்றும் என்பதில் எவருக்கும் கருத்து மாறுபாடு இராது. இப்போதுள்ள தமிழ் நூல்களுள் தலையாயதும் பழமையானதும் திருக்குறளேயாகும். உயிர்க்கு உறுதி தரும் நூல் இதுவாகும் என்பது, ‘நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி’ என்ற பழ மொழியால் விளங்கும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் பரிமேலழகர் எழுதிய உரை சிறந்ததாகும் என்பது அறிஞர் கருத்து.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். வள்ளுவர் என்ற பெயர் இவ ருக்குக் குலம் பற்றி வந்ததென்பர் ஒருசிலர். அரசர்க்குரிய கருமத் தலைவர் வள்ளுவர் எனப்படுவர் என்று கூறி, வள்ளுவர் என்ற பெயர் இவருக்குத் தொழில்பற்றி வந்ததென்பர் நாவலர் எஸ். எஸ். பாரதியார் அவர்கள். ‘திருநாள் படைநாள் கடிநாள் என்றிப் பெருநாட் கல்லது பிறநாட் கறையாச் செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்’ என்ற பெருங்கதை அடிகளாலும், ‘முரசுகடிப் பிகூஉம் முதுகுடிப் பிறந்தோன்’ என்ற மணிமேகலை அடியாலும், ‘வள்ளுவர் என்பார் தமிழ் நாட்டுப் பழங்குடியுள் ஒரு பகுதியினர்; அவர் அரசாது பட்டத்து யானையின்மேல் முரசேற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து திரு நாள் படைநாள் மணநாள் செய்திகளை மக்களுக்கு அறிவிப்பர்; அக் குடியைச் சார்ந்தவர் வள்ளுவர்’ என்பது தெளிவாகும். இவருடைய பிறப்பைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் பலப்பல கதைகள் வழங்குவன. அவை யாவும் உண்மையென்று கொள்ளத்தக்கன அல்ல. இவர் திருமயிலையில் பிறந்து வளர்ந்தனர் என்று கூறுபவர் ஆங்கு அவர் பெயரால் கோயிலொன்று இருத் தலைச் சான்ருகக் காட்டுவர். மதுரையில் தோன்றி வாழ்ந்தவர் என்று கூறு வாரும் உளர்.

இவர் வரலாறு யாதாயினும், இவர் உலகப் புலவருள் ஒருவர் என்ற மதிப்பைப் பெற்றுவிட்டார். ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்ருர் பாரதியார். ‘பொய்யில் புலவன்’ என்று பாராட்டினுர் மணிமேகலை ஆசிரியரான கூலவாணிகன் சாத்தனுர். முதற்பாவலர், செந்நாப் போதார், பெரு நாவலர், தேவர் என எத்தனையோ பெயர்கள் திருவள்ளுவர்க்கு வழங்குவன. இவையெல்லாம் இவருடைய ஒப்புயர்வற்ற பெருமையைக் காட்டும்.

சங்க நூல்களுக்கும் முற்பட்டது என்ற கருத்தே வலியுடையதாதலின் திருக்குறள், சங்கநூற் காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்ருண்டின் முற்பட்டது என்று கொள்ளுவதே சாலவும் பொருத்தமாகும்.

அறத்துப்பால்

இல்லறவியல்

1. பொறையுடைமை

1 அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

2 பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

3 இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

4 நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

5 ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

6 ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

7 திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.

8 மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்.

9 துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

10 உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

2. அழுக்காறாமை

1 ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

2 விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

3 அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

4 அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

5 அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

6 கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.

7 அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

8 அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

9 அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

10 அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

3. வெஃகாமை

1 நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

2 படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

3 சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

4 இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

5 அஃகி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

6 அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

7 வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

8 அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

9 அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.

10 இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.

4. புறங்கூறாமை

1 அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

2 அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

3 புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங் கூறு மாக்கந் தரும்.

4 கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

5 அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

6 பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

7 பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

8 துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

9 அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

10 ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

5. பயனில சொல்லாமை

1 பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

2 பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

3 நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

4 நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

5 சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

6 பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

7 நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

8 அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

9 பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

10 சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

3

மணிமேகலை

அமிழ்தினும் இனிய தமிழ் நூற்றொகையுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என ஒருங்கெண்ணப்பட்ட ஐம்பெருங் காப்பியங்களுள் இரண்டாவதாகத் திகழ்வது **மணிமேகலை**யாகும். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் ஒன்று சேர்த்து, அவற்றை இரட்டைக் காப்பியங்கள் என வழங்கும் வழக்கம் உண்டு.

மணிமேகலையின் வரலாற்றைக் கூறுவதால் இந் நூற்கு மணிமேகலை என்ற பெயர் ஏற்படுவதாயிற்று. இந் நூலின் பதிகத்தில், இதன் பெயர் "மணிமேகலை துறவு" என்றே காணப்படுகின்றது. சிலப்பதிகாரக் காவியத் தலைவனாகிய கோவலனுக்கு, மாதவி என்ற ஆடல் நங்கையிடம் பிறந்த மணிமேகலை, தன் தந்தை இறந்தபின், இளம் பருவத்திலேயே, தன் மரபிற்கு இயற்கையல்லாத **துறவு** நெறியை மேற்கொண்டு, பிறப்பறுத்தற்கு உரிய தவத்தில் தலைப்பட்டொழுகிய நிகழ்ச்சியைக் கூறுவதால், ''மணிமேகலை துறவு" என்பதே இதற்குப் பொருத்தமான பெயராகும்.

இந் நூல், காப்பியச் சுவைகள் நிரம்பப் பெற்று, எளிய இனிய தமிழ் நடையால், கற்பார் உள்ளத்தை அள்ளிக்கொள்ளும் தன்மை வாய்ந்துள்ளது. பண்டைத் தமிழ் மக்களுடைய பழக்க வழக்கங்கள், பலப்பல சமயக் கொள்கைகள், பௌத்த சமயத்தின் சிறப்புக்கள் முதலியன இந் நூலால் விரித்துரைக்கப் பட்டுள்ளன. இதன்கண் உள்ள காதைகள் முப்பது. காதை என்பது கதை பொதி பாட்டு எனப்படும்.

மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவர் இந் நூலின் ஆசிரியர். இவர் பெயரில் வரும் சீத்தலை என்பதுபற்றிக் கருத்து வேறுபாடுகளும் பூசல்களும் உண்டு. தொல்காப்பிய உரையாசிரியர்கள் 'சீத்தலைச் சாத்தனார்' என்ற தொடரை, அடையடுத்த சினைமுதற் பெயருக்கு எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளனர். அரங்கேற்றுவித்தற் பொருட்டு வரும் நூல்களில் பிழைகாணுந் தோறும் மனம் பொறாமல், சாத்தனார், தம் கை எழுத்தாணியால் தலையில் குத்திக்கொள்வர் என்றும், அதனால் அவர் தலையிற் சீப் பிடித்துவிட்டது என்றும், என்றும் நீங்காமல் அவர் தலையில் சீ இருந்ததுபற்றிச் சீத்தலைச் சாத்தனார் என்றே அழைக்கப்பெற்றார் என்றும், பின்னர்த் திருக்குறளைக் கேட்டதும் தலைக்குத்துத் தீர்ந்தது என்றும் வழங்குவர். இவ் வரலாற்றிற்குச் சான்றாகத் "தலைக் குத்துத் தீர்வு சாத்தற்கு" என்னும் திருவள்ளுவமாலைப் பாட்டடியைக் காட்டுவர். இவ் வரலாறு அறிவொடு பொருந்திய தொன்றாகக் கொள்ளுமாறில்லை.

சீத்தலை என்ற ஓரூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ளது. அவ் வூரில் வணிக மரபில் தோன்றிய சாத்தனார், மதுரைக்கு வந்து, அவரை துவரை முதலான கூலப் பொருள் வாணிகம் செய்து வாழ்ந்து வந்ததனால், 'மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார்' என்று வழங்கப்பெற்றார் என்பது இன்றைய ஆராய்ச்சியாளர் முடிபாகும். பழைய உரையாசிரியர்கள் காலம், சாத்தனார் காலத்திற்கு அண்மையது ஆதலால், அவர்கள் உரையை அடியோடு தள்ளிவிடுவதற்கில்லை. எனவே, சீத்தலை என்பது மேலும் சிந்திப்பதற்குரிய சொல்லாகவே உள்ளது என்னலாம்.

'மணிமேகலை' பாடியவர், **மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்** என்றே, மணிமேகலை, சிலப்பதிகாரம் இரண்டன் பதிகங்களாலும் தெரிவதால், இவர் வேறு, **சீத்தலைச் சாத்தனார்** வேறு என்பூ.

சாத்தனார், கடைச் சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர் என்ப. 'தண்டமிழாசான் சாத்தன்' என்றும், 'நன்னூற் புலவன்' என்றும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இவரைப் புகழ்வதிலிருந்து இவர் பெருமை நன்கு புலனாகும். இளங்கோவடிகள், சேரன் செங்குட்டுவன் தம்பியார். செங்குட்டுவன் காலத்தவனான இலங்கைக் கயவாகு, இலங்கை வரலாறு கூறும் மகா வமிசத்தால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டினன் என்று கருதப்பெறுகின்றான். எனவே, சாத்தனார் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனக் கொள்வதே தக்கதாகும்.

இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் ஒன்றும், அகநானூற்றில் ஐந்தும், புறநானூற்றில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாகப் பதினொரு பாடல்கள் உள்ளன.

மலர்வனம் புக்க காதை :—மணிமேகலை, மலர் கொய்யும் பொருட்டுப் பூஞ் சோலையாகிய உவவனத்திற்குள் புகுந்த வரலாற்றைக் கூறும் பகுதியே மலர் வனம் புக்க காதையாகும். இது மணிமேகலையின் மூன்றாங் காதையாகும்.

"தன் தந்தை கோவலனுக்கும் தாய் கண்ணகிக்கும் நேர்ந்த கொடுந் துன்பத்தை, மாதவி உரை வழியாக எண்ணிய மணிமேகலை, கண்ணீரால், தான் தொடுக்கும் மாலையை நனைக்கலானாள். அதுகண்ட மாதவி, மாலை தூய தன்மை இழந்ததெனச் சுட்டி, வேறு மாலை தொடுத்தற்கு, மணிமேகலையிடம், மலர் பறித்து வரும்படி கூறினாள். அதுகேட்ட சுதமதி, மகளிர் தமியராகச் சென்றால் வருந் துன்பத்தைத் தன் வரலாறு மூலமாக எடுத்துக் காட்டித் தானும் அவளுடன் செல்வதாகச் சொல்லிப் பின் ஐவகை வனங்களின் இயல்பைக் கூறி, அவற்றுள் உவவனமே மலர் பறித்தற்கு உரிய வனம் என்றாள். அதன்பின், சுதமதியும் மணிமேகலையும் மலர் பறித்துவரப் புறப்பட்டனர். இருவரும் போகும்போது, களிமகன் பின்செல்வோரும், பித்தனைக் கண்டு வருந்தி நிற்போரும், பேடு என்னும் கூத்தினைக் கண்டு நிற்போரும், ஓவியங் கண்டு நிற்போரும், தேரூரும் சிறுவர்களைக் கண்டு நிற்போரும் ஆகிய பல குழுவினரும் ஒருசேர மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டு, அவள் நிலைகண்டு, அவள் தாயைக் கடிந்தும் அவளழகைப் பாராட்டியும் நின்றனர். மணிமேகலை சுதமதியுடன் மலர் வனம் புக்காள்" என்ற செய்தி இக் காதையில் விரித்துக் கூறப்படும். இதில் ஐவனங்களின் இயல்பும், களிமகன் பித்தன் இவர்கள் இயல்பும், உவவனத்தின் இயல்பும் கூறியுள்ள திறம் படித்து இன்புறற்பாலது.

மலர்வனம் புக்க காதை

மணிமேகலை வருந்துதலும் மலர் பறித்துவருமாறு அவளை மாதவி ஏவுதலும்

வயந்த மாலைக்கு மாதவி யுரைத்த
வுயங்குநோய் வருத்தத் துரைமுன் றோன்றி
மாமலர் நாற்றம் போன்மணி மேகலைக்
கேது நிகழ்ச்சி யெதிர்ந்துள தாதலிற்
றந்தையுந் தாயுந் தாநனி யுழந்த

வெந்துய ரிடும்பை செவியகம் வெதுப்பக்
காத னெஞ்சங் கலங்கிக் காரிகை
மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
புலம்புநீ ருருட்டிப் பொதியவிழ் நறுமல
ரிலங்கிதழ் மாலையை யிட்டுநீ ராட்ட
மாதவி மணிமே கலைமுக நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை யிழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வா யென்றலும்

மணிமேகலையைக் கண்டால் ஆடவர் அகலார் எனச் சுதமதி கூறல்

மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்குஞ்
சுதமதி கேட்டுத் துயரொடுங் கூறுங்
குரவர்க் குற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பந் தலைத்தலை யெய்து
மணிமே கலைதன் மதிமுகந் தன்னு
ளணிதிகழ் நீலத் தாய்மல ரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
யாடவர் கண்டா லகறலு முண்டோ
பேடிய ரன்றோ பெற்றியி னின்றிடின்

சுதமதி, தனியே சென்ற தனக்கு நேர்ந்த துன்பநிகழ்ச்சி கூறி, மணிமேகலையைத் தனியே அனுப்பலாகா தெனல்

ஆங்கன மன்றியு மணியிழை கேளா
யீங்கிந் நகரத் தியான்வருங் காரணம்
பாரா வாரம் பல்வளம் பழுநிய
காராளர் சண்பையிற் கௌசிக னென்போ
னிருபிறப் பாள னொருமக ளுள்ளே
னொருதனி யஞ்சே னேரா நெஞ்சமோ
டாரா மத்திடை யலர்கொய் வேன்றனை
மாருத வேகனென் பானோர் விஞ்சையன்
றிருவிழை மூதூர் தேவர்கோற் கெடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
றூரன் மாலையன் றமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமைய
னெடுத்தன னெற்கொண் டெழுந்தனன் விசும்பிற்
படுத்தன னாங்கவன் பான்மையே னாயினே
னாங்கவ னீங்கெனை யகன்றுகண் மாறி
நீங்கினன் றன்பதி நெட்டிடை யாயினு
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
றனித்தலர் கொய்யுந் தகைமைய ளல்லள்

சுதமதி மலர்வனங்கள் ஐந்தன் இயல்பு கூறல்

பன்மல ரடுக்கிய நன்மரப் பூந்த
ரி**லவந் திகை**யி னெயிற்புறம் போகி
னுலக மன்னவ னுழையோ ராங்குளர்
விண்ணவர் கோமான் விழாக்கொ ணன்னுண்
மண்ணவர் விழையார் வானவ ரல்லது
பாடுவண் டிமிரா பன்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைக டுக்கலிற்
கைபெய் பாசத்துப் பூதங் காக்குமென்
றுய்யா னத்திடை யுணர்ந்தோர் செல்லார்
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த
சம்பாதி யிருந்த **சம்பாதி** வனமுந்
தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை
கவேரனுங் கிருந்த **கவேர வன**மு
மூப்புடை முதுமைய தாக்கணங் குடைய
யாப்புடைத் தாக வறிந்தோ ரெய்தா
ரருளு மன்பு மாருயி ரோம்பு
மொருபெரும் பூட்கையு மொழியா நோன்பிற்
பகவன தாணையிற் பன்மரம் பூக்கும்
உவவன மென்பதொன் றுண்டத னுள்ளது
விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்
பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடி
னரும்பவிழ் செய்யு மலர்ந்தன வாடா
சுரும்பின மூசா தொல்யாண்டு கழியினு
மறந்தே னதன்றிற மாதவி கேளாய்
கடம்பூண் டோர்தெய்வங் கருத்திடை வைத்தோ
ராங்கவ ரடிக்கிடி னவரடி தானுறு
நீங்கா தியாங்கணு நினைப்பில ராயிடி
னீங்கிதன் காரண மென்னை யென்றியேற்
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமெனும்
வெந்திற னோன்பிகள் விழுமங் கொள்ளவுஞ்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவது
மெய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபின ததுதான்

உவவனமே மணிமேகலை மலர்பறிக்கச் செல்வதற்குரியதெனக் கூறிச் சுதமதியும் அவளுடன் செல்லுதல்

அவ்வன மல்ல தணியிழை நின்மகள்
செவ்வனஞ் செல்லுஞ் செம்மை தானிலண்
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
வணியிழை நல்லா யானும் போவலென்

றணிப்பூங் கொம்ப ரவளொடுங் கூடி
மணித்தேர் வீதியிற் சுதமதி செல்வுழீஇ,

ஐவகைக் காட்சிகளும் அவற்றைக் காண்போரும்

சிமிலிக் கரண்டைய னுழைகோற் பிரம்பினன்
றவலருஞ் சிறப்பி னராந்தா ணத்துளோ
னூணமு முடையு நன்கன நீத்துக்
காணா வுயிர்க்குங் கையற் றேங்கி
யுண்ணா நோன்பொ டுயவ லியானையின்
மண்ணா மேனியன் வருவோன் றன்னை
வந்தீ ரடிகளும் மலரடி தொழுதே
னெந்த மடிக ளெம்முரை கேண்மோ
வழுக்குடை யாக்கையிற் புகுந்த நும்முயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுளம் வருந்தா
திம்மையு மறுமையு மிறுதியி லின்பமுந்
தன்வயிற் றரூஉமென் றலைமக னுரைத்தது
கொலையு முண்டோ கொழுமடற் றெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
யுண்டு தெளிந்திவ் யோகத் துறுபயன்
கண்டா லெம்மையுங் கையுதிர்க் கொண்மென
வுண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்
றுண்மென விரக்குமோர் **களிமகன்** பின்னரும்
கணவிர மாலையிற் கட்டிய திரள்புயன்
குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்
சிதவற் றுணியொடு சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ் பொடித்துக் கட்டிய வுடையினன்
வெண்பலி சாந்த மெய்ம்முழு துறீஇப்
பண்பில் கிளவி பலரொடு முரைத்தாங்
கழூஉம் விழூஉ மரற்றுங் கூஉந்
தொழூஉ மெழூஉஞ் சுழலலுஞ் சுழலு
மோடலு மோடு மொருசிறை யொதுங்கி
நீடலு நீடு நிழலொடு மறலு
மைய லுற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பங் கண்டுநிற் குநருஞ்
சுரியற் றாடி மருள்படு பூங்குழற்
பவளச் செவ்வாய்த் தவள வாணகை
யொள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் டோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதற்
காந்தளஞ் செங்கை . . . .
. . . . அந்நுண் மருங்கு
லிகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீணில மளந்தோன் மகன்முன் னாடிய
பேடிக் கோலத்துப் **பேடு**காண் குநரும்

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடும ணோங்கிய நெடுநிலை மனைதொறு
மையறு படிவத்து வானவர் முதலா
வெவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ **ரோவியங்** கண்டுநிற் குநரும்
விழவாற்றுப் படுத்த கழிபெரு வீதியிற்
பொன்னாண் கோத்த நன்மணிக் கோவை
யையவி யப்பிய நெய்யணி முச்சி
மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறு மழலை
சிந்துபு சின்னீ ரைம்படை நனைப்ப
வற்றங் காவாச் சுற்றுடைப் பூந்துகி
றொடுத்தமணிக் கோவை யுடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூட் **புதல்வரைப்**
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்
திலங்குதொடி நல்லார் சிலர்நின் றேற்றி
யாலமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோவெனக் கண்டுநிற் குநரும்

அவர்கள் மணிமேகலையைக் கண்டதும் அவளைச் சூழ்ந்துகொண்டு இரக்கவுரை கூறி வருந்துதல்

விராடன் பேரூர் விசயனும் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறஞ் சுற்றி
யணியமை தோற்றத் தருந்தவப் படுத்திய
தாயோ கொடிய டகவில ளீங்கிவண்
மாமலர் கொய்ய மலர்வனந் தான்புகி
னல்லிள வன்ன நாணு தாங்குள
வல்லுந கொல்லோ மடந்தை தன்னடை
மாமயி லாங்குள வந்துமுன் னிற்பன
சாயல்கற் பனகொலோ தைய றன்னுடன்
பைங்கிளி தாமுள பாவைதன் கிளவிக்
கெஞ்சல கொல்லோ விசையுந வல்ல
வென்றிவை சொல்லி யாவரு மிணைந்துக,

உவவனத்திற்குள் மணிமேகலை சுதமதியொடு மலர்கொய்யப் புகுதல்

செந்தளிர்ச் சேவடி நிலம்வடு வுறுமற்
குரவமு மரவமுங் குருந்துங் கொன்றையுந்
திலகமும் வகுளமுஞ் செங்கால் வெட்சியு
நரந்தமு நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமு முடமுட் டாழையுங்

குடசமும் வெதிரமுங் கொழுங்கா லசோகமுஞ்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமு
மெரிமல ரிலவமும் விரிமலர் பரப்பி
வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
யொப்பத் தோன்றிய **வுவவனந்** தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலையென்.

4

கம்ப ராமாயணம்

கம்பராமாயணம் என்பது கம்பரது இராமாயணம் அல்லது கம்பரால் பாடப் பட்ட இராமாயணம் எனப் பொருள் படும். வடமொழியில் ஆதி காவியம் என்று வழங்கப்படுவதும், வான்மீகியால் இயற்றப்பெற் றுள்ளதுமாகிய இரா மாயணத்தை முதல் நூலாகக் கொண்டு கம்பர் தமிழில் பாடினார் என்பர்.

ராம :, அயநம் என்ற சொற்கள் வடமொழி இலக்கண விதிப்படி ராமாயணம் என்ற சொற்றொடர் ஆயின. இத் தொடர் 'இராமனை அறிதற்கு இடனாயுள்ளது', 'இராமனைப் பொருளாகக் கொண்ட நூல்', 'இராமனது செலவு', 'இராமனது கதை', 'இராமனது அவதார நிகழ்ச்சி' எனப் பல பொருள் படும். இனி, இத்தொட ரையே ராமா, அயநம் எனப்பிரித்துச் சிறையிருந்த சீதையின் ஏற்றம் கூறுவது என்று பொருள் கூறுவாரும் உளர், ' ராம :' என்பதற்குப் பெண்பால் ' ராமா ' என்பது ஆதலால்.

வான்மீகி ராமாயணத்தோடு, சங்கச் செய்யுட்களில் சிலவிடத்தும், திவ் வியப் பிரபந்தங்களில் பலவிடத்தும் வந்துள்ள இராமனைப் பற்றிய செய்திகளையும் அறிந்து, தமிழ் வழக்கிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப, வான்மீகி ராமாயண கதைப் பகுதிகளுள் பலவற்றை மாற்றியும், சிலவற்றை விரித்தும், சில செய்தி களை அடியோடு விடுத்தும் கம்பர் தமது காவியத்தை அமைத்துள்ளார். கதை யும், காலமும், இடமும் ஒழிந்த ஏனையவெல்லாம் தமிழகச் செய்திகளாகவே கம்பராமாயணத்தில் தோற்றம் அளிக்கின்றன. இராம கதையின் தலைமக்க ளுடைய பண்பு நலன்களெல்லாம் தமிழ் நாட்டுத் தலைமக்களின் பண்பு நலன்க ளாகவே உள்ளன. வடநாட்டுக் கங்கை, தமிழ் நாட்டுக் காவிரியாகத்தான் காட்சியளிக்கின்றது. கோசலநாடு, தமிழகச் சோழ நாடாகத்தான் எழுந்து தோன்றுகின்றது. தமிழ் நாட்டுச் சடையன் மரபினர் எடுத்துக் கொடுத்த முடியைத்தான், வசிட்டன் வடநாட்டு அரசன் தலையில் சூட்டிப் பெருமை யடையச் செய்திருக்கிறான். தமிழ் நாட்டுப் பற்றும், தமிழ் மொழிப் பற்றும் மிகுதியாக வுடைய கம்பர், தம் காவியத்தைப் படிப்பார்க்கு அப் பற்றுக்கள் நன்கு வேர் கொள்ளவேண்டும் என்ற கருத்தோடேயே இயற்றியுள்ளார் என்பது ஊன்றிப் படிப்பார்க்குத் தெளிவாக விளங்கும். பண்டைத் தமி ழிலக்கியங்களில் வந் துள்ள சிறந்த சொற்களையும், சொற்றொடர்களையும், கருத்துக்களையும், பொருள்

களையும் தக்க இடங்களில் கண்ணுங் கருத்துங் கொண்டு அமைத்து, அவற்றைச் சாணையில் தீட்டிய மணிகளென மிளிரவைத்துள்ளார் கம்பர். எனவே, இவருடைய பாட்டில் திளைப்பவர்க்கு அமிழ்தமும் கைக்கும் என்பது மிகையாகாது.

பல மொழிகளில் உள்ள பெருங் காப்பியங்களை ஆராய்ந்தவர்கள் கம்ப ராமாயணத்தைப் பயின்று, அதன் ஆசிரியராகிய கம்பர், உலகப் பெருங் கவிகள் என்று மதிக்கத்தக்கவர்களுள் ஒருவராகப் போற்றுதற்கு உரியவர் என்று முடிவு செய்திருக்கின்றனர்.

கம்பராமாயணத்தால் உலகப் பெருங் கவிகளுள் ஒருவராகத் திகழும் கம்பரது, வரலாறு முழுதும் நன்கு தெரியவில்லை. அவருடைய பெயர்க்காரணம், மரபு, காலம் முதலியவற்றில் கருத்து வேற்றுமைகள் பல உள்ளன.

கம்பர் சோழ மண்டலத்திலுள்ள திருவழுந்தூரில் பிறந்து வாழ்ந்தவர். அவர் தந்தையார் பெயர் ஆதித்தர். பெருஞ் செல்வரும் வள்ளலுமாக அக் காலத்தில் வெண்ணெய்நல்லூரில் விளங்கிய சடையப்ப முதலியாரிடம் உணவு உடை உறையுள் முதலியன பெற்றுக் கல்வி கற்றுப் புலமை முற்றிக் கம்பர் சிறப்பெய்தினர் : இவ்வளவும் அவரைப்பற்றிய உண்மைச் செய்திகள்.

கம்பர் உவச்சர் குலத்தில் பிறந்தவர் என்று சிலரும், அரசர் குலத்தில் தோன்றினவர் என்று சிலரும் கூறுவர். திருமணம் - செல்வக் கேசவராய முதலியார், அவர் வேளாள மரபினராயிருக்கலாம் என்று சில சான்றுகள் காட்டிக் கூறியுள்ளார்.

கம்பர் என்னும் பெயர், காஞ்சிபுரம் சிவபெருமானுடைய பெயராகிய ஏகம்பர் என்பதனுடைய முதற் குறை என்பாரும், கம்பங் கொல்லையைக் காத்தமையாற் பெற்ற பெயரென்பாரும், கம்பநா டுடைமைபற்றி வந்த பெய ரென்பாரும், இவர் பிறந்த மரபினராகிய காளி கோயிற் பூசனை புரியும் உவச்சர்கட்கு வழங்குவதொரு குடிப் பெயரென்பாருமாய்ப் பெயர்க் காரணம் கூறுவோர் பல திறத்தினர் ஆவர். இவ்வாறு காரணம் பற்றி வந்ததன்றி, அக் காலத்தில் கம்பர் என்ற பெயர் சிலர்க்கு வழங்கிவந்தமை கல்வெட்டுக்களால் அறியப்படுவதால், கம்பர் என்பது **இயற் பெயரே** என்று கொள்வது பொருத்த மாகும்.

'கல்வியிற் பெரியன் கம்பன்,' 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்,' 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்', 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்' என்ற புகழுரைகள் கம்பருடைய கல்விப் புலமையின் சிறப்பையும், கவி பாடும் திறத்தையும் நன்கு விளக்குவனவாகும்.

தொல்காப்பியம், சங்கச் செய்யுட்கள், ஆழ்வார் பாசுரங்கள், சிந்தாமணி முதலியவற்றில் கம்பர் மிக்க பயிற்சியுடையவர் என்பதைக் கம்பராமாயணம் உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டும்.

ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி முதலியன கம்பர் இயற்றிய பிற நூல்கள்.

ஏரெழுபதில் பிள்ளையார் வணக்கம் செய்திருப்பதனாலும், காஞ்சிபுரம் ஏகாம் பர நாதரது பெயரைத் தாம் ஏற்றிருப்பதனாலும், தம்முடைய மகனுக்கு அம்பிகா பதி என்று பெயரிட்டிருப்பதனாலும் கம்பரைச் சைவ மரபினரென்று சிலர் கூறுவர். இராமாயணத்தையும் சடகோபர் அந்தாதியையும் பாடியிருப்பது கொண்டு அவரை வைணவ மரபின ரென்பார் சிலர்.

ஆசிரியர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களை உள்ளிட்ட சிலர், கம்பரை ஒன்பதாம் நூற்றுண்டில் இருந்தவர் என்றும், வேறு சிலர் பன்னிரண்டாம் நூற்றுண்டில் இருந்தவர் என்றும் கூறுவர்.

கம்பர், நன்றி மறவாத நற் பண்பினர். தம்மை ஆதரித்த சடையப்ப முதலியாரைக் கம்பராமாயணத்தில் அவர் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

தாம் இயற்றிய காவியத்திற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் என்பதே.

கம்பராமாயணத்தில் உள்ள ஏழு காண்டங்களுள் முதல் ஆறு காண்டங்களே கம்பரால் இயற்றப்பெற்றவை. ஏழாங் காண்டமாகிய உத்தர காண்டம் இயற்றிய வர் ஒட்டக்கூத்தரென்று சிலரும், வாணிதாதரென்று சிலரும் கூறுவர்.

அயோத்தியா காண்டம் :— அயோத்தியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும் பெரும் பகுதியே அயோத்தியா காண்டம் எனப்படும். பால காண்டத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் அயோத்தியிலேயே நிகழ்ந்தன எனினும், இக் காண் டத்தில் கூறப்படும் நிகழ்ச்சியே இராம கதை தோன்றுவதற்குச் சிறந்த காரண மாவதால், சிறப்புப்பற்றி இக் காண்டம் அயோத்தியா காண்டம் என்று வழங்கப் பட்டது. கூனியின் சூழ்ச்சியினுல், கைகேயி, தன் மனம் மாறுபட்டு இராமனைக் காட்டிற்கு அனுப்ப, அதுவே இராவணனைக் கொல்வதற்கு அடிப்படையாகி இராம கதை தோன்றுவதற்கும் காரணமாயினமை காண்க. அயோத்தியா காண்டம் இராமாயணத்தின் இரண்டாங் காண்டமாகும்.

கைகேசி சூழ்வினைப் படலம் :— மந்தரையால் மனம் கலைக்கப்பட்டு மாறு பாடுற்ற கைகேயி, இராமபிரானுடைய முடிசூட்டு விழாவிற்கு இடையூறு செய்யச் சூழ்ந்த தீய செயலைக் கூறும் பகுதி என்பது இதன் பொருள். இஃது அயோத்தியா காண்டத்தின் மூன்றும் படலமாகும். படலம்—சிறு பிரிவு. கைகேசி என்பது கைகேயி என்பதன் திரிபாகும். கைகேயி என்பாள் கேகய நாட்டு அரசன் மகள்.

அயோத்தியா காண்டம்

கைகேசி சூழ்வினைப் படலம்

தசரதன் கைகேயியை அணுகி அவளைத் தன் கைகளால் எடுக்க முயலுதல்

1 நாழிகை கங்குலி னள்ள டைந்த பின்றை
யாழிசை யஞ்சிய வஞ்சொ லேழை கோயில்
வாழிய வென்றயின் மன்னர் துன்ன வந்தா
ழிநெ டுங்கைம டங்க லாளி யண்ணுன்.

2 வாயிலின் மன்னர்வ ணங்கி நிற்ப வந்தாங்
கேயின செய்யும டந்தை மாரொ டேகிப்
பாயறு றந்தப டைத்த டங்கண் மென்ருே
ளாயிழை தன்னைய டைந்த வாழி மன்னன்.

3 அடைந்தவ ணேக்கிய ரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்ததெ னத்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை மானையெ டுக்கு மானை யேபோற்
றடங்கைகள் கொண்டுத ழீஇயெ டுக்க லுற்றுன்.

தசரதன் கைகளைத் தள்ளிக் கைகேயி தரையில் விழுந்து நெட்டுயிர்த்தல்

4 நின்றுதொ டர்ந்தநெ டுங்கை தம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தா
ளொன்றுமி யம்பல ணீடு யிர்க்க லுற்றுண்
மன்றல ருந்தொடை மன்ன னுவி யன்னாள்.

நிகழ்ந்ததைக் கூறுமாறு தசரதன் கைகேயியைக் கேட்டல்

5 அன்னது கண்டவ லங்கன் மன்ன னஞ்சி
யென்னைநி கழ்ந்ததிஞ் ஞால மேழில் வாழ்வா
ருன்னையி கழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாஞ்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி டென்றான்.

பண்டு தர இயைந்தவற்றைத் தருமாறு கைகேயி கேட்க, அவள் யாது வேண்டினும் தருவதாகத் தசரதன் ஆணையிடல்

6 கள்ளவிழ் கோதைக ருத்து ணர்ந்த மன்னன்
வெள்ளநெ டுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கா
னுள்ளமு வந்தது செய்வ னென்று முலோபேன்
வள்ளலி ராமனுன் மைந்த னாணை யென்றான்.

முன் ஈய இயைந்த வரங்கள் இரண்டையும் ஈயுமாறு தசரதனைக் கைகேயி கேட்டல்

7 ஆன்றவ னவ்வுரை கூற வன்ன மன்னு
போன்றிய பேரவ லந்து டைத்த லுண்டேற்
சான்றிமை யோர்குல மாக மன்ன நீயன்
றேன்றவ ரங்களி ரண்டு மீதி யென்றாள்.

வரங்கள் இவையென உணர்த்தின் அவற்றைத் தருவதாகத் தசரதன் கூறல்

8 வரங்கொள வித்துணை மம்ம ரல்ல லெய்தி
யிரங்கிட வேண்டுவ தில்லை யீவ னென்பாற்
பரங்கெட விப்பொழு தேப கர்ந்தி டென்றா
னுரங்கொண்ம னத்தவள் வஞ்ச மோர்கி லாதான்.

கைகேயி கேட்ட இரண்டு வரங்கள்

9 ஏயவ ரங்களி ரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றாற்
போய்வன மாள்வதெ னப்பு கன்று நின்றா
டீயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள்.

தசரதன் வருத்தம்

10 நாகமெ னுங்கொடி யாட னுவின் வந்த
சோகவி டந்தொட ரத்து னுக்க மெய்தா
வாகம டங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேகம டங்கிய வேழ மென்ன வீழ்ந்தான்.

11 பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்து வெந்து கொல்ல
னூதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான்.

12 உலர்ந்தது நாவுயி ரோட ஓுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள்பொ டித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தெண்கொ லென்றென்
றலந்தலை யுற்றவ ரும்பு லன்க ளைந்தும்.

13 மேவிநி லத்திலி ருக்கும் விம்மும் வீழு
மோவிய மொப்பவு யிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற வெண்ணு
மாவிப தைப்பவ லக்க ணெய்தி நின்றான்.

14 பெண்ணெனை வுற்றபெ ரும்ப ழிக்கு நாணு
முண்ணிறை வெப்பொடு யிர்த்து யிர்த்து லாவுங்
கண்ணில ஞெப்பவ யர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்கவு ழைக்கு மானை போல்வான்.

தசரதன் வருத்தங்கண்டு யாவரும் நிலைகலங்கக் கைகேயிமட்டும் வன்னெஞ்சளா யிருத்தல்

15 கம்பநெ டுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பிவி ழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர்ந டுங்கின ரூழி பேர்வ தொத்த
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தேயால்.

16 அஞ்சல லையன தல்லல் கண்டு முள்ள
நஞ்சில ஞணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டும டந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர்.

மனம் மாறுபடக் காரணம் யாதெனக் கைகேயியைத் தசரதன் வினுதல்

17 இந்நிலை நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதி சைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள்பு ணர்த்த வஞ்ச முண்டோ
வந்நிலை சொல்லென தானை யுண்மை யென்றான்.

‘ வரந் தர மறுப்பின் மாண்டுபோவேன் ’ எனக் கைகேயி கூறல்

18 திசைத்தது மில்லையெ னக்கு வந்து தீயோ
ரிசைத்தது மில்லைமு னீந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வெ னன்றேல்
வசைத்திறன் நின்வயி னிற்க மாள்வெ னென்றாள்.

கைகேயியின் கடுமொழி கேட்ட தசரதன் திகைப்பும் சோர்வும்

19 இந்தநெ டுஞ்சொலவ் வேழை கூறு முன்னே
வெந்தகொ டும்புணில் வேனு ழைந்த தொப்பச்
சிந்தைதி ரிந்துதி கைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்தன லாதுயிர் வேறி லாத மன்னன்.

20 ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
வோகொடி தேயற மென்னு முண்மை யொன்றுஞ்
சாகவெ ஞுவெழு மெய்த ளாடி வீழு
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்.

21 நாரிய ரில்லையிஞ் ஞால மெங்கு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வ னென்று பொங்கும்
வீரியர் வீரம்வி ழுங்கி நின்ற வேலான்.

22 கையொடு கைகள்பு டைக்கும் வாய்க டிக்கு
மெய்யுரை குற்றமெ னப்பு ழுங்கி விம்மு
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்றுந டந்த வாய்மை மன்னன்.

கைகேயி காலில் தசரதன் விழுந்து வருந்தி வேண்டுதல்

23 ஒறுப்பினு மந்தர முண்மை யொன்று மோவா
விறுப்பினு மந்தர மென்று வாய்மை மன்னன்
பொறுப்பினு மிந்நிலை போகி லாளை வாளா
லிறுப்பினு மாவதி ரப்ப தென்றெ ழுந்தான்.

24 கோன்மேற் கொண்டுங் குற்றம கற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனி னன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்திவ ணங்கி மிடைதாளான்.

25 கொள்ளா ஙின்சே யிவ்வர சன்னுன் கொண்டாலு
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்று
முள்ளா ரெல்லா மோதவு வக்கும் புகழ் கொள்ளா
யெள்ளா நிற்கும் வன்பழி கொண்டென் பயனென்ருன்.

26 வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றெ
னேனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வா
யானே சொல்லக் கொள்ளவி சைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்ருன்.

27 கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
னுண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றே
பெண்ணே வண்மைக் கைகயன் மானே பெறுவாயேன்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்ருன்.

28 வாய்தந் தேனென் றேனினி யானே வதுமாற்றே
னேய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னையி ரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தியு நீயிது தந்தாற் பிழை யாமோ.

கைகேயி இரங்காது தசரதனை இழித்துக் கூறுதல்

29 இன்னே யின்னே பன்னியி ரந்தா னிகல்வேந்தன்
றன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாறாண்
முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயே
லென்னே மன்னு யாருளர் வாய்மைக் கினியென்றாள்.

தசரதன் மூர்ச்சித்துப் பின் தெளிந்து, 'இராமனைமட்டும் நாடு இறவாமை நய' எனக் கைகேயியை வேண்டுதல்

30 அச்சொற் கேளா வாவிபு ழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றே வெனநாணு
முச்சற் றார்போற் பின்னுமி ரந்தே மொழிகின்றான்.

31 நின்மக னாள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லா
முன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றே
னென்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கு
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்றான்.

32 மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னுவுமு லர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானே
லுய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

தந்த வரத்தைத் தவிருமாறு கூறுதல் அறமாமோ எனக் கைகேயி உரைத்தல்

33 இரந்தான் சொல்லு மின்னுரை கொள்ளாண் முனிவெஞ்சாண்
மரந்தா னென்னு நெஞ்சின ளுள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்தவ ரத்தைத் தவிர்கென்ற
லுரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள்.

தசரதன் மண்ணில் விழுந்து வருந்திப் புரளுதல்

34 கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வெம்பரன் மொய்கா னிடைமெய்யே
நெடியோ னீங்க நீங்குமென் னுவி யினியென்னு
விடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடைவீழ்ந்தான்.

35 வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னுழா வக்கட லுக்கோர் கரைகாணன்
சூழ்ந்தா டுன்பஞ் சொற்கொடி யாள்சொற் கொடுநெஞ்சம்
போழ்ந்தா னுள்ளப் புன்மையை நோக்கிப் புரள்கின்றான்.

தசரதன் கைகேயியைப் பழித்துரைத்துத் துயர்கூர்தல்

36 ஒன்று நின்ற வாருயி ரோடு முயர்கேள்வர்
பொன்று முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லா
லின்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்று ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியாளே.

37 எவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணு
யாவென் பாயோ வல்லேம னத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் றுருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்றாய்.

38 ஏண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரே
யாண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

39 மண்ணுள் கின்று ராகிவ லத்தான் மதியால்வைத்
தெண்ணு நின்றார் யாரையு மெல்லா விகலானும்
விண்ணோர் காறும் வென்றவெ னக்கோர் மனைவாழும்
பெண்ணால் வந்த தந்தர மென்னப் பெறுவேனோ.

40 என்றென் றுன்னும் பண்ணியு யிர்க்கு மிடர்தோயு
மொன்றென் றெவ்வா வின்னலு ழக்கு முயிருண்டோ
வின்றென் றென்னும் வண்ணம யங்கு மிடியும்பொற்
குன்றென் றென்றே டொன்றிய தென்னக் குவிதோளான்.

'யான் வரம் பெறுவிடின் உயிர் மாய்வேன்' எனக் கைகேயி கூறுதல்

41 ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றேண் முற்றும டங்கப் புரள்போழ்தி
லூழிற் பெற்றா லென்னுரை யின்றே லுயிர்மாய்வேன்
பாழிப் பொற்றார் மன்னவ வென்றாள் பசையற்றாள்.

முன் வரம் நல்கிவிட்டுப் பின் வருந்துவது தகாதெனக் கைகேயி கூறுதல்

42 அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மைவ ளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னு மென்றனள் பாயுங் கனலேபோ
லெரிந்தா றுதே யின்னுயி ருண்ணு மெரியன்னாள்.

தசரதன் வெறுப்புற்று, 'வரந்தந்தேன்' எனக் கைகேயியிடம் கூறல்

43 வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்த
னீந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுள காள்வென் வசைவெள்ள
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடும் நெடிதென்றான்.

தசரதன் மூர்ச்சையும் கைகேயி துயிலும்

44 கூறா முன்னங் கூறுப டுக்குங் கொலைவாளி
னேறா மென்னும் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறா னாகிச் செய்கைம றந்தான் செயன்முற்றி
யூறா நின்ற சிந்தையி னாளுந் துயில்வுற்றாள்.

இரவு கழிதலின் புனைந்துரை

45 சேணு லாவிய நாளெ லாமுயி ரொன்று போல்வன செய்துபி
னேணு லாவிய தோளி னாணிட ரெய்த வொன்றுமி ரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்மு னிற்கவு
நாணி னாளென வேகி னாணளிர் கங்கு லாகிய நங்கையே.

கோழி கூவுதலின் புனைந்துரை

46 எண்ட ருங்கடை சென்ற யாமமி யம்பு கின்றன வேலையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்ம யங்கி விம்மிய வாறெலாங்
கண்டு நெஞ்சுக லங்கி யஞ்சிறை யான காமர்து ணைக்கரங்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றிவி ளிப்ப போன்றன கோழியே.

பலவகைப் புட்களும் ஒலித்தலின் புனைந்துரை

47 தோய்க யத்தும ரத்து மென்சிறை துள்ளி மீதெழு புள்ளொலாங்
தேய்கை யொத்தம ருங்குன் மாதர்சி லம்பி னின்றுசி லம்புவ
கேக யத்தர சன்ப யந்தவி டத்தை யின்னதொர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்தும னத்துள் வைவன போன்றவே.

யானை துயிலொழிந்து எழுதலின் புனைந்துரை

48 சேம மென்பன பற்றி யன்புதி ருந்த வின்றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடுவ னத்துள் யாரும றக்கிலா
நாம நம்பிந டக்கு மென்றுந டுங்கு கின்றம னத்தவா
யாமு மிம்மணி றத்து மென்பன போலெ ழுந்தன யானையே.

விண்மீன்கள் மறைதலின் புனைந்துரை

49 சிரித்த பங்கய மொத்த செங்கணி ராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகியிம் மண்ண னைத்துநி ழற்றமேல்
விரித்த பந்தர்பி ரித்த தாமென மீனொ ளித்தது வானமே.

காலையில் மணமுரசு ஒலிக்க, மாதரார் எழுதலின் புனைந்துரை

50 நாம விற்கையி ராம னைத்தொழு நாள டைந்தந மக்கெலாங்
காம விற்குடை கங்குன் மாலைக ழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தன பேரி யவ்வொலி சாரன் மாரித ழுங்கலா
மாம யிற்குல மென்ன முன்னம லர்ந்தெ ழுந்தனர் மாதரே.

மந்தமாருதம் வீசுதலின் புனைந்துரை

51 இனம லர்க்குலம் வாய்வி ரித்திள வாச மாருதம் வீசமுன்
புனைது கில்கலை சோர நெஞ்சுபு ழுங்கி னார்சில பூவைமார்
மனம னுக்கம்வி டத்த னித்தனி வள்ள லைப்புணர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்கம யங்கி னார்சில கன்னிமார்.

குமுதமலர் குவிதலின் புனைந்துரை

52 சாய டங்கந லங்க லந்துத யங்கு தன்குல நன்மையும்
போய டங்கநெ டுங்கொ டும்பழி கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கின வென்ன வந்துகு விந்த வண்குமு தங்களே.

பண் கனிந்தெழு பாடலின் புனைந்துரை

53 மொய்ய ராகநி ரம்ப வாசைமு ருங்கு தீயின்மு ழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் வானி லாநெடு வாடையு
மெய்ய ராவிட வாவி சோரவெ தும்பு மாதர்த மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன பண்க னிந்தெழு பாடலே.

மைந்தர் படுக்கையினின்று எழுதலின் புனைந்துரை

54 ஆழி யான்முடி சூடு நாளிடை யான பாவியி தோரிரா
ஊழி யாயின வாறெ ழுவுயர் போதின் மேலுறை பேதையு
மேழு லோகமு மெண்ட வஞ்செய்த கண்ணு மெங்கண்ம
[ணங்களும்
வாழு நாளிதெ னுவெ ழுந்தனர் மஞ்சு தோய்புய மஞ்சரே.

மாதர் படுக்கையினின்று எழுதலின் புனைந்துரை

55 ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில் காண மூளும வாவினுற்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யு றுஞ்சுடர் வேனெ டுங்கண்மு கிழ்த்து நெஞ்சினி
[னைப்பொடும்
பொய்யு றங்கும டந்தை மார்குழல் வண்டு பொம்மென
[விம்மவே.

ஊடிய மகளிர் கூடல் புரியாது பிரிதல்

56 ஆட கந்தரு பூண்மு யங்கிட வஞ்சி யஞ்சிய னந்தரா
லேட கம்பொதி தார்பொ ருந்திட யாம பேரியி சைத்தலாற்
சேட கம்புனை கோதை மங்கையர் சிந்தை யிற்செறி திண்மையா
லூடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்க ளுய்யவே.

பலவகை ஒலிகளின் புனைந்துரை

57 தழையொ லித்தன வண்டொ லித்தன
தாரொ லித்தன பேரியா
முழவொ லித்தன தேரொ லித்தன
முத்தொ லித்தன மல்குபே
ரிழையொ லித்தன புள்ளொ லித்தன
யாழொ லித்தன வெங்கணு
மழையொ லித்தன போல்க லித்தம
னத்தின் முந்துறு வாசியே.

தீபம் ஒளி மழுங்குதலின் புனைந்துரை

58 வைய மேழுமொ ரேழு மாருயி ரோடு கூடவ ழுங்குமம்
மெய்யன் வீரருள் வீரன் மாமகன் மேல்வி ளைந்ததொர் காதலா
னைய நையந லம்பு லன்கள விந்த டங்கிந டுங்குவான்
றெய்வ மேனிப டைத்த சேயொளி போன்ம ழுங்கின தீபமே.

பலவகைப் பாடற் கருவிகளின் ஒலி

59 வங்கி யம்பல தேன்வி ளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கி யம்பர மெங்கும் விம்மின பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள்பு லம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீதநி ரம்பவே.

ஞாயிறு தோற்றப் புனைந்துரை

60 தூப முற்றிய காரி ருட்பகை துள்ளி யோடிட வுள்ளெழுந்
தீப முற்றவு நீர்த்த கன்றெனச் சேய தாருயிர் தேய்தலாற்

பாப முற்றிய பேதை செய்தப கைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றிமி கச்சி வந்தன ஞெத்த னன்குண குன்றிலே.

தாமரை மலர் மலர்தலின் புனைந்துரை

61 மூவ ராய்முத லாகி மூலம தாகி ஞாலமு மாகியத்
தேவ தேவர்பி டித்த போர்விலொ டித்த சேவகர் சேணிலங்
காவுன் மாமுடி சூடு பேரெழில் காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்னம லர்ந்த பங்கய ராசியே.

கவிக்கூற்று : அயோத்தியிலுள்ளார் இராமர் முடிசூட்டு விழாவின் பொருட்டுச் செய்தவற்றை ஒருவாறு கூறுவோ மெனல்

62 இன்ன வேலையி னேழு வேலையு மொத்த போலவி ரைத்தெழுந்
தன்ன மாநகர் மைந்தன் மாமுடி சூடும் வைகலி தாமெனுத்
துன்னு காதறு ரப்ப வந்தவை சொல்ல லாம்வகை யெம்மனோர்க்
குன்ன லாவன வல்ல வென்னினு முற்ற பெற்றியு ணர்த்துவாம்.

இராமர் முடிசூட்டு விழாவைக் கருதி மகளிர் தம்மை அணிசெய்தல்

63 குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்
பஞ்சினை யணிவார் பால்வளை தெரிவா
ரஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்.

அந் நகரத்தவர் மகிழ்ச்சி

64 பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி தம்பிய ரனைய ராஞர்
செங்கய னறவ மாந்திக் களிப்பெனச் சிவக்குங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குலவுத்தோட் குமரரெல்லாம்.

65 மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட ஞெத்தார் வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்ன டிருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்.

ஆடவரும் மகளிரும் செல்ல இடமின்றி வீதியில் திரண்டு நின்ற பெருந்திரளின் காட்சி

66 வேந்தரே பெரிதென் பாரும் வீரரே பெரிதென் பாரு
மாந்தரே பெரிதென் பாரு மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புகுவதே பெரிதென் பாருந்
தேர்ந்ததே தேரி னல்லால் யாவரே தெரியக் கண்டார்.

மகளிர் நெருங்குதலின் புனைந்துரை

67 குவளையி னெழிலும் வேலின் கொடுமையுங் குழைத்துக் கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியுள் வைத்த தன்மைசா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடையா ராடுந் தோகையங் குழாத்திற் றெக்கார்.

முடிசூட்டு விழாவைக் காண வாராதவர் இவரெனல்

68 நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயி
னலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதா
ரிலங்கையி னிருத ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

வந்த மன்னர் முடிசூட்டும் மண்டபத்திற் புகுதல்

69 சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
வந்தரத் தன்ன மெல்லா மார்ந்தெனக் கவரி துன்ன
விந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மௌலி சூட்டு மண்டப மதனிற் புக்கார்.

அம் மண்டபத்துத் திருவிழாக்காண அந்தணர் வந்து சேர்தல்

70 முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னோடு
மிற்பயன் சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
வற்புதன் றிருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு நான்மறைக் கிழவ ரெல்லாம்.

அங்குத் திரண்டோரினால் நிகழ்ந்த நிகழ்ச்சியின் புனைந்துரை

71 விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கங்
கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிக டூர்த்த
வெண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடலுந் தூர்த்த.

72 விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு மறைத்துச் சூழ்ந்த
வளக்கர்வாழ் முத்த மூரன் முறுவலா ரணியுஞ் சோதி
வளைக்கலா மென்றவ் வானோர் கண்ணையு மறைத்த தன்றே.

வசிட்டன் வேதியரோடு அங்கு வந்து சேர்தல்

73 ஆயதோ ரமைதி யின்க ணையனை மகுடஞ் சூட்டற்
கேயுமங் கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ணெருக்க நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

வசிட்டன் முடிசூட்டு விழா நிகழ்ச்சிக்கு வேண்டுவன திரட்டி வைத்தல்

74 கங்கையே முதல வாகக் கன்னியீ றான தீர்த்த
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்.

வசிட்டன் கட்டளையிட மன்னவனை அழைத்துவருமாறு சுமந்திரன் செல்லுதல்

75 கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்த தென்னப்
பிணியறு நோற்று நின்ற பெரியவன் விரைவி னேகி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யென்னப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

கைகேயி கோயிலில் மன்னன் இருப்ப துணர்ந்து சுமந்திரன் அங்குச் செல்ல, அவள் இராமனை அழைத்து வருமாறு சுமந்திரனிடம் கூறல்

76 விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயி கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

சுமந்திரன் இராமனை அடைதல்

77 என்றனள் என்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
றன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

சுமந்திரன் கைகேயி சொல்லைத் தெரிவித்து இராமனை முடிசூட்டிக்கொள்ள வருமாறு அழைத்தல்

78 கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத் துள்ளா ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி வியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னாளைப்
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றான்.

இராமன் தேரிலேறிச் செல்லுதல்

79 ஐயனு மச்சொற் கேளா வாயிர மௌலி யானைக்
கைதொழு தரச வெள்ளங் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைந்து நோக்கத் தாரணி தேரிற் சென்றான்.

இராமனைக் கண்ட தையலார் செயல்கள்

80 திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்தக் காதலொ டுவகை யுந்த
விருகையு மிரைத்து மொய்த்தா ரின்னுயிர் யார்க்கு மொன்றாய்ப்
பொருவருந் தேரிற் செல்லப் புறத்திடை கண்டார் போல்வார்.

81 துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயுங்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்.

82 அங்கண னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணன் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தேரு மாகி
யெங்கணுந் தோன்று கின்ற னெனவரோ விராம னென்பார்.

[இவ்வாறே இராமனைக் கண்ட முனிவர், முதியர், இளையர் முதலியோரிடத்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலப்பல. இராமன், மன்னவன் அரண்மனையை யடைந்து, அங்கே அவனைக் காணுமல், கைகேயியின் அரண்மனையை யடைந்து, அவள்முன் வாய் புதைத்துப் பணிவொடு நின்றான். 'தந்தை கட்டளை ஒன்று உண்டு' என்றாள் கைகேயி. 'பணிமின்' என்றான் இராமன்.]

'பரதன் அரசுபுரிய இராமன் பதினான்கு ஆண்டுகள் கானுறைந்து திரும்ப வேண்டும் என்பது அரசன் கட்டளை' எனக் கைகேயி கூறல்

83 ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
யேழிரண் டாண்டின் வாவென் றேவின னரச னென்றாள்.

கட்டளை கேட்டு இராமன் அடைந்த மகிழ்ச்சி

84 இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதோ யாருஞ்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கி
னொப்பதே முன்பு பின்ப வாசக முணரக் கேட்ட
வப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

85 தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
யிருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து நின்று
னுருளுடைச் சகடம் பூண்ட வுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொத்தான்.

[மகிழ்ச்சி எய்திய இராமன், 'மன்னவன் கட்டளை அன்றாயினும் உமது கட்டளையைச் செய்ய மறுப்பனோ? கட்டளையைத் தலைமேற் கொண்டேன்' என்று கூறிக் கைகேயியிடம் விடைபெற்றான்.]

5

வில்லிபுத்தூரார் பாரதம்

பாரதம் என்பது பாரதருடைய வரலாற்றைக் கூறும் நூல் என்று பொருள் படும். பாரதர் என்பார் பரதனுடைய மரபினர். பரதன் சந்திர குலத் தரசன்; துஷ்யந்தன் என்பானுடைய மைந்தன். இவன், கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங் களாலும் வீரத்தாலும் மிகச் சிறந்து விளங்கினான் ஆதலால், இவன் மரபு இவனால் பெயர் பெற்று விளங்கியது.

பாரதத்தை வடமொழியில் இயற்றியவர் வியாச முனிவர். பாரதத்தை முதன்முதலில் தமிழில் இயற்றியவர் கடைச்சங்க காலத்திலிருந்த பெருந் தேவனார். ஆனால் அவர் இயற்றிய பாரதம் இப்போது கிடைக்கவில்லை; சில பாடல்கள்மட்டும் பழைய உரைகளில் மேற்கோள்களாகக் காணப்படுகின்றன.

நந்திவர்மன் காலமாகிய கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தொண்டை மண்ட லத்தில் விளங்கிய பெருந் தேவனார் என்ற மற்றொரு புலவர், உரை நடையும் ஆசிரியப்பாவும் விரவிவர, வெண்பா யாப்பால் 12,000 பாடல்களில் தமிழில் பாரதத்தைப் பாடினார். பெரும்பான்மையாக வெண்பாவால் அமைந்தது பற்றி

அவரியற்றிய பாரதத்தைப் பாரத வெண்பா என்றே வழங்கலாயினர். இப் பாரதமும் முழுமையாக இப்போது கிடைக்கவில்லை ; உத்தியோக பருவம் முதல் துரோண பருவம் ஈறாக எண்ணூறு பாடல்களே கிடைத்துள்ளன.

இற்றைக்கு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இருந்த **வில்லிபுத்தூரார்** இயற்றிய பாரதமே இன்று **வில்லிபுத்தூரார் பாரதம்** என வழங்குகின்றது. இவர் பாரதம், ஆதிபருவம் முதல் சௌப்திக பருவம் ஈறாகப் பத்துப் பருவங்களும் 4,351 பாடல்களும் உடையது. இவர், தாம் இயற்றிய பாரதத்தை வியாச பாரதத்தின் மொழிபெயர்ப்பாகப் பாடவில்லை ; வடநூற் கதையைமட்டும் எடுத்துக்கொண்டு, சில இடங்களில் கதையை மாற்றியும், கிளைக் கதைகளை அறவே நீக்கியும், கதைத் தலைவர்களின் பிறப்பு, வளர்ப்பு, மணம் முதலியவற்றைக் கூறி மரணம் முதலியவற்றைக் கூறுதும் தமிழ்க் காப்பிய இலக்கணத்திற் கியையப் பாண்டவர்கள் போர் வென்று பொன்முடி சூட்டுவதோடு முடித்துள்ளார். சிலர், இவர் பாரதம் முழுதுமே பாடினாரெனவும் பிற்காலத்தில் பிற்பகுதிகள் மறைந்தன எனவும் கூறுவர்.

இற்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன்பு, தொண்டைமண்டலத்தில், முதலம்பேட்டிலிருந்த நல்லாப் பிள்ளையென்பவர், வில்லிபுத்தூரார் பாடாது விட்ட எல்லாவற்றையும் விரித்துப் பாடி, அவர் பாடல்களையெல்லாம் இடையிடையே கொண்டு, 15,000 பாடல்களால் பாரதத்தின் பதினெட்டுப் பருவங்களையும் தமிழில் கூறி முடித்தார். இவர் இயற்றிய பாரதம் இப்போது நல்லாப் பிள்ளை பாரதம் என வழங்குகின்றது. இது தவிர, இற்றைக்கு நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்த அஷ்டாவதானம் அரங்கநாதக் கவிராயர் என்பவர் இரண்டாயிரத்து ஐந்நூறு பாடல்களால் பாரதத்தின் பிற் பகுதியினைப் பாடினர்.

வில்லிபுத்தூரார் பாடல்கள் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் முதலிய அழகுகள் அமைந்தவை ; சொல்லணி பொருளணிகள் பொருந்தியவை ; பல வகைச் சந்தங்கள் பயின்று இனிய ஓசையமைதியுடன் திகழ்பவை ; ஆனால், சங்கப் பாடல்கள், கம்பர் பாடல்கள்போல் அல்லாமல், வட மொழிகளும், வட மொழித் தொடர்களும் மிகுதியாகப் பயின்றுள்ளவை ; அருணகிரிநாதர் பாடல்களுக்கு ஒப்பானவை.

வில்லிபுத்தூரார் - நடு நாடு எனப்படும் திருமுனைப்பாடி நாட்டில், சனியூரில், அந்தணர் மரபில், வீரராகவாச்சாரியார் என்பவர்க்கு மைந்தராய்த் தோன்றியவர். வில்லிபுத்தூரார் என்பது பெரியாழ்வாருடைய திருப்பெயர்களுள் ஒன்று என்றும், அதையே தமக்கு அவ் வாழ்வார்மீதிருந்த பற்றினால் இவர் தந்தையார் இவருக் கிட்டனரென்றும், அப் பெயர் ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருப்பெயர்களுள் ஒன்று என்றும், அதனையே இவர்க்குப் பெயராகத் தந்தையார் இட்டன ரென்றும் இரு வகையாகக் குறிப்பர். வில்லிபுத்தூரார் வடமொழியும் தென்மொழியும் நன்கு பயின்றவர் ; சந்த இன்பம் அமைந்த பாடல் இயற்றுவதில் வல்லவர். இவரது புலமை மாட்சி யுணர்ந்த நடு நாட்டு வக்கபாகை யரசனும் சோழன் தானைத் தலைவனும் அருங்கலை விநோதனுமான **வரபதியாட்கொண்டான்** என்பவன் இவரைத் தன் அவைக் கழைத்துச் சிறப்புச் செய்து பாரதத்தைத் தமிழில் பாடித் தருமாறு வேண்ட, இவர் அவ்வாறே பாடி அவனுடைய அவைக்களத்தில் அரங்கேற்றினர். இவ் வரலாறு இவருடைய மைந்

தர் வரந்தருவார் பாடிய இந் நூற் பாயிரச் செய்யுளால் தெரியலாகின்றது. கம்பரைப்போலவே இவரும் தம்மை ஆதரித்த வள்ளலைத் தாம் பாடிய நூலில் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

இவர் வைணவர் என்பது 'எங்கள் மாதவன்' என நூலைத்தொடங்கியிருப்பதாலும், சருக்கங்கள்தோறும் திருமால் வணக்கம் கூறியிருப்பதாலும், ஆழ்வார்களையும் அவர்களுடைய திருப்பாசுரங்களையும், அட்டாக்கர மந்திரத்தையும் போற்றிப் புகழ்ந்திருப்பதாலும் தெளிவாகும். எனினும், அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், அருச்சுனன் தவநிலைச் சருக்கம் முதலிய இடங்களில் சிவபெருமானை உளங்கனிந்து பாடியிருத்தலால், இவர் பிறர் மதத்தை நிந்தனை செய்யாத பொது நோக்குடையவர் என்பது புலனாகின்றது.

வில்லிபுத்தூராரும் அருணகிரிநாதரும் ஒரே காலத்தவர் என்பர். அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (கி.பி. 1477) இருந்த பிரபுடதேவராயர் என்னும் விஜயநகரத்தரசர் காலத்தவர். எனவே வில்லிபுத்தூரார் காலம் ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் என்று கொள்ளுவர்.

கிருட்டிணன் தூது சருக்கம் : இஃது உத்தியோக பருவத்தின் நான்காம் சருக்கம் ஆகும். கிருட்டிணன் பாண்டவர்க்காகத் துரியோதனனிடத்துத் தூது சென்ற வரலாற்றை யுணர்த்தும் பகுதி என்பது இதன் பொருள். பருவம் என்பது பெரும் பிரிவையும், சருக்கம் என்பது சிறு பிரிவையும் குறிக்கும். க்ருஷ்ணன் என்பது தமிழிலக்கணத்திற்கு இயையக் கிருட்டிணன் எனத் திரிந்து நின்றது.

உத்தியோக பருவம்

கிருட்டிணன் தூது சருக்கம்

கடவுள் வணக்கம்

1 பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும்
பிறவியினும் பிரியா னாகிச்
சீர்படைத்த கேண்மையினாற் றேரூர்தற்
கிசைந்தருளுஞ் செங்கண் மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெடே
னமரிலெனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார்
பிறவாழிக் கரைகண் டாரே.

கண்ணனை நோக்கித் தருமன் கூறல்

2 செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த
கருமமுமுன் சென்ற காலை
யஞ்சொன்முனி புரோகிதனுக் கவனிசைத்த
கருமமுநீ யறிதி யன்றே
நஞ்சுதனை மிகவருந்தி நன்மருந்து
மந்திரமும் விரைந்து நாடா
தெஞ்சினர்தங் களைப்போல விருக்குமதோ
யார்மனத்து மிருக்குஞ் சோதீ.

ஐவரையும் நோக்கிக் கண்ணன் கூறல்

3 அருஞ்சமரம் புரியும்வகை யவருரைத்தா
ரானுனு மறமொன் றின்றிப்
பெருஞ்சமரம் விளக்குமது கடனன்றென்
றருள்வெள்ளம் பெருகக் கூறும்
பொருஞ்சமர நெடுமுரசப் பூங்கொடியோன்
றனைநோக்கிப் புயப்போர் வாண
னிருஞ்சமரந் தொலைத்தபிரா னிளைஞரையு
முடனிருத்தி யியம்பு வானே.

4 செய்வரா லினமுகளுந் திருநாடு
பெறநினைவோ சென்று மீளப்
பைவரா யருங்கானிற் பயின்றுதிரி
தரநினைவோ பகைத்த போரி
லுய்வரா ரெனவிரைவி னுருத்தெழுந்து
பொரநினைவோ வுண்மை யாக
வைவரா மவனிபர்க்கு நினைவேதென்
றருள்புரிந்தா னமரர் கோமான்.

பலரைக் கொன்று அரசு பெறுதலினும் கானில் உயிர் வாழ்தல் நன்று என்று தருமன் உரைத்தல்

5 குரவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய
துணைவரையுங் கொன்று போர்வெ
றரவநெடுங் கடலாடை யவனியெலாந்
தனியாளு மரசு தன்னிற்
கரவுறையு மனத்தாதை முனிக்குரைத்த
மொழிப்படியே கானந் தோறு
மிரவுபகற் பலமூல சாகநுகர்ந்
துயிர்வாழ்த லினிது நன்றே.

'அது தகுதியன்று' எனக் கண்ணன் மொழிதல்

6 கோதிலா னிந்தமொழி கூறுதலு
மாமாயன் கூற லுற்றான்
மோதமருக் கிளைத்துநீர் மொய்த்தபெருங்
கானகத்தே முடுகிச் சென்றுற்
பூதலத்தோ ரேசாரோ புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்தி டாதோ
நீதியோ வெனவுரைத்தா னுங்கதற்கு
நிகழ்தரும னிகழ்த்த லுற்றான்.

தூதுபோய் வருமாறு கண்ணனைத் தருமன் வேண்டல்

7 நீதூது நடந்தருளி யெமதுநினை
வவர்க்குரைத்தா னினைவின் வண்ணந்
தாதூதி யளிமுரலுந் தண்பதியுந்
தாயமுந்தான் றரா னாகின்

மீதூது வளைக்குலமும் வலம்புரியு
மிகமுழங்க வெய்ய காலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்
பெறுவனிது வசையு மன்றே.

8 முந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி
னடந்துழவர் முன்றி ருேறு
நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு
நாடொன்று நல்கா னாகி
லைந்தூர்வேண் டவையிலெனி லைந்திலம்வேண்
டவைமறுத்தா லடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண் மாலே.

தூதுமொழி கேட்டு வீமன் வெறுத்துரைத்தல்

9 மூத்தோன்மற் றிவையுரைப்ப விளையோன்வெஞ்
சினமனத்தின் மூள மூள
நாத்தோமி லுரைபதறக் கதுமெனவுற்
றெழுந்திறைஞ்சி ஞால மெல்லாம்
பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர்
மணிமார்பா புன்மை யாவுந்
தீர்த்தோனே யூனமிலான் மானமிலா
துரைப்பதற்கென் செய்வ தென்றான்.

வீமன் தருமனை நோக்கிக் கூறுதல்

10 விரிகுழற்பைந் தொடிநாணி வேத்தவையின்
முறையிடுநாள் வெகுளே லென்று
மரபினுக்கு நமக்குமுல குள்ளளவுந்
தீராத வசையே கண்டா
யெரிதழற்கா னகமகன்று மின்னமும்வெம்
பகைமுடிக்க விளையா நின்று
யரவுயர்த்தோன் கொடுமையினு முரசுயர்த்தோ
யுனதருளுக் கஞ்சி னேனே.

11 கானாள வுனைவிடுத்த கண்ணில்லா
வருளிலிதன் காதன் மைந்தன்
றானாளுந் தரணியெல்லா மொருகுடைக்கீழ்
நீயாளத் தருவ னின்றே
மேனாணம் முரிமையறக் கவர்ந்தபெருந்
துணைவனுனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் றன்பதமற்
றவன்றனக்கே வழங்கு வேனே.

வீமன் கண்ணனை நோக்கி உரைத்தல்

12 போர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற்
பாஞ்சாலி பூந்தண் கூந்தற்
கார்முடித்தா னிளையோர்முன் கழறியவஞ்
சினமுடித்தான் கடவுட் கங்கை
நீர்முடித்தா னிரவொழித்த நீயறிய
வசையின்றி நிலைநின் றேங்கும்
பேர்முடித்தா னிப்படியே யார்முடித்தா
ரிவனுடனே பிறப்ப தேநான்.

13 அணிந்துவருஞ் சமரிலெதிர்ந் தாவுயர்த்தோ
னுடனரச ருடல மெல்லாந்
துணிந்திரண்டு படப்பொருது தொல்லையுல
கரசாளத் துணிவ தல்லாற்
றணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்
தானின்னந் தனித்தூ தேவிப்
பணிந்திரந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே
துணிகின்றான் பட்ட பாடே.

தருமன் வீமனைத் தேற்றுதல்

14 பரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா
ரனைமலர்க்கை பணித்து நோக்கிக்
குருகுலத்தோர் போரேறே குற்றமது
பார்க்குங்காற் சுற்ற மில்லை
யொருகுலத்திற் பிறந்தார்க ளுடன்வாழும்
வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ
விருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா
ரணமாக வெதிர்ப்ப தென்றான்.

தன்னைத் தூது அனுப்புமாறு வீமன் தருமனை வேண்டல்

15 சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே
முனிவர்களுஞ் சுருதி நான்குந்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு
பெறத்தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப்பாவை தன்வரமு
மென்வரமும் வழுவா வண்ணங்
கோடுகின்ற மொழியவன்பா லெனைத்தூது
விடுகவினிக் கொற்ற வேந்தே.

16 மலைகண்ட தெனவெண்கைம் மறத்தண்டின்
வலிகண்டு மகவான் மைந்தன்
சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு
மெமக்காகத் திருமா னின்ற
நிலைகண்டு மிவள்விரித்த குழல்கண்டு
மிமைப்பொழுதி னோரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாம லவன்குடைக்கீ
ழுயிர்வாழக் குறிக்கின் றாயே.

கண்ணன் வீமனைத் தேற்றுதல்

17 வெம்புயவீ மனும்வெகுண்டு மீண்டுமிவை
யெடுத்துரைப்ப மேக மேனிப்
பைம்பொனெடுந் தனித்திகிரிப் பரந்தாமன்
கருணையுடன் பரிந்து நோக்கி
யம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறி
முறையுரைத்தா லதுகே ளாமற்
றம்பியரு மறுப்பரோ தலைவவினிக்
கடுங்கோபந் தணிக வென்றான்.

அருச்சுனன் கூற்று

18 பொன்னுருந் திகிரியினான் போனாலும்
பொறைவேந்தன் புகன்ற வெல்லாஞ்
சொன்னாலு மவன்கேளான் விதிவலியாற்
கெடுமதிகண் டோன்று தன்றே
யெந்நாளு முவர்நிலத்தி னென்முளைவித்
திடினும்விளை வெய்தி டாது
பன்னாகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும்
விடமொழியப் பயன்கொ டாதே.

நகுலன் கூற்று

19 கானெறிபோய்க் கரந்துறைந்து கடவநாள்
கழித்ததற்பின் கான நீங்கி
யீனமிலா வகைவந்தார் நந்துணைவ
ரெனச்சிறிது மிரங்கா னாகின்
மாநகரும் வளநாடு முரிமையுந்தன்
மொழிப்படியே வழங்கா னாகிற்
றானறியா தவன்பிறர்போய்க் கற்பித்தா
லறிவனோ தரணி வேந்தே.

சகாதேவன் கூற்று

20 சிந்தித்த படிநீயுஞ் சென்றாலென்
னொழிந்தாலென் செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென் வழங்கி னாலென்
கொந்துற்ற குழலிவளு முடித்தாலென்
விரித்தாலென் குறித்த செய்கை
யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத்
தெரியுமோ வாதி மூர்த்தி.

போர் நிகழாதிருத்தற்குக் கண்ணனிடம் சகாதேவன் வழி கூறுதல்

21 பாராளக் கன்னனிகற் பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலா மாபா ரதமென்றான்.

தன்னைக் கட்டுதல் கூடுமோ என்ற கண்ணனைச் சகாதேவன் பிணித்தல்

22 மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றுய வடிவுபதி னாறு யிரங்கொண்டான்
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுலகுந்
தாய வடியிணைக டன்கருத்தி னாற்பிணித்தான்.

தன் காலை விடுமாறு கேட்ட கண்ணன்பால் சகாதேவன் வரம் கேட்டல்

23 அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்தமைநன்
றென்பாதந் தன்னை யினிவிடுக வென்றுரைப்ப
வன்பா ரதப்போரில் வந்தடைந்தே மைவரையு
நின்பார்வை யாற்காக்க வேண்டு நெடுமாலே.

சகாதேவனுக்கு வரமளித்து, நடந்ததைப் பிறர் அறியாவாறு காக்கும்படி கண்ணன் உரைத்தல்

24 என்றென் றிறைஞ்சி யிருதா மரைத்தாளி
லொன்றுங் கதிர்முடியாற் கோமென் றுரைத்தருளி
யின்றிங் கிருவேமு மிப்போ துரைத்தமொழி
யொன்றும் பிறரறிய வோதா தொழிகென்றான்.

திரௌபதி துயரம்

25 மன்றி லழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீரர் பெற்றிருந்தா
லன்று விரித்த வருங்கூந்தல் வல்வினையே
னென்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள்.

கண்ணன் திரௌபதியைத் தேற்றுதல்

26 தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த லானே முடிக்கின்றே
னெல்லாருங் காண வினிவிரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே.

கண்ணன் தூதுமேற்கொண்டு அத்தினபுரி அடைதல்

27 சங்கு மணிமுரசுஞ் சல்லரியுந் தாரைகளு
மெங்கு முழங்க வெழில்வெண் குடைநிழற்றப்
பொங்கு கவரி புடையிரட்ட வெண்ணிலா
வங்க மொருநான்கு மவனிபருந் தற்சூழ.

28 கல்வரையும் பாலைக் கடுஞ்சுரமுங் கான்யாறு
நல்வரையு நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுரமு நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்கு
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான்.

கண்ணன் வரவைத் தூதர் துரியோதனனிடம் உரைத்தல்

29 அன்று தூதுகொண் டிலங்கைதீ விளைத்தவ ரைவர்க்
கின்று தூதுவந் தெயிற்புறத் திறுத்தன ரென்னாத்
துன்று தூதுவண் டினமுரா றுடையலான் தனக்குச்
சென்று தூதுவ ரியம்பினர் சேவடி வணங்கி.

கண்ணன் தங்க இடமமைத்து அவையில் துரியோதனன் வீற்றிருத்தல்

30 சீர்வலம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வலம்புரி கோயிலுங் காட்சியு மமைத்துப்
போர்வலம்புரி நிருபரு மிளைஞரும் போற்றத்
தார்வலம்புரி யவனிருந் தனன்பொலந் தவிசின்.

துரியோதனன் அமைத்த இடத்திற்குச் செல்லாது கண்ணன் விதுரன் மனைக்குச் செல்லுதல்

31 வந்து வந்திரு மருங்கினு மன்னவர் வணங்கப்
பைந்து ழாய்முடிப் பரமனுங் கண்மலர் பரப்பி
யந்த மாநகர் புகுந்தபி னரசனிற் புகாமற்
புந்தி கூரருள் விதுரன்வாழ் வளமனை புகுந்தான்.

விதுரன் கண்ணனுக்கு முகமன் கூறுதல்

32 முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்.

தான் தூது வந்தமையைக் கண்ணன் விதுரனிடம் மொழிதல்

33 தோட்டு வந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டு வந்துமுன் றிரிந்துதங் கடவநாள் கழித்து
நாட்டு வந்தபே ரைவர்க்கு நற்குரு நாடு
கேட்டு வந்தன மென்றனன் விதுரனுங் கேட்டான்.

துரியோதனன் நேர்மையில் அரசுகொடானென விதுரன் கூறல்

34 முழக்கி னுயர் முரசுயர்த் தவன்றனக் குரிமை
வழக்கி னலறிந் தடலர வுயர்த்தகோன் வழங்கான்
றழக்கி னலிரு திசையினு முரசெழச் சமரி
னுழக்கி னலல துணர்வனோ வென்றவ னுரைத்தான்.

பாண்டவர் போரினல் அரசுபெறுவரெனக் கண்ணன் உணர்த்தல்

35 வாளை வாவியி னுகண்டெழ வள்ளிளங் கமுகின்
பாளை வாயவி முரன்றெழும் பழனநா டுடையா
னாளை வாழ்வவர்க் களித்தில னெனிலெதிர் நடந்து
மூளை வாயுக முடிப்பர்வெம் போரென மொழிந்தான்.

தனது மாளிகையில் தங்காமைக்குக் காரணம் யாதெனக் கண்ணனைத் துரியோதனன் வினவல்

36 முன்ன கங்குடைக வித்த காளமுகின்
முன்னி ருந்தபின்மு கங்கொடா
தென்ன கந்தனையொ ழித்து நென்னலிடை
யிந்த மாநகரி லெய்தியும்
பொன்ன கங்கொள்புய விதுர னில்லிடைபு
குந்த தென்கொலிது புகலெனப்
பன்ன கந்தனையு யர்த்த கோவுமுரை
பகர மாலுமெதிர் பகருவான்.

கண்ணன் மறுமொழி

37 என்னி னின்னிலொரு பேத மில்லையிது
வென்னி னின்னிலது வென்னினு
மின்னின் மின்னிலகு விறனெ டும்படைவி
தூரன் வந்தெதிர்வி ளம்பினு
னுன்னி லின்னமுள தொன்று பஞ்சவரு
ரைக்க வந்தவொரு தூதன்யா
னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன்வெ
றுக்க வெண்ணுவது நீதியோ.

38 அரவ மல்கியப தாகை யாய்மதிய
மைச்ச ராயரச ழிப்பினுங்
குரவர் நல்லுரைம றுக்கி னும்பிறர்பு
ரிந்த நன்றியது கொல்லினு
மொருவர் வாழ்மனையி லுண்டு பின்னுமவ
ருடன மூன்றுபொர வுன்னினு
மிரவி யுள்ளளவு மதிய முள்ளளவு
மிவர்க ளேநரகி லெய்துவார்.

கண்ணன் தூது மொழிதல்

39 சூதி னுலரசி ழந்த நின்றுணைவர்
சொன்ன சொல்லும்வழு வாதுபோ
யேதி லார்களென நொந்து தண்ணிழலி
லாத கானினிடை யெய்தியுந்
தீதி லாவகைகு றித்த நாள்பலக
ழித்து வந்தனர்செ கத்தினிற்
கோதி லாதகுரு குலம கீபவவ
ருரிமை நண்பொடுகொ டுத்தியே.

துரியோதனன் பாண்டவர்க்குப் புவிகொடுக்க மறுத்தல்

40 என்று கேசவனி யம்ப வங்கெதிரி
ராச ராசனுமி யம்புவா
னன்று சூதுபொரு துரிமை யாவையுமி
ழந்து போயினர்க ளவரு
மின்று நீவிரகின் மீள வுங்கவர
வெண்ணி னுனவரி லெளியனோ
சென்று கானிலவ ரின்ன முந்திரிவ
துறுதி யென்றுநனி சீறியே.

41 நீவெ றுக்கிலெனி ருந்த மன்னவர்தி
கைக்கி லென்பலநி னைக்கிலென்
போய்ந கைக்கிலெனு ரைத்த வுண்மைமொழி
பொய்த்த தென்றமரர் புகலிலென்

வேய்ம லர்த்தொடைய லைவ ரென்னுடன்மி
கைத்து வெஞ்சமர்வி ளைக்கிலெ
னீயி ருக்குமிட மெனினு மிப்புவியில்
யான வர்க்கரசி னிக்கொடேன்.

கண்ணன் மீண்டும் துரியோதனனை வேண்டுதல்

42 கார்வ ழங்குருமெ னச்சி னத்திஞெடு
கண்ணி லான்மதலை கழறவும்
பார்வ ழங்கநினை வில்லை யேலவனி
பாதி யாயினும்வ ழங்குவாய்
தார்வ ழங்குதட மார்ப வென்னவது
தானு மன்னவன்ம றுக்கவைந்
தூர்வ ழங்குகென வுற்றி ரந்தனனிவ்
வுலகெ லாமுதவு முந்தியான்.

துரியோதனன் மறுத்தல்

43 மாட ளிக்குலநெ ருங்கு பைந்துளவ
மாலை யாய்மகர வேலைசூழ்
நாட ளித்திடவு மைந்து பேருடைய
நகர ளித்திடவும் வேண்டுமோ
காட ளிக்கவத னிடைதி ரிந்துறைக
ரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும்வெ றுப்ப ரோவிதனை
விடுக வென்றெதிர்வி ளம்பினன்.

கண்ணன் துரியோதனனுக்குக் கூறும் அறிவுரை

44 தந்தை காதலுறு தன்மை கண்டிளைய
தாய்ப யந்தவிரு தம்பியர்க்
கிந்த வாழ்வுமர சுங்கொ டுத்தவனு
நின்கு லத்தொருவ னிங்குளான்
முந்த மாநிலம னைத்தி னுக்குமுயர்
முறைமை யாலுரிய வரசருக்
கைந்து மாநகரு நீகொ டாதொழியி
னென்ன தாகுமுன தரசியல்.

45 ஒருகு லத்தினிலி ரண்டு மன்னவரு
டன்பி றந்துரிமை யெய்தினு
லிருகு லத்தவரு மொக்க வாழ்வுறுத
லெக்கு லத்தினுமி யற்கையே
பொருகு லக்களிறு வளர்தி சைக்கண்மிகு
புகழ்ப ரப்பியெழு புவிபெறுங்
குருகு லத்தவரி யற்கை நன்றெனமொ
ழிந்த னன்கரிய கோவலன்.

துரியோதனன் வெகுண்டு மறுத்துரைத்தல்

46 பேர ராவணைது றந்த மாயனிவை
பேச வன்பினெடு பின்னையுஞ்
சீர ராவினையு யர்த்த கோவும்விழி
தீயெ னும்படிசெ யிர்த்துளே
போர ராநிருபன் மணிநெ டுஞ்சுடிகை
யாயி ரங்கொடுபொ றுத்தபார்
வீர ரானவர தல்ல வோவுரிமை
வேண்டு மோவெனவி ளம்பினன்.

கண்ணன் இறுதியாகத் துரியோதனனைப் போர் வேண்டுதல்

47 பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவைபு
கன்ற பின்புபுய வலியினு
லவர் தங்களர சுங்கொ டாமலட
லாண்மை கொண்டெதி ரடர்த்தியேன்
மெய்வி ளங்கவரு குருநி லத்தினிடை
வந்து வெஞ்சமர்வி ளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூணிடைய
றைந்து ரைக்குமிவை காவலன்.

துரியோதனன் பாண்டவரைப் பழித்தல்

48 அன்னை யானவரு மிருவ ராமுதல
ளித்த தந்தையர்க ளைவராம்
பின்னை யாசைகொடு குருகு லத்துரிமை
பெறுவ ராமொருபி றப்பிலோர்
மின்னை யாமிவர்க ளைவ ரும்பரிவி
னெடுத னித்தனிவி ரும்புவா
ரென்னை யாமவரொ டொருகு லத்தரச
னென்ப தம்மவிவை யென்கொலாம்.

கண்ணன் விதுரன் மாளிகையை யடைதல்

49 ஞால முற்றுமுடை யவன்மொ ழிந்திடந
கைத்து வண்டுவரை தாதனுஞ்
சால முற்றுமினி யவர்க ருத்தெனநி
னைந்து பேரவைத ணந்துபோய்க்
கோல முற்றசிலை விதுரன் வாழ்வுபெறு
கோயில் சென்றுநனி குறுகினன்
சீல மற்றவர்சி னந்த போதுமொரு
தீதி லாதவர்செ யிர்ப்பரோ.

கண்ணனுக்கு விருந்திட்ட விதுரனைத் துரியோதனன் வெகுண்டு பழித்தல்

50 கரிந்து மாலைசரு காக வும்புதிய
கமல வாண்முகம்வெ யர்க்கவுந்
திருந்து கண்ணிணைசி வக்க வுங்கொடிய
செய்ய வாயிதழ்து டிக்கவு

மிருந்த பேரவையி னெடிது யிர்த்திடுமி
ராச ராசனவ னுக்கிவன்
விருந்து செய்தவுற வென்கொ லென்றரச
ரெதிர்வி தூரனைவி ளம்புவான்.

51 வன்பி னுலவணி வெளவ வென்றுகொலென்
மனையி லுண்டியைம றுத்தவன்
றன்ப தாகினியொ டினித ருந்தும்வகை
தன்னி லின்னமுதி யற்றினு
னென்பி தாவொடுபி றந்து மின்றளவு
மென்கை யோதனம ருந்தியு
மன்பு தானுடைய னல்ல னென்பகைத
னக்கு முற்றபகை யல்லனே.

52 முதல்வி ழைந்தொருவ னுடனி யைந்தபொருள்
பற்றி யின்புறமு யங்கினு
மதிக மென்றபொரு ளொருவன் வேறுதரி
னவனை யேயொழிய வறிவரோ
பொதும டந்தையர்த மக்கு மண்ணிலிது
புதுமை யல்லவவர் புதல்வனும்
விதுர னின்றவனெ டுறவு கொண்டதொர்வி
யப்பை யென்சொலிவெ றுப்பதே.

விதுரன் மறுமொழி கூறித் தன் வில்லை முறித்துப் போடுதல்

53 இன்ன வாறிவனு ரைத்த போதவனெ
முந்தி ருந்துவசை யென்னைநீ
சொன்ன வாய்குருதி சோர வாள்கொடுது
ளைத்து நின்முடிது ணிப்பன்யான்
மன்ன வாகுருகு லத்தி லேயொருவன்
மைந்த னுருயிரை வெளவினு
னென்ன வானவர்ந கைப்ப ரேயெனையு
ரைத்த நாவுடனி ருத்தியோ.

54 ஈண்ட வர்க்குதவி யாய தூதெனவி
சைப்ப வற்குலக மெங்கணு
நீண்ட வற்குதவி யாயி னேனெனநி
னைத்து நீயெனைய டர்த்தியே
மாண்ட வர்க்குதவி யாய பேரறமு
மிசையு மாண்மையும்வ ளர்த்திடும்
பாண்ட வர்க்குதவி யாகி லென்னைமுடி
மன்ன ரானவர்ப ழிப்பரோ.

55 சொல்லி ரண்டுபுக லேனி னிச்சமரி
னின்று வெங்கணைதொ டேனென
வில்லி ரண்டினுமு யர்ந்த வில்லதனை
வேறி ரண்டுபட வெட்டினன்

மல்லி ரண்டினையு மிருவ ராகிமுன்ம
லைத்த காளமுகில் வீந்துதன்
னில்லி ரண்டுதினம் வைகு தற்குலகி
லெண்ணி லாத தவ மெய்தினான்.

[பின்பு, கண்ணன் குந்திக்குக் கன்னன் பிறப்புணர்த்தினான்; துரியோதனன் தன்னைக் கொல்ல அமைத்த படுகுழியைப் பயனற்ற தாக்கினான்; கன்னனுக்கு அவன்தன் பிறப்பு உணருமாறு செய்தான்; அசுவத்தாமனை மித்திரபேதம் செய்தான்; இந்திரனை, முனிவன் வடிவில் சென்று, கன்னனிடமிருந்து கவச குண்டலங்களை இரந்து பெற்றுக்கொள்ளுமாறு ஏவினான்; குந்தியைக் கன்னனிடம் அனுப்பி இரண்டாம் முறையாக நாகாஸ்திரத்தை அருச்சுனன்மீது ஏவாதபடி வரம் பெற்று வருமாறு செய்தான். இவையெல்லாம் முடித்துக்கொண்டு கண்ணன் மகிழ்ச்சியோடு பாண்டவரை அடைந்தான்.]

கண்ணன் நடந்தவற்றைப் பாண்டவர்க்கு உரைத்தல்

56 தூதுபோ யரவத் துவசனோ டுறுதி
சொன்னது மறுத்தவன் சினந்து
மோதுபோர் புரியத் துணிந்ததும் விதுரன்
மூரிவில் லிறுத்ததுங் கங்குற்
போதுபோர் வஞ்சம் விளைத்ததும் கன்னன்
புரந்தரற் கீந்ததும் பயந்த
மாதுபோய் வரங்கள் பெற்றவை யொழிய
மற்றெலா மைத்துனர்க் குரைத்தான்.

6
திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற் புராணம் என்பது மதுரையம் பதியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளுடைய அருள் விளையாடல்களைக் கூறும் பழைய வரலாறு ஆகும். ஈண்டு விளையாடல் என்பது சிறுவர்கள் பொழுது போக்கிற்காக ஆடும் ஆடலைக் குறிப்பதன்று; எத் தகைய அரிய செயலையும் எளிதில் செய்து முடிக்கும் ஆற்றலைக் குறிப்பதாகும். 'ஐங்கலப் பாரம் சுமத்தல் சாத்தற்கு விளையாட்டு' என்ற பழமொழியில் 'விளையாட்டு' என்ற சொல், 'எளிய செயல்' என்ற பொருளில் வழங்குவது காண்க.

சோமசுந்தரக் கடவுள் புரிந்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் இதில் கூறப்பட்டுள்ளன. திருவிளையாடற் கதைகளை எடுத்துக் கூறும் தமிழ் நூல்கள் எண்ணிறந்தன. சிலப்பதிகாரத்திலும், கல்லாடத்திலும், தேவாரத்திலும், திருவாசகத்திலும் திருவிளையாடற் கதைகள் பற்பல காணலாம். திருவிளையாடல்கள் யாவற்றையும் உணர்த்தும்பொருட்டே எழுந்த தமிழ் நூல்கள் - பரஞ்சோதி முனிவர் இயற்றிய இத் திருவிளையாடற் புராணமும், பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும், வீமநாத பண்டிதர் இயற்றிய கடம்பவன புராணமும், அநதாரியப்பர் இயற்றிய சுந்தர பாண்டியமும் ஆம். இவற்றுள் சுந்தர பாண்டியம் தவிர மற்றவை அச்சிடப்பட்டுள்ளன.

இத் திருவிளையாடற் புராணத்திற்கு முதனூல், ஆலாசிய மாஹாத்மியம் என்னும் வடமொழிப் புராணம் என்பர். வடமொழியைப் படித்துணரும் ஆற்றல் இல்லாத தமிழர் வேண்டுகோளின்படி பரஞ்சோதி முனிவர் தமிழில் புராணம் இயற்றினர் என்பது அவர் பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றது. எனினும், "திருவிளையாடற் புராணம் ஆரியத்தினின்று மொழிபெயர்க்கப்பெற்றதாயினும், இதிற் கூறப்படும் திருவிளையாடல்களெல்லாம் செந்தமிழ்ப் பாண்டி நாட்டிலே தமிழ்மக்களிடையே தமிழ் மொழியாற் பேசியும் எழுதியும் நிகழ்த்திப் போந்தனவாதலின், இவ் வரலாறுகள் ஆரியத்தில் எழுதப்படுமுன்பே தமிழின் இருவகை வழக்கிலும் பயின்றனவாதல் வேண்டுமென்றும், இவற்றை வட நூற்புலவர் அம் மொழியில் எழுதுங்கால் தமிழ் வழக்குக்களை நன்கு அறியாமை முதலிய காரணங்களாற் சில பிறழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் இயல்பென்றும், இந் நூலாசிரியர் வடநூன் மேற்கோளாகக் கதைகளை எடுத்துக்கொண்டனராயினும் பழந் தமிழ் நூல்களின் கருத்துக்களையும் சொற்களையும் தொடர்களையும் எடுத்தமைத்தே இந் நூலை அழகு பெறச் செய்திருக்கின்றனர் என்றும் தமிழ் மக்கள் உணரவேண்டும்" எனத் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறுவதைக் கருத்தில் இருத்தவேண்டும்.

இத் திருவிளையாடற் புராணம் மதுரைக் காண்டம், கூடற் காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்ற மூன்று காண்டங்களையுடையது.

இதன் ஆசிரியரான பரஞ்சோதி முனிவர், சோழ மண்டலத்திலே தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருமறைக்காட்டில் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் மீநாட்சிசுந்தர தேசிகர். முனிவர் என்ற சிறப்புப் பெயர்கொண்டு, இவ் வாசிரியர் துறவியாய் இருந்தமை உணரலாம். இவருடைய பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை செறிந்தன. தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள், பத்துப் பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்க நூல்கள், ஐம் பெருங் காப்பியங்கள், தேவாரம் முதலிய பன்னிரு திருமுறைகள் இவற்றில் இவ் வாசிரியர் பெரிதும் பயிற்சியுடையவர் என்பதை இவர் நூல்களால் உணரலாம்.

இவர் இயற்றிய வேறு நூல்கள் வேதாரணிய புராணம், திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி என்ப.

இவர் காலம் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன் என்பர்.

இசைவாது வென்ற படலம் : இது கூடற் காண்டத்தில் உள்ளது ; அறுபத்துநான்கு திருவிளையாடல்களுள் நாற்பத்து நான்காம் திருவிளையாடலைக் கூறுவது. பாணபத்திரன் மனைவி இறைவனுடைய நிறைந்த திருவருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஒரு விறலியை இசைப் போரில் வென்ற வரலாறு இப் பகுதியில் கூறப்பெறும்.

கூடற் காண்டம்

இசைவாது வென்ற படலம்

பாணபத்திரனுக்குப் பொற்பலகை யிட்ட திருவிளையாடலைப் பாடிய ஆசிரியர் 'அவன் மனைவி இசைவாது வெல்ல அருள் புரிந்த திருவிளையாடலைப் பாடுவோம்' எனல்

1 கூட லம்பதியி லாடக மேருக்
கொடிய விற்குரிசி லடியவ னுக்குப்

பாட லின்பரிசி லாகிய செம்பொற்
பலகை யிட்டபடி பாடின மன்னன்
வீட ரும்பொருவில் கற்புடை யாளோர்
விறலி யைப்பரம னிறையருள் பற்றி
மாட கஞ்செறியும் யாழ்வழி பாடி
வாது வென்றவர லாறுமி சைப்பாம்.

இராசராசனுக்கு மனைவியர் பலர், காமக்கிழத்தியர் பலர் எனல்

2 வரகு ணன்கதிய டைந்தபி னம்பொன்
மௌலி சூடியவி ராசவி ராசப்
புரவ லன்புவிம டந்தையை வேட்டுப்
புயந்த ரூஇக்கொடுந யந்தரு நாளிற்
பரவு மன்பதைபு ரந்தொழு கந்தப்
பஞ்ச வற்குரிய ரஞ்சனை வுண்கண்
மரபின் வந்தமட வார்பல ரேனை
மையல் செய்யுமட வார்பலர் மாதோ.

காமக்கிழத்தி ஒருத்திக்கும் பத்திரன் மனைவிக்கும் இசையால் பகை மூளல்

3 அன்ன போகமட வாருளொ ருத்தி
யரச னுக்கமுது மாவியு மாகும்
மின்ன னுண்மதுர கீதமி சைக்கும்
விஞ்சை யின்றுறைவ லாளவ ளுக்கும்
பன்ன காபரண னின்னிசை பாடும்
பத்தி ரன்பொருவில் கற்புடை யாட்கும்
மன்னு கீதவினை யாலிகன் மூள
வழுதி கா்தன்மட மாதுபொ ருளாய்.

காமக்கிழத்தி சொற்படி மன்னன் ஈழப்பாடினியைத் தருவித்தல்

4 பாடி னிக்கெதிரொர் பாடினி தன்னைப்
பாட விட்டிவள்ப டைத்தசெ ருக்கை
ஈட ழிப்பலென வெண்ணியெ ழூஇத்தன்
னிறைம கற்கஃதி சைத்தலு மந்தத்
தோடி றப்பொருக யற்கணி னுடான்
சொன்ன வாறெழுகு மன்னவர் மன்னன்
நாடி யத்தகைய விறலியை யீழ
நாட்டி னும்வரவ ழைத்துவி டுத்தான்.

தொழுது பாடிநின்ற ஈழப்பாடினிக்கு மன்னவன் ஏவல்

5 பந்த யாழ்முதுகு தைவர விட்டுப்
பாட லாயமிரு பக்கமு மொய்ப்ப
வந்த பாடினிம டந்தையு மன்னர்
மன்ன னைத்தொழுதொர் கின்னர மாதிற்
சந்த வேழிசைமி ழற்றின ணின்று
டன்னை நோக்கியொரு மின்னிடை யாண்மேற்
சிந்தை போக்கிவரு திப்பழி நோக்காத்
தென்ன ருக்கரச னின்னது செப்பும்.

6 பத்தி ரன்மனைவி தன்னையெம் முன்னர்ப்
பாடு தற்கழைய தற்கவ ளாற்று
துத்த ரஞ்சொலினும் யாமவள் சார்பா
யுனைவி லக்கினும்வி டாதுதொ டர்ந்தே
சித்த நாணமுற வஞ்சின மிட்டுச்
செல்ல னில்லெனவ ளைந்துகொ ளென்று
எய்த்த நுண்ணிடையி னுளையி ருக்கைக்
கேகி நாளைவரு கென்றுவி டுத்தான்.

பத்திரன் மனைவியை மன்னவன் அழைத்து ஈழப்பாடினியொடு பாட வல்லையோ என அவள் திருவருளால் பாடி வெல்வேனெனல்

7 பின்ன ரின்னிசைப் பத்திரன் பெருந்தகை விறலி
தன்னை யங்கழைத் துளத்தொன்று புறத்தொன்று சாற்றும்
என்னொ டின்னிசை பாடுவா ருளர்கொலோ விங்கென்
றுன்னி வந்திருக் கின்றன ளிசைவலா ளொருத்தி.

8 ஆட மைத்தடந் தோளினு யவளொடுங் கூடப்
பாட வல்லையோ பகரெனப் பாடினி பகர்வாள்
கோட ருந்தகைக் கற்புமிக் கூடலெம் பெருமான்
வீட ருங்கரு ணையுமெனக் கிருக்கலால் வேந்தே.

9 பாடி வெல்வதே யன்றிநான் பரிபவ முழந்து
வாடு வேனலே னென்றுரை வழங்கலு மதுக்கால்
எடு வார்குழ லவளையு மிருக்கையுய்த் திருந்தான்
நீடு வார்திரைப் பொருநையந் தண்டுறை நிருபன்.

ஈழப்பாடினி பத்திரன் மனைவியை வைது சில கேள்விகள் கேட்டல்

10 மற்றை வைகலவ் விருவரைப் பஞ்சவன் மதுரைக்
கொற்ற வன்றன தவையிடை யழைத்துநேர் கூட்டிக்
கற்ற வேழிசை கேட்குமுன் கலத்தினும் போந்த
வெற்றி வேன்மதர் நெடுங்கணாள் விறலியை வைதாள்.

11 குற்ற மெத்தனை யெத்தனை குணங்கள்யாழ்க் கோலுக்
குற்ற தெய்வம்யா விசைப்படுதெவ் வுயிருடம் புயிர்மெய்
பெற்ற வோசையெவ் வளவவைக் குத்தரம் பேசி
மற்றெ னோடுபா டில்லையேல் வசையுனக் கென்றாள்.

ஈழப்பாடினியின் நாணமின்மையைக் கூறித் தான் இசைவாதிற்கு அன்றி இகழும் பூசலுக்கு எதிராக வரவில்லை யெனப் பத்திரன் மனைவி உரைத்தல்

12 இருமை யும்பெறு கற்பினா ளியம்புவாள் கலத்தின்
வருமை ரும்பெறற் கல்வியும் வாதின்மே லூக்கப்
பெருமை யும்பலர் விரும்புறு பெண்மையின் செருக்குந்
திரும கன்சபை யறியவாய் திறக்கவேண் டாவோ.

13 நெய்யுண் பூங்குழன் மடவார ளின்னொடும் வாது
செய்யும் பூசலுக் கெதிரலாற் றீயவாய் திறந்து
வையும் பூசலுக் கெதிரலேன் மானம்விற் றுன்போல்
உய்யும் பாவைய ரேயதற் கெதிரென வுரைத்தாள்.

தோற்றோர் வென்றவர்க்கு அடிமை எனக் கூறி, மன்னவன் அவர்களை யாழ்ப்போரைத் தொடங்குமாறு ஏவல்

14 வென்றி மீனவன் விலக்குவான் போலெதிர் விலக்கித்
துன்று தார்க்குழன் மடந்தைமீர் பாடுமின் றோற்றோர்
வென்ற மாதரார்க் கடிமையாய் விடுவதே சபதம்
என்று மானமுண் டாக்கனு மீழநாட் டரிவை.

மன்னன் மகிழ ஈழப்பாடினி யாழிசைத்தல்

15 முந்தி யாழிடந் தழீஇக்குரல் வழிமுகிழ் விரல்போய்
உந்த வேபெரு மிதநகை யுட்கிடந் தரும்பச்
சந்த வேழிசை யிறைமகன் றாழ்செவிக் கன்பு
வந்த காதலான் மழலையி னமுதென வார்த்தாள்.

யாவரும் மகிழப் பத்திரன் மனைவி யாழ் வாசித்தல்

16 வீணை வாங்கினண் மாடக முறுக்கினள் விசித்து
வாண ரம்பெறிந் திருசெவி மடுத்தன ரியக்கர்
நாண மெல்விர ணடைவழி நாவிளை யமுதம்
பாணர் கோமகன் விறலியும் பலர்செவி நிறைத்தாள்.

[அரசன் கருத்தறியாமல் பத்திரன் மனைவி பாடலை அவையத்தார் வியந்தார். அரசன் ஈழப்பாடினி பாடலை வியந்தான்.]

அரசன் கருத்தறிந்ததும் அவன் புகழ்ந்தவாறே அவையத்தார் ஈழப்பாடினியைப் புகழ்தல்

17 தென்னவ னுட்கோ ளெல்லை தெரிந்தன ரவையத் துள்ளார்
அன்னவன் புகழ்ந்த வாறே புகழ்ந்தன ரவளைத் தானே
முன்னவ னருளைப் பெற்று மும்மையுந் துறந்தோ ரேனும்
மன்னவன் சொன்ன வாறே சொல்வது வழக்கா றன்றோ.

ஒரே நாளில் முடிவு தேரத் தக்கது அன்றென்று, மன்னவன் விறலியர்களைப் போக விடுத்தல்

18 பொன்றவி ரணியாண் மையற் புதுமது நுகர்ந்து தீது
நன்றறி யாத கன்னி நாடவ னவையை நோக்கி
இன்றொரு நாளிற் றேரத் தக்கதோ விதுவென் றந்த
வென்றடு வேற்க ணாரைப் போமென விடுத்தான் மன்னோ.

வீடுவந்த ஈழப்பாடினி அரசன் தன் பாட்டைப் புகழ்ந்ததை உண்மையான புகழ்ச்சியாகவே எண்ணி மகிழ்தல்

19 மருவிய வாய மேத்த விருந்தினாள் மனைவந் தெய்திப்
புரவலன் றனது பாட்டைப் புகழ்ந்ததே புகழ்ந்த தாகப்
பெருமிதந் தலைக்கொண் டாளுப் பெருங்களிப் படைந்து மஞ்சத்
திருமல ரணைமே லார்வந் திளைத்தினி திருந்தா ளிப்பால்.

பத்திரன் மனைவி மன்னவன் போக்கைக் கூறி இறைவனிடம் முறையிடுதலும் அவன் அருளுவதாகக் கூறலும்

20 வணங்குறு மருங்கிற் கற்பின் மடவரான் மதங்கி தானும்
அணங்கிறை கொண்ட நெஞ்ச ளங்கயற் கண்ணி பாகக்

குணங்குறி கடந்த சோதி குரைகழ லடிக்கீ ழெய்தி
உணங்கினள் கலுழ்கண் ணீர ளொதுங்கிநின்
[றிதனைச் சொன்னாள்.

21 தென்னவ னாகி வையஞ் செய்யகோல் செலுத்திக் காத்த
மன்னவ வழுதி வார வழிவழக் குரைப்ப தானுன்
அன்னவன் கருத்துக் கேற்ப வவையரு மனைய ராஞர்
பின்னடு நிலைமை தூக்கிப் பேசுவார் யாவ ரையா.

22 உன்னருட் டுணைசெய் தென்பா லுறுகணோய் துடைப்ப தென்ன
மின்னனாய் நீயே நாளை வெல்லுமா செய்து மஞ்சேல்
என்னவா காய வாணி யீறிலா னருளாற் கேட்டு
மன்னருங் கற்பி னுடன் மனைபுகுந் திருந்தாண் மன்னோ.

மறுநாளும் அரசன்வழியிலேயே அவையத்தார் நிற்பதுகண்ட பத்திரன் மனைவி, இறைவன் திருமுன்பில் வந்து 'ஈழப்பாடினி வென்றாள்' என்று ஒருவர் கூறினாலும் போதும் எனல்

23 அன்றுபோன் மற்றை ஞான்று மழைத்தனன் பாடல் கேட்டுக்
குன்றுபோற் புயத்தா னென்னற் கூறிய வாறே கூற
மன்றுளார் பலரு மன்ன வண்ணமே சொன்னார் கேட்டு
நின்றபாண் மடந்தை பாண்டி நிருபனை நோக்கிச் சொல்வாள்.

24 தென்னரே றனையாய் ஞால மனுவழிச் செங்கோ லோச்சும்
மன்னரே றனையாய் வார வழக்கினை யாத லானீ
சொன்னவா றவையுஞ் சொல்லத் துணிந்தது துலைநா வன்ன
பன்னகா பரணர் முன்போய்ப் பாடுகேம் பாடு மெல்லை.

25 இருவரேம் பாட்டுங் கேட்டுத் துணிந்திவள் வென்று ளென்று
ஒருவர்சந் நிதியிற் சொன்னாற் போதுமென்
[றுரைத்தாள் பாண்டித்
திருமக னனைய வாறே செய்மினீர் செய்மி னென்ன
மருவளர் குழலி னார்த மனைபுகுந் திருந்தார் பின்னாள்.

அரசன், அமைச்சர், இசைஞானமுடையோர் அனைவரும் வெள்ளிமன்றம் அடைதல்

26 தென்ற னுடனு மந்திரச் செல்வரும்
நன்று தீதுணர் நால்வகைக் கேள்வியோர்
ஒன்ற வேகி யொளிவிடு வெள்ளிமா
மன்ற வாணர்மா மண்டபத் தெய்தினார்.

விறலியரை ஏவலர் அழைத்துவரல்

27 எய்தி யம்மட மாதரை யிங்குறச்
செய்தி ரென்னத் திருமக னேவலோர்
நொய்தி னோடி நொடித்தழைத் தாரொடு
மைதி கழ்ந்த விழியார் வருவரால்.

தனக்கு அடிமையானவள் தவப்பாடினி என ஈழப்பாடினி செருக்குடன் வரல்

28 படிமை யார்தவப் பாடினி வந்தெனக்
கடிமை யாவளின் றையமின் றுலெனக்
கொடுமை யார்மனக் கோட்டச் செருக்கொடுங்
கடுமை யாகவந் தாள்கலத் தின்வந்தாள்.

தவப்பாடினி இறைவனை எண்ணிக்கொண்டே மெல்ல வரல்

29 கற்பின் மிக்கெழு கற்புங் கருத்தினிற்
சிற்ப ரஞ்சுடர் சேவடி மேல்வைத்த
அற்பு மிக்கெழ மெல்லவந் தாளரோ
பொற்பின் மிக்குள பத்திரன் பொன்னனாள்.

சோமசுந்தரக் கடவுள் நாவலர்போல வருதல்

30 அலங்கு மாரமோ டங்கத மாதிபல்
கலன்க டாங்கிக் கலைஞர் குழாத்திடை
இலங்கு மாட மதுரைக் கிறைவரும்
புலன்கொ ணாவலர் போல்வந்து வைகினார்.

ஈழப்பாடினி பாடலும், முன்னர்க் கொண்டாடினவர் யாதும் கூறுது இருத்தலும்

31 அந்த வேத்தவை தன்னி லருங்கலம்
வந்த வேய்த்தடந் தோளிசை மாதராள்
முந்த வேத்திசை பாடினள் முந்தையோர்
சிந்தை வேட்டொன்றுஞ் செப்பின ரில்லையால்.

பத்திரன் மனைவி பாடுதலும் அனைவரும் மகிழ்தலும்

32 வீணை தோளிட னேந்திய வெண்மலர்
வாணி பாட விருக்கையின் வைகியே
யாண ரம்பெறிந் தின்னிசை யோர்ந்தெழீஇப்
பாணர் கோமகன் பன்னியும் பாடுமால்.

33 குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டி
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே.

34 தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
வானா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே.

35 வரத னாகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்னான்
[விளம்புவனே.

36 கண்ணுதன் மதுரைப் பிரானையிவ் வாறு
கருதிய பாணியாற் கனிந்து
பண்ணுதல் பரிவட் டணைமுத லிசைநூல்
பகர்முதற் றெழிலிரு நான்கும்
எண்ணுறு வார்தல் வடித்திடல் முதலா
மெட்டிசைக் கரணமும் பயப்ப
மண்ணவர் செவிக்கோ வானவர் செவிக்கும்
வாக்கினு ணுவிளை யமுதம்.

37 இடையினோ டேனைப் பிங்கலை யியக்க
மிகந்துமூ லந்தொடுத் தியக்கி
நடுவுறு தொழிலாற் பிரமரந் திராந்த
நடைபெற விசைக்குமுள் ளாளம்
மிடறுவீங் காள்கண் ணிமைத்திடா ளெயிறு
வெளிப்படாள் புருவமே னிமிராள்
கொடிறது துடியாள் பாடலு மதுகேட்
டனைவருங் குதூகல மடைந்தார்.

இறைவனருளால் மன்னவன் மனக் கோட்டம் நீங்கிப் பத்திரன் மனைவியே வென்றாள் எனல்

38 கன்னிநா டுடையான் கைதவ னெனும்பேர்க்
காரணந் தேற்றுவா னெனத்தான்
இன்னிசை யறிகு றுகியு முன்போ
லியம்புவா னொருப்படு கின்றான்
முன்னவ னருளாற் றன்மனக் கோட்ட
முரண்கெடப் பொதுமையா னோக்கி
இன்னவ டானே வென்றன ளென்று
னினையவா றனைவரு மொழிந்தார்.

ஈழப்பாடினி கழுத்தில் பத்திரன் மனைவியைப் பாண்டியன் இருத்தலும் இறைவன் ‘ ஈது அற்புதம் ’ எனக் கூறி மறைதலும்

39 கரியுரை மொழிந்த கைதவ னிலங்கைக்
கைதவப் பாடினி கழுத்திற்
புரிகுழன் மாதை யிருத்தென விருத்தும்
போதுமை யிடங்கரந் திருந்த
அரியநா வலரீ தற்புத மீதற்
புதமென வறைந்தவை காண
விரிகதிர் மின்போன் மறைந்தனர் யாரும்
வியந்தனர் பயந்தனன் வேந்தன்.

அவையோர், இறைவன் திருவிளையாடலும் அடியவர் அன்பும் சீர்தூக்கி மகிழ்தலும், அரசன் பாடினிக்கு வரிசை தந்து அனுப்பிவிட்டுக் கோயிலை வலஞ்செய்து வைகுதலும்

40 செங்கணே றழக ராடலீ தென்றே
யாவருந் தெளிந்தன ரேத்தி

0-, 12
N52

அங்கணு யகர்தங் கருணையின் றிறனு
மடியவ ரன்பையுந் தூக்கித்
தங்கணு ரருவி பெருகவா னந்தத்
தனிப்பெருஞ் சலதியி லாழ்ந்தார்
வங்கமேல் வந்தான் பிடர்மிசை யிருந்த
மாணிழை விறலியை மன்னன்.

41 இறக்குவித் தவட்கு முந்தமுத் தார
மெரிமணிக் கலன்றுகில் வரிசை
பெறக்கொடுத் தேனை யவட்குமுண் மகிழ்ச்சி
பெறச்சில வரிசைதந் தவையிற்
சிறக்கவந் தொருங்கு வைகிவா னிழிந்த
தெய்வதக் கோயில்புக் கிருந்த
அறக்கொடி யிடஞ்சேர் பெரும்புல வோர்க்கு
மருங்கல ளுதிக ணல்கா.

42 மன்னவர் வலிக ளெல்லாந் தெய்வத்தின் வலிமு னில்லா
அன்னமா தெய்வஞ் செய்யும் வலியெலா மரண்முன் றட்ட
முன்னவன் வலிமுன் னில்லா வெனப்பலர் மொழிவ தெல்லாம்
இன்னபாண் மகளிற் காணப் பட்டதென் றிறும்பூ தெய்தா.

43 மின்னியல் சடையி னுனை விடைகொடு வலஞ்செய் தேகி
இன்னிய மியக்கஞ் செய்ய வெழில்கொடன் கோயி லெய்தித்
தொன்னிதி பெற்றான் போலச் சுகுணபாண் டியனைப் பெற்று
மன்னிய மகிழ்ச்சி வீங்க வைகினு னிராச ராசன்.

7

மீநாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழ் என்பது தமிழில் வழங்குகின்ற பலவகைப்பட்ட பிரபந்தங்களுள் ஒன்று. இது, தேவரையும் மக்களுள் சிறந்தாரையும் பற்றி, அவர்தம் பிள்ளைப் பருவத்து நிகழ்ச்சிகளைப் பத்துப் பருவங்களாகப் பகுத்துக்கொண்டு பாடப்படும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்றும் வரும் இருவகைப் பிள்ளைத்தமிழ்களுள், **மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழ்** பெண்பாற் பிள்ளைத் தமிழாகும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல் என்ற பெண்பாற் பிள்ளைத் தமிழிற் குரிய பத்துப் பருவங்களுள், மூன்றாந் திங்கள் முதல் இருபத்தொன்றாந் திங்கள் வரையில் நிகழும் அவளுடைய பிள்ளைப் பருவத்து நிகழ்ச்சிகளைப் பற்றிய அழகிய பாடல்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழைப் பாடியவர் குமர குருபர அடிகள். இவர் பாண்டி நாட்டிலே, திருநெல்வேலி ஜில்லாவிலே உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரின் வடபாலுள்ள ஸ்ரீ கைலாசபுரத்தில் இற்றைக்கு முந்நூற்றுப்பத்து ஆண்டுகளுக்கு முன்னே தோன்றியவர். இவருடைய தந்தையார் பெயர் சண்முக

TAMIL NADU AR...
No. ______
111051
EGMORE, MADRA...

சிகாமணிக் கவிராயர் ; தாயார் பெயர் சிவகாம சுந்தரி அம்மையார். ஐந்தாண்டு வரையில் ஊமையாகவே இருந்த குமர குருபரர் திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் வாய் திறந்து பேசத் தொடங்கி, அப்போதே அப் பெருமான் மீது கந்தர் கலிவெண்பாவைப் பாடினுர் என்ப. வேளாளர் மரபிலே தோன்றிய இவர், இளமையிலேயே துறவு பூண்டு, மாயூரத்திற் கருகிலேயுள்ள தருமபுர ஆதீனத்தில் நான்காம் குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணி தேசிகரையடைந்து ஞானுபதேசம் பெற்றுர்.

இவர் பாடிய பிரபந்தங்கள் பதினுன்கு. அவை கந்தர் கலிவெண்பா, மதுரை மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீநாட்சியம்மைகுறம், மீநாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான் மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, பண்டார மும் மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை என்பன.

மீநாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரையில் அரசு புரிந்திருந்த திருமலை நாயக்கர் முன்பு அரங்கேற்றம் செய்யப்பட்டது. அரங்கேற்றம் செய்கையில் அப் பிள்ளைத் தமிழின் வருகைப் பருவத்துத் 'தொடுக்குங் கடவுட் பழம் பாடற் றொடையின் பயனே' என்று தொடங்கும் பாடலுக்குக் குமரகுருபரர் பொருளுரைக்கும்போது, மீநாட்சியம்மையாரே ஓரழகிய இளம் பெண்ணுகத் திருமலை நாயக்கர் மடியிலிருந்து பாடலையும் பொருளையும் கேட்டு உவந்து, அரசர் கழுத்தி லணிந்திருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந் தருளினர் என்பர். முத்தப் பருவத் தொடக்கத்தில் வரும் 'காலத்தொடு கற்பனை கடந்த' என்று தொடங்கும் பாடல் அரங்கேற்றம் செய்வித்தபோதுதான் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது என்பது சிலர் கொள்கை.

திருமலை நாயக்கர் மதுரையில் அரசு புரிந்தது கி.பி. 1623-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1659-ஆம் ஆண்டுவரையி லாதலாலும், அரசர் வரலாற்றில் குமரகுருபரர் பிள்ளைத் தமிழை அரங்கேற்றம் செய்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளதாதலாலும் குமரகுருபரர் காலம் உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடிகின்றது.

செங்கீரைப் பருவம்

1 சுற்றுநெடு நேமிச்சு வர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கால் நிறுத்திமேருத்
தூணென்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
வெற்றுபுன லிற்கழுவு புவனப்ப ழங்கல
மெடுத்தடுக் கிப்புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்
முற்றவெளி யிற்றிரியு மத்தப்பெ ரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவு
முனியாது வைகலுமெ டுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூடமூடுஞ்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடியருளே.

வருகைப் பருவம்

2 தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ் சுவையே
யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும்
விளக்கே வளர்சிமய
விமயப் பொருப்பில் விளையாடு மிளமென்
பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்துநின்ற வொருவன்
திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு முயிரோ
வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள வஞ்சிக்
கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு வாழ்வே
வருக வருகவே.

அம்புலிப் பருவம்

3 குலத்தோடு தெய்வக்கு ழாம்பிழிந் தூற்றிக்
குடித்துச் சுவைத்துமிழ்ந்த
கோதென்று மழல்விடங் கொப்பளிக் கின்றவிரு
கோளினுச் சிட்டமென்றுங்
கலைத்தோடு மூடிக்க ளங்கம்பொ திந்திட்ட
கயரோகி யென்றுமொருநாள்
கண்கொண்டு பார்க்கவும் கடவதன் றெனவுங்
கடற்புவி யெடுத்திகழவிட்
புலத்தோடு முடுமீன் கணத்தோடு மோடுநின்
போல்வார்க்கு மாபாதகம்
போக்குமித் தலமலது புகலில்லை காண்மிசைப்
பொங்குபுனல் கற்பகக்கா
டலைத்தோடு வைகைத்து றைப்படிம டப்பிடியொ
டம்புலீ யாடவாவே
யாணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுட
னம்புலீ யாடவாவே.

அம்மானைப் பருவம்

4 குலைபட்ட காந்தட் டளிர்க்கையிற் செம்மணி
குயின்றவம் மனைநித்திலங்
கோத்தவம் மனைமுன் செலப்பின் செலுந்தன்மை
கோகனக மனையாட்டிபாற்
கலைபட்ட வெண்சுடர்க் கடவுடோய்ந் தேகவது
கண்டுகொண் டேபுழுங்குங்

காய்கதிர்க் கடவுளும் பின்றொடர்வ தேய்ப்பக்
 கறங்கருவி தூங்கவோங்கு
மலைபட்ட வாரமும் வயிர்மும் பிறவுமா
 மாமணித் திரளைவாரி
மறிதிரைக் கையா லெடுத்தெறிய நாற்கோட்டு
 மதகளிறு பிளிறியோடு
மலைபட்ட வைகைத் துறைச்சிறை யனப்பேடை
 யம்மானை யாடியருளே
யாகங்க லந்தொருவர் பாகம் பகிர்ந்தபெண்
 ணம்மானை யாடியருளே.

ஊசற் பருவம்

5 குழியும் பசுங்கண் முசுக்கலைவெ ரீஇச்சிறு
 குறும்பலவி னெடியபாரக்
கொம்பொடி படத்தூங்கு முட்புறக் கனியின்
 குடங்கொண்டு நீந்தமடைவாய்
வழியுங் கொழுந்தே னுவட்டெழுத டங்காவின்
 வள்ளுகிர்க் கருவிரற்கூன்
மந்திக ளிரிந்தேகும் விசையினில் விசைந்தெழு
 மரக்கோடு பாயவயிறு
கிழியுங் கலைத்திங்க ளமுதருவி தூங்குவ
 கிளைத்துவண் டுழுபைந்துழாய்க்
கேசவன் கால்வீச வண்டகோ ளகைமுகடு
 கீண்டுவெள் ளருவிபொங்கிப்
பொழியுந் திறத்தினை நிகர்க்குமது ரைத்தலைவி
 பொன்னூச லாடியருளே
புழுகுநெய்ச் சொக்கர்திரு வழகினுக் கொத்தகொடி
 பொன்னூச லாடியருளே.

8

புலவராற்றுப்படை

புலவர் ஆற்றுப்படை என்பது ஆற்றுப்படை என்னும் நூல்வகையைச் சார்ந்தது. வள்ளல் ஒருவனிடம் பரிசில் பெற்றுவரும் ஒருவன், தான் பெற்ற பெருவளத்தை, அதுபெற விரும்பும் ஒருவனுக்குக் காட்டி, அவ் வள்ளலுடைய இடமும் இயல்பும் அவனை யடையும் வழியும் உணர்த்தித் தான் பெற்ற பேற்றை அவனும் அவ் வள்ளலிடம் சென்று பெறுமாறு அவ் வழியில் அவனைச் செலுத்துதல் என்னும் பொருள் அமையப் பாடும் ஒரு வகை நூலே ஆற்றுப்படை எனப்படும். ஆற்றுப்படை என்பது ஆறு, படை எனப் பிரிபடும். ஆறு - வழி; படை - படுத்தல்; பொருத்துதல்; செலுத்துதல். வழி கூறி அவ் வழியில் பொருத்துதல் அல்லது செலுத்துதல் என்பது ஆற்றுப்படை என்ற தொடரின் பொருளாகும்.

'புலவர் ஆற்றுப்படை' என்பது இரையூர் வடமலையப்பப் பிள்ளையன் என்னும் வள்ளலிடம் பரிசில் பெற்று வரும் புலவனொருவன் பரிசில் பெற விரும்பி எதிர்வரும் புலவனொருவனை அவ் வள்ளலிடம் ஆற்றுப் படுத்துவதாகப் பாடப் பட்டுள்ள நூலாகும்.

இந் நூலை இயற்றியவர் திருக்குருகூர்ச் சிறிய இரத்தினக் கவிராயர். இவர் மாறனலங்கார வுரையாசிரியரான திருமேனி இரத்தினக் கவிராயருடைய வழியில் வந்தவர். இந் நூல் அரங்கேற்றிய காலம் கி.பி. **1692**; இடம் திருச் சிராப்பள்ளி. சொக்கநாத நாயக்கர் மனைவியான மங்கம்மாள் அரசுபுரிந்த காலமே **(1689-1704)** இந் நூலாசிரியர் காலமாகும்.

புலவராற்றுப்படை என்னும் இந் நூல், பத்துப் பாட்டில் வரும் பழைய ஆற்றுப்படைகள் போலக் கடின நடையில் இல்லாமல் உலக வழக்கையும் காலப் போக்கையும் ஒட்டி எளிய நடையில் அமைந்திருத்தலால் இஃது எல்லோருக்கும் இன்பம் தருவதாயுள்ளது. மாணவர்களுக்குத் தேவையில்லாத சில பகுதிகளை நீக்கித் தொடர்ச்சியருதபடி இந் நூல் ஈண்டுச் சுருக்கிப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூல் முழுவதையும் படிக்க விரும்புவோர் அதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பெற்றுக்கொளளலாம்.

இந் நூலின் பாட்டுடைத் தலைவரான வடமலையப்பப் பிள்ளையன், திருச்சிராப்பள்ளி யில், கார்காத்த வேளாளர் குலத்தில், சைவ மரபில் பிறந்தவர். தம் தாய் தந்தையரை இளமையிலேயே இழந்த இவர், நாயக்கர் குலகுருவான தாதா சாரியரிடம் வளர்ந்து, கல்வி பயின்று, நாயக்க வரசில் படைத்தலைவராகி, நற் குண நற்செயல்களால் அரசருடைய நற்கருத்துப் பெற்று, ஐயன் என்னும் பட் டத்தோடு திருநெல்வேலிக்கு இராஜப் பிரதிநிதியானார். அதன் பின்பு இவர் பெயர் (வடமலையப்பப் பிள்ளை + ஐயன்) - வடமலையப்பப் பிள்ளையன் என வழங்கலுற்றது. இவர் இருந்து அரசியல் நடத்திய இடம் இரையூர். இஃது இரசையென்றும் வழங்கும்.

இவருடைய அரண்மனை, " திருநெல்வேலிப் பகுதியில் மேலை ரத வீதியில் குறுக்கிட்டுச் செல்லும் சுடலைமாடன் கோவிற் றெருவில், தற்காலம் பிள்ளையன் கூட்டத்தார் வசிக்கும் மாளிகைகள் அமைந்த இடமே என்றும், வடமலையப்பப் பிள்ளையன் கச்சேரி இப்பொழுது பிள்ளையன் கட்டளையாபீஸ் வைத்திருக்கும் நவரங்கப் பட்டகசாலை யென்று பேர் போன இடமென்றும் கேள்வி " என்று இவர் இயற்றிய மச்சபுராண அச்சுப் பிரதியின் முகவுரை (தாம்ஸன் கம்பெனி, சென்னை) கூறுகின்றது.

மச்சபுராணம் அரங்கேறிய காலம் கி.பி. **1706-1707** ஆதலால், அஃது ஆற்றுப் படையிற் கூறிய நூல்களுக்குப் பிற்பட்டதாகும்.

கலைக்கடல் கடந்தவன் கலிக்கடல் கடத்தும் வள்ளலைப் பெறுது வருந்துதல்

காவினை யாடும் களிமயில் கடுப்ப
நாவினை யாடும் நற்றமிழ்க் கவிஞன்
கவியொடு வாதி கமகன்வாக் கியெனப்
புவியிடம் பழிச்சிய புலமை யாளன்
அறம்பொரு ளின்பம்வீ டாமெனும் நான்கும்
திறம்பட வுணர்ந்து செப்புநூ லறிஞன்
தொல்காப் பியமுதல் ஒல்காப் பனுவலுள்

எழுத்துச் சொற்பொருள் யாப்பணி எனத்துறை
பழுத்த இலக்கணப் பவ்வம் கடந்தும்,
கலக்கும்வெங் கலிக்கடல் கடப்பரி தாகி,
ஈகை என்னும் இரும்புணை ஏற்றி
ஓகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினில்
சேர்த்திஉயிர் காக்கும் தியாகி என்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்தலின் மையினால்,

(அத்தகைய தியாகி ஒருவனைத் தேடிப் புறப்பட்டான்.)

வள்ளல் வடமலையப்பன் வளஞ் சொல்லி, எதிர்ப்பட்ட புலவன் எய்திய புலவனை அவன்பாற் செல்ல ஆற்றுப்படுத்தல்

“ மாரிசூழ் குடுமி நேரிமால் வரையான்
கரைபொரு தரங்கத் தரளமா நதியான்
இயலிசை முத்தமிழ் யாவரும் உணர்ந்து
பயிலிருங் கேரளப் பாண்டிநன் னுடன்
இரையூர் வளைதவழ் இரையூர்க் கதிபன்
பரசிய மூவகை முரசதிர் முன்றிலன்
ஆழிசூழ் புவிபுகழ் மேழியந் துவசன்
சற்குண லளிதன் சரசசல் லாபன்
மருண்டுசொற் பனத்தும் இரண்டுரை யாத
சத்திய வசனன் நித்யகல் யாணன்
அன்பு கனிந்த இன்பக் கொழுங்கனி
பெருமைக் களஞ்சியம் தருமக் கொள்கலம்
கற்றவர் கண்மணி உற்றவர் பிராணன்
நாவலர் கற்பகம் மேவலர் கூற்றம்
ஏற்றவர் கலிநோய் மாற்றுசஞ் சீவி
தரைமுழு தாளும் துரைகள்சி காமணி
தந்திர விவேகி மந்திர யூகி
ஒருதனி வீரப் பொருதிறல் சேவகன்
சைவசித் தாந்தம் கைவரு குரிசில்
பாவியல் தமிழ்தேர் காவியப் புலவர்
கரகம் பிதத்துடன் சிரகம் பிதம்செயத்
தேனாற் றிருந்து செவிதொறும் கனிய
நானூற்றுக் கோவையும் நாற்கவி வண்ணமும்
பலர்புகழ் நீடூர்த் தலபு ராணமும்
இருநிலம் புகழும் ஒருகலம் பகமும்
நீடுல குவப்பப் பாடிநிலை நிறுத்தும்
கூறுசொல் கவிதா சாருவ பௌமன்
தருவொப் பெனவெழு தாரணி புரக்கும்
இருவப் பன்பெறும் இராச குமாரன்
ஞான கரன்அபி மான பரணன்
செந்தமிழ்க் குதவும் தியாக வாரிதி
முத்துநா யகமிவர் மூவேந் தருக்கும்
பெருமைபெற் றுயர்ந்த அருமைமைத் துனவேள்

இரசைப் பதிவளர் இருவப் பனையருள்
வரிசைப் பெரியவன் வடமலை யப்பனைத்
தஞ்சமென் றடைந்தேன் ; அஞ்சலென் றளித்தான் ;
இத்திறம் பாரவன் கைத்திறம் பாடினன் ;
ஆதலால், நீயும் அவனையே பாடிப்
போதி" என் றுரைப்பப் புகழ்ந்தவற் பணிந்து,
" சிந்தையில் எழுந்த சிறுகளி முதிரத்
தந்தனை செல்வம் தமிழ்வலோய் !" என்னச்
சென்றனன்.

9

சதகங்கள்

தொண்டை மண்டல சதகம்

தொண்டைமண்டல சதகம் என்பது தொண்டை மண்டலத்தைப் பற்றி நூறு பாடல்களால் பாடப்பட்ட ஒரு நூலாகும். இந்த நூல் மாவண்டூரிலிருந்த கஸ்தூரி முதலியார் மைந்தர் கறுப்ப முதலியார் வேண்டுகோளின்படி, பொன் விளைந்த களத்தூரில் செங்குந்தர் மரபினராகிய படிக்காசுப் புலவர் என்பார் பாடியது. இவர் பாடிய பாடல் கேட்டுக் களிப்படைந்த முதலியார் இவருக்கு ஆயிரம் பொற் காசுகள் கொடுத்ததோடு இவர் ஏறியிருந்த பல்லக்கும் சுமந்தார் என்பர். இவர் காலம் இற்றைக்கு (ஏறக்குறைய) 270 ஆண்டுகளுக்குமுன் என்பர். இவர் பாடிய மற்றொரு நூல் புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம். இவருடைய பாடலின் சிறப்பு,

" மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்ததமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்த ஏட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது
நளினந் தானே "

என்ற பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாட்டால் விளங்கும்.

சோழ மண்டல சதகம்

சோழ மண்டலத்தைப் பற்றி நூறு பாடல்களால் பாடப்பட்ட ஒரு நூலே **சோழமண்டல சதகம்** ஆகும். இந் நூலை இயற்றியவர் வேளூர் ஆத்மநாத தேசிகர். இவருடைய காலம் கி.பி. 1650க்கும் 1728-க்கும் இடைப்பட்டது ; சகஜிமஹாராஜா காலம். இந் நூல் சித்தாய்மூர் அதிபரான அருணாசலவேள் வேண்டுகோளின்படி இயற்றப்பட்டது. 1916-ஆம் ஆண்டில் திருவாரூர் இலக்கணவிளக்கப் பரம்பரை ஸ்ரீ சோமசுந்தர தேசிகரால் இந் நூல், பாடப்பெற்றோர் வரலாற்றுடன் அச்சிடப்பெற்றுள்ளது.

பாண்டி மண்டல சதகம்

பாண்டி மண்டலத்தைப் பற்றி நூறு பாடல்களால் ஆன நூலே **பாண்டி மண்டல சதக**மாகும். இது மதுரைமா நகரில் வாழ்ந்த வீரபூபதி மைந்தரான ஐயம் பெருமாள் பிள்ளை என்பவரால் பாடப்பட்டது. இவர் வேளாளர். இச் சதகம் தொண்டைமண்டல சதகத்திற்குப் பிற்பட்டதென்பது இதன் பதிகப் பாட்டினால் தெரிகின்றது.

கொங்கு மண்டல சதகம்

கொங்குமண்டலத்தைப்பற்றி நூறு பாடல்களால் பாடப்பட்ட நூல் **கொங்கு மண்டல சதக**மாகும். இச் சதகம் பாடினார் யாவர் என்பது தெரியவில்லை.

தொண்டை மண்டல சதகம்

தொல்காப்பியப் பாயிரம்

1 படவேங் கடற்கட லன்னதொல் காப்பியப் பாயிரஞ்சொல்
விடவேங் கடலின்றி யேபனம் பார்மற் றெல்லைசொல்லக்
கடவேங் கடலன்ன செந்தமிழ்க் கேயென்று காட்டுதற்கு
வடவேங் கடந்தென் குமரியென் றூர்தொண்டை மண்டலமே.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

2 சீருறும் பாடல்பன் னீரா யிரமும் செழுந்தமிழ்க்கு
வீரர்தம் சங்கப் பலகையில் ஏற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ சிடும்தொண்டை மண்டலமே.

முதுமொழிக் காஞ்சி

3 ஊரார் மலிபுலி யூர்க்கோட்ட நற்குன்றத் தூரினுள்ள
தீரா வளமலி பாக்கிழ வோன்புகழ் சேக்கிழவோன்
காராளன் கூடல் கிழவோன் முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசை கிழவோனும் வாழ்தொண்டை மண்டலமே.

நன்னூலும் சின்னூலும்

4 தன்னூர்ச் சனகையில் சன்மதி மாமுனி தந்தமைந்தன்
நன்னூல் உரைத்த பவணந்தி மாமுனி நற்பதியும்
சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்
மன்னா புரத்திரு வன்னமின் னேதொண்டை மண்டலமே.

கருணாகரத் தொண்டைமான்

5 பண்டையோர் நாளையில் ஒரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவில் தீட்டுவித் தோன்கழற் செம்பியன்செய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனம் கருணா கரன்தொண்டை மண்டலமே.

" வையகமெல்லாம் "

6 பொய்யக மாகிய மாயாப் பிரபஞ்சம் போக்குதற்குக்
கையக நெல்லிக் கனியதன் றேகச்சி யேபெரிதாய்
மெய்யக மேபுரி காரிகைப் பாட்டில் விளங்கவைத்த
வையக மென்னும் தமிழே புனைதொண்டை மண்டலமே.

கம்பர் வாக்குப் பொய்யாமை

7 அழுவதுங் கொண்டு புலம்பாமல் நஞ்சுண் டதுமறைத்தேர்
எழுவதுங் கொண்டு புகழ்க்கம்ப நாடன் எழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையில்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தால்தொண்டை மண்டலமே.

கச்சியப்ப சிவாச்சாரியார்

8 அந்தப் புரமும் அறுநான்கு கோட்டகத் தாரும்ஒன்றுய்க்
கந்தப் புராணம் பதினு யிரம்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்கையும் தாங்கிக் குமரர்பொற சந்நிதிக்கே
வந்தப் புராணம் அரங்கேற்றி னுர்தொண்டை மண்டலமே.

அந்தகக் கவி வீரராகவ முதலியார்

9 ஈழந் திரைகொண் டெதிர்த்தோரை வென்ற இரவிகுலச்
சோழன் கவியும் அவன்தேவி பாடலும் சூட்டிக்கொண்டான்
வேழம் புரைசொற் கவிவீர ராகவன் வீற்றிருந்து
வாழுந் தமிழ்மண் டலமல்ல வோதொண்டை மண்டலமே.

பரிமேலழகர்

10 வள்ளல் சிலேப்பெரு மாள்நச்சர் சாத்தர் வழுதிமுதல்
தள்ளுவன் ஆர்க்கும் தலையான பேரையும் தன்னுரையை
விள்ளுவன் ஆர்க்கும் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்
வள்ளுவ னுர்க்கு வழிகாட்டி னுன்தொண்டை மண்டலமே.

மண்டலபுருடன்

11 பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொல்
எண்டிசை யின்சொல் வடமொழிச் செய்யுள்எல் லாமுணர்ந்தே
தண்டமிழ் கொண்டு நிகண்டுசூ ளாமணி தானுரைத்த
மண்டல வன்குடி கொண்டது நீள்தொண்டை மண்டலமே.

சோழ மண்டல சதகம்

சடையப்பமுதலியார்

1 எண்ணத் தகும்பார் உள்ளளவும் இரவி
மதியம் எழுமளவும்
கண்ணற் கினிய சயராம கதையில்
ஒருபான் கவிமுழுதும்
வெண்ணெய்ச் சடையன் சடையனென விறலார்
கம்பன் விளங்கவைத்த
வண்ணத் துரைவே ளாண்பெருமான் வளஞ்சேர்
சோழ மண்டலமே.

2 அளிக்கும் படைமூ வேந்தரும்கொண் டாடும்
விருந்தால் அதிசயமாய்த்
திளைக்கும் திரிகர்த்த ராயனெனச் செப்பும்
வரிசைத் திறஞ்சேர்ந்தோன்
விளைக்கும் அரிசி மாற்றியநீர் வெள்ளம்
கிழக்கு விளையுமென
வளைக்கும் பெருமைப் புதுவையர்கோன் வளஞ்சேர்
சோழ மண்டலமே.

3 விருந்து நுகர்வோர் கைகழுவ விளங்கும்
புனற்கா விரியென்றார்
தருந்தா யனைய புகழ்ப்புதுவைச் சடையன்
கொடையார் சாற்றவல்லார்
பரிந்தா ரெவர்க்கும் எப்போதும் பாலுஞ்
சோறும் பசிதீர
வருந்தா தளிக்க வல்லதன்றோ வளஞ்சேர்
சோழ மண்டலமே.

வீரசோழியம்

4 ஆர வார விலக்கண நூல் ஐந்து
முழங்க அதற்கெதிர் நூல்
பாரின் மீது தமிழ்க்கூத்தன் பாடி
யமைத்தான் பயனோர்ந்தே
வீர சோழ னுடனிருந்து வியந்தே வீர
சோழிய நூல்
வார மேற அரங்கேற்றி வைத்தார்
சோழ மண்டலமே.

யாப்பருங்கலக் காரிகை

5 இடமண் டியயாப் பருங்கல நூல் எனுங்கா
ரிகையிற் பதித்தமணித்
தடமண் டியதா மரையின்எனுந் தமிழ்போல்
உலகந் தனிலுண்டே

திடமண் டியவத் தமிழ்க்குதவும் சீமான்
செழுந்தென் மண்டலமும்
வடமண் டலமும் பரவுபுத்தூர் வளஞ்சேர்
சோழ மண்டலமே.

கரிகாற் பெருவளத்தான் பட்டினப்பாலே கொண்டது

6 குணக்கின் மலைபோல் பதினாறு கோடி
செம்பொன் கொடுத்தவிலை
இணக்கும் ஒருபட் டினப்பாலை எவரும்
புகழ்தற் கெளிதாமோ
பணக்குன் றனந்த மேருவெனப் பயில்கா
விரிப்பூம் பட்டினம்போல்
மணக்கும் பதிகள் பலகாணும் வளஞ்சேர்
சோழ மண்டலமே.

பாண்டி மண்டல சதகம்

1 ஒருகவிக் கோரொரு தேங்காய்பொன் னூற்செய் துருட்டிக்கல்வி
பெருகச்செய் நாவலர் வாழக் கொடுத்துப்ர தாபம்பெற்றோன்
திருமலி தஞ்சையிற் கோவைத் தமிழ்கொண்டு செல்வமிக
வருதரு வாகிய வாணனும் பாண்டியன் மண்டலமே.

2 எரொக்கும் செஞ்சொல் அகப்பொருள் நூலுக் கிலக்கியமாய்
நேரொக்க வாழும் இரட்டையர் பாடி நிறுத்தவவர்
பூரிக்கத் தஞ்சைநற் கோவைகொண் டேமெச்சிப் பொக்ஷநிதி
வாரிக்கொ ளச்சொன்ன வாணனும் பாண்டியன் மண்டலமே.

3 தெரிபுல வோர்தம் மதுரைமட் டாச்சொலச் சென்றபொதி
எருதினில் எற்றிப் பொதித்தலம் சென்றதற் கேயஞ்சலாய்ப்
பெருமுர சார்த்திடக் கப்பல்நற் கோவைப்ர பந்தங்கொண்ட
வருகரு மாணிக்கன் வாழ்வான பாண்டியன் மண்டலமே.

4 பேறுதந் தாளும் உமையவள் தேகப் பெருநலத்தைக்
கூறும் சவுந்த்ர ல்கரியென் றோர்தமிழ் கூறிமிக
வீறிய நல்ல கவிராச பண்டிதர் மேன்மை யொன்ற
மாறன் அரசு புரிந்தாளும் பாண்டியன் மண்டலமே.

5 தேனேறும் இன்சொல் இராமா யணத்தில் திருவழுந்தூர்
ஆனே றனைய தமிழ்க்கம்ப நாடன் அமைத்துவைத்த
தானேரில் கீர்த்திசெய் வெண்ணெய்நல் லூரிற் சடையனெனும்
வானேறு சீர்த்திகொள் வேளாளர் பாண்டியன் மண்டலமே.

கொங்கு மண்டல சதகம்

1 நிலவுல கத்திற் பலகலை தேர்ந்த நிபுணருள்ளே
புலவன் திருவள் ளுவனென நேயம் பொருந்தவுரை
குலவு மதுரைத் தமிழா சிரியர்செங் குன்றூர்கிழார்
வலிமை யுறவறுஞ் செங்கோ டையுங்கொங்கு மண்டலமே.

2 நாட்டினைத் தம்பி கொளக்காடு சென்று நலிவுறுநாள்
பாட்டிசைத் தோர்புல வன்வேண்ட என்தலை பற்றியறுத்
தீட்டியென் தம்பி யிடத்தீயிற் கோடிபொன் எய்துமென்று
வாட்டடங் கைத்தரு மக்கும ணன்கொங்கு மண்டலமே.

3 சாதலை நீக்கும் அருநெல்லி தன்னைத் தமிழ்சொலவ்வைக்
காதர வோடு கொடுத்தவன் கன்னலை அங்குநின்று
மேதினி மீதிற் கொடுவந்து நட்டவன் மேன்மரபோர்
மாதிரஞ் சூழரண் மேவுவ துங்கொங்கு மண்டலமே.

4 நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற கொங்கினின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெள்க வேகொங்கு வேளடிமை
மாதைக்கொண் டுத்தரஞ் சொன்னது வுங்கொங்கு மண்டலமே.

5 சொல்காப் பியத்தின் குணதோஷம் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி உபகரித்த
வல்கா வலன்சிய கங்கனின் றுள்கொங்கு மண்டலமே.

குறிப்புரை

1. புறநானூறு

1. சேயிழை - செம்மை இழை - சிவந்த அணி. வாள் நுதல் - ஒளி தங்கிய நெற்றி. தடவு வாய் - பெரிய இடம்; தட என்ற உரிச்சொல் திரிந்து நின்றது. கலித்த - தழைத்த. மா - கரிய. சிதர் - துளி. கலாவ - கலக்க. மால்பு - கண் ஏணி. சாயல் - மென்மை.

'விறலி, பாரிவேள்பாற் பாடினை செலின், சேயிழை பெறுகுவை' எனக் கூட்டுக. விறலி - பாடி ஆடுபவள்; பாடினி.

பாடாண்டிணை :—இது புறத்திணைகளுள் ஒன்று. பாடப்படும் சிறந்த ஆண் மகனுடைய புகழ், வலி, கொடை, அளி முதலியவற்றைத் தெரிந்து கூறுவது இத் திணையின் இலக்கணமாம்.

விறலியாற்றுப்படை :—இது பாடாண்டிணையுள் வரும் ஒரு துறை. அரசனுடைய புகழைப் பாடி ஆடுதல் பயின்றவளாய்ப் பரிசில் பெற விரும்பி நிற்கும்

விறலி ஒருத்தியை, ஓர் அரசனிடம் பரிசில் பெற்றுவரும் விறலி ஒருத்தி, அவ் வரசனை அடையும் வழி கூறி, அவளை அவ் வழியிற் செலுத்துதல் விறலியாற்றுப் படை ஆகும்.

2. பல ஏத்தி - பல புகழையும் வாழ்த்தி. செந் நாப் புலவர் - செவ்விய நாவையுடைய அறிவுடையோர். புரப்பது - காப்பது.

'உலகு புரத்தற்கு மாரியும் உண்டாயிருக்கப் பாரி ஒருவனையே புகழ்வர் புலவர்' எனப் **பழித்ததுபோலப் புகழ்ந்தவாறு.**

இயல் மொழி :—இது பாடாண்டிணையுள் ஒரு துறை. ஒரு தலைவன் இயல் புகளைப் புகழ்தல் இத் துறையாகும். 'இன்னார் இன்னது கொடுத்தார் ; அவர் போல நீயும் கொடுப்பாயாக' என யாவரும் அறியக் கூறுதலும், தலைவனுடைய முன்னோர் செய்திகளை அவன்மீ தேற்றிக் கூறுதலும், தலைவன் தன்மைகளைப் புகழ்ந்து கூறுதலும் இத் துறையின் இலக்கணமாகும்.

3. மாட்டிய - மடுத்து எரிக்கப்பட்ட ; மூட்டிய. வறல் - வற்றுதல். ஆரம் - சந்தனம். சினை - கொம்பு. வரையன் - எல்லையில் நிற்பவன்.

4. அளிது - இரங்கத் தக்கது. அளிதோ என்ற ஓகாரம் வியப்பின்கண் வந்தது. நளி - பெருமை. பயன் - விளையுள். வெதிர் - மூங்கில். ஊழ்க்கும்- முதிர்ந்து உதிரும். ஓரி - தேன் முதிர்ந்தால் அதன்கண் பரக்கும் நீல நிறம் ; முசுக்கலையுமாம். வான்கண் - வானிடம். 'வானத்துக்கண் மீன் அற்று' எனக் கூட்டி, 'அவ் வானத்தின்கண் விண்மீனை யொக்கும்' எனப் பொருளுரைத்துக் கொள்க ; இனிக் கண் அசையுமாம். தாள் - முயற்சி. கொள்ளலிர் - கொள்ள மாட்டீர். சுகிர் புரி நரம்பு - வடித்து முறுக்கப்பட்ட நரம்பு. பண்ணுதல் - இசை கூட்டுதல். விரை - நறு நாற்றம். ஒலி கூந்தல் - தழைத்த கூந்தல். விறலிய ரென்றது, அவர்தம் உரிமை மகளிரை.

நொச்சி :—இது புறத்திணைகளுள் ஒன்று ; பகைவர்க்கு எதிரூன்றி, நொச்சிப் பூமாலை சூடி மதிலைக் காக்கும் வீரர், தம் மதில் காக்கும் திறம் கூறுவது ; மதிலைக் காக்கும் வீரர்கள் சூடிய போர்ப்பூவைப் புகழ்வதுமாம்.

மகள் மறுத்தல் :—இது நொச்சித் திணைத் துறைகளுள் ஒன்று ; ஒரு வீரன் தான் மணம் புரிந்துகொள்வதற்குத் தம் மகளை வேண்டச் சிற் றரண்களி லுள்ளோர் மறுத்துக் கூறுதல் என்னும் பொருளுடையது.

5. கடந்து அடு தானை - வஞ்சியாது எதிர் நின்று கொல்லும் படை. உடலுதல் - போர் செய்தல். ஊர்த்து - ஊர்களையுடையது.

6. அற்றை - ஐயீற்றுடை மென்றொடர்க் குற்றியலுகரத்தின் மெல்லெழுத்து வலிந்து நின்றது. இற்றை என்பதும் அது. வென்று எறி முரசு - வென்று அறைந்த முரசு. ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்ற மையின், 'வென்றெறி முரசின் வேந்தர்' என்றது, ஈண்டு இகழ்ச்சிக் குறிப் பாய் நின்றது.

பொதுவியல் :—வெட்சி முதலிய புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாயுள் ளனவும், அவற்றுட் கூறு தொழிந்தனவுமாகிய பொருள்களைக் கூறுவது இத் திணையின் இலக்கணமாம்.

கையறு நிலை :—பொதுவியல் என்னும் புறத்திணையுள் வரும் ஒரு துறை ; அரசன் இறக்க, அவனைச் சேர்ந்தோர், அவன் இறந்துபாட்டைச் சொல்லி ஒழுக்கந் தளர்தல் என்னும் பொருளுடையது ; கழிந்துபோன பொருளைக் குறித்து இரங்கிக் கூறுதலுமாம்.

7. மட்டு - மது; ஈண்டு மதுச் சாடி : ஆகு பெயர். மை விடை - ஆட்டுக்கிடாய். பழுனி - முதிர்ந்து. மன் : கழிவின்கண் வந்தது. கையற்று - செயலற்று. பழிச்சி - வாழ்த்தி. சேறும் - செல்வேம். வாழி, ஓ: அசை நிலை. பெயர் - புகழ். தொடி - வளை. கிழவர் - உரியவர். ப்டர்ந்து - நினைந்து.

'பறம்பே, பெருவளம் பழுனி நட்டனை முன் ; இனி நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்து சேறும்' எனக் கூட்டுக.

8. சிறுவரை சென்று - சிறிது தொலைவு போய். மன்ற - திண்ணமாக. கவளம் - யானைக்களிக்கும் உணவு ; நெய்ம்மிதி சோறு என்பர். நறவு - மது. வார் அசும்பு - ஒழுகிய மதுச்சேறு. முன்றில் - முற்றம். வீசுதல் - வழங்குதல். நெடியோன் - உயர்ந்தோன்.

'நெடியோன் குன்று தோன்றும்' என்றது, புகழால் உயர்ந்து, காணுதார்க்கும் செவிப் புலனுய்த் தோன்றும், அவன் உளனுய காலத்தில் ; இப்பொழுது பிறமலைபோலக் கட்புலனுகத் தோன்று மளவாயிற்று, எனக் கையற்றுக் கூறிய வாருகக் கொள்க.

9. மை மீன் - கரிய நிறமுடைய் சனி என்னும் விண்மீன். சனி புகைதலாவது இடபம், சிங்கம், மீனம் இவற்றெடு மாறுபடுதல். இவற்றுள் சனி, தனக்குப் பகை வீடாகிய சிங்கராசியில் புகின் உலகிற்குப் பெருந் தீங்கு விளைவிப்பன் என்பதை, "மகத்தில் புக்கதோர் சனியெனக் காணுய்" எனத் தேவாரம் கூறுவது காண்க. தூமம் - புகைக்கொடி ; தூமகேது என்பதும் இதுவே ; இதன் தோற்றம் உலகிற்குப் பெருந் தீங்கு விளைவிக்கும் என்பர் ; "தூமகேது புவிக்கெனத் தோன்றிய" எனக் கம்ப ராமாயணம் குறிப்பது காண்க. புதல் பூ - புதலிடத்து மலரும் பூ. மகவு - குழவி. அமர் கண் - விருப்பத்தை விளைவிக்கும் கண். ஆமா - காட்டுப் பசு. ஆர - மேய. பல்கி என்பதைப் பல்க எனத் திரிக்க. வெருகு - காட்டுப் பூனை. முள் எயிறு - கூரிய பல். முகைக்கும் - அரும்பு விடும். ஆய் தொடி - நுண்ணிய தொழிலையுடைய வளை.

10. அறை - பாறை. பொறை - சிறு குவடு. மணந்த - கூடிய. கொடுகரை - வளைந்த கரை. கிள்வது - உடைவது. மாதோ : அசை. குவைஇய - திரண்ட. மொய்ம்பு - தோள். நாடு குளங் கிள்வது என இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் எறி நின்றது.

11. கார் பெயல் - கார் காலத்து மழை. தலைஇய - பெய்து மாறிய. காண்பு இன் காலை - காட்சி இனிய காலம். வரி - புகர் ; புள்ளி. தெறுழ் வீ - தெறுழினது மலர். தெறுழ் - காட்டகத்து ஒரு கொடி ; புளிமாவுமாம். அளை - மோர். யாணர்த்து - புதுவருவாயை உடையது. நந்தும் - கெடும். பணை - முரசம். இறந்தும் - மிகுத்தும்.

"வள்ளியோன் நாடு இன்னளைப் புளித்து ; யாணர்த்து ; அது நந்துங் கொல்லோ" எனக் கூட்டுக.

12. நிவந்த - ஓங்கிய. கடுவன் - ஆண் குரங்கு. மந்தி - பெண் குரங்கு. கழை - மூங்கில். கறங்கும் - ஒலிக்கும். வணக்கும் - தாழ்விக்கும். மடங்கா விளையுள் - மடக்கப்படாத மிக்க விளைவு.

'பலவின் கனி கவர்ந்துண்ட கடுவன் மந்தியொடு சிறந்து சேண் விளங்கிக் கழைமிசைத் துஞ்சும்' என்றதனால், நீயும் இவரை வரைந்துகொண்டு இன்புற்று வாழ்தல் வேண்டும் என்பது தோற்றி நின்றது.

பரிசிற்றுறை :—இது பாடாண்டிணையுள் ஒரு துறை; அரசன் முன்னே, பரிசிலர், தாம் கருதிய பேறு இஃதெனச் சொல்லுதல் இதன் இலக்கணம்.

உலகில் மகட்பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே 'இவரைக் கொள்வாயாக' என்று இரந்து கூறினமையின், இது பரிசிற்றுறை ஆயிற்று.

13. இவர் - இந்த மகளிர். உடன் - எல்லாம். செல்லா - தொலையாத. படு மணி - ஒலிக்கும் மணி. தடவு - ஓமகுண்டம். புரிசை - மதில். உவரா ஈகை - வெறுப்பில்லாத கொடை. சேடு - பெருமை. ஒலியல் - தழைத்தல். உட்குநர் - பகைவர். உட்கும் - அஞ்சும்.

'வேளே, அண்ணல், இருங்கோவே, புலிகடிமாஅல், கிழவ, நாடு கிழவோய், நீ இப்படிப்பட்ட உயர்ந்த குடியிற் பிறந்தவ னாதலால், யான் தர இவரைக் கொண்மதி' எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

யான் இவருடைய தந்தை தோழனாதலாலும் அந்தண னாதலாலும் யான் தர நீ இவரைக் கோடற்குக் குறையில்லை என்பது கருத்து.

14. ஆட்ட - அலைப்ப. கட்சி - புகலிடம். கடறு மணி - வரைச் சாரலில் உள்ள மணி. கிளர - மேலே கிளம்ப. மிளிர - விளங்க. கடிய கதழும் - விரைய ஓடும். படப்பை - பக்கம். இருபால் பெயரிய உருகெழு மூதூர் - சிற்றரையம் பேரரையம் என இரு கூற்றால் பெயர் பெற்ற அச்சம் தோற்றுவித்தல் பொருந்திய பழைய ஊர். தாயம் - உரிமை. தேற்றா - தெளியாத. நோற்றிசின் - பொறுப்பாயாக. விடுத்தனன் - விடை கொண்டேன். அடுக்கம் - அரை மலை; சரிவு. மா தகடு ஒள் வீ - கரிய புறவிதழையுடைய ஒள்ளிய பூ. தாய - பரந்த. வைப்பு - ஊர்.

'புலி கடி மாஅல், அண்ணல், நாடு கிழவோய், அரையத்துக் கேடும் கேள் இனி; அது, கழாஅத்தலையை இகழ்ந்ததன் பயன்; இப்பொழுது எவ்வி தொல்குடிப் படீஇயர்; இவர் பாரி மகளிர் என்ற புன் சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே, நின்னை விடுத்தேன்; நின் வேல் வெல்வதாக' எனக் கூட்டி வினைமுடிவு செய்க.

நீடு நிலை அரையத்துக்கேடும் கழாஅத்தலையை இகழ்ந்ததன் பய னென்ற உம்மையான் இவ் விகழ்ச்சியும் உனக்குக் கேடு தரும் என்பதாயிற்று.

'வெலீஇயர் நின்வேல்' என்றது குறிப்பு மொழி.

'நுந்தை தாயம் நிறைவுற வெய்திய' என்பதும், 'நும்போ லறிவின்' என்பதும் இகழ்ச்சி தோன்ற நின்றன.

'வேங்கைவீ தாய துறுகல் இரும்புலி வரிப்புறங் கடுக்கும்' என்ற கருத்து: 'துன்பம் செய்யாததும் துன்பம் செய்வதுபோலக் கண்டார்க்கு அச்சம் வரத் தோன்றும்' என்பது: இதுவும் இகழ்ச்சி தோன்ற நின்றது.

2. திருக்குறள்

இல்லற வியல்

1. பொறையுடைமை

பொறையுடைமையாவது : காரணம் பற்றியாவது அறியாமையாலாவது ஒருவன் தமக்குத் தீங்கு செய்தவிடத்துத் தாமும் அதனை அவனிடத்தில் செய்யாமல் பொறுத்தலை யுடையராதல்.

1. அகழ்வார் - தோண்டுபவர். இகழ்வார் - அவமதிப்பவர். தலைமுதன்மையான அறமாம்.

2. பொறுத்தல் - பொறுத்துக் கொள்ளுக. இறப்பு - மிகை ; தீமை.

3. இன்மை - வறுமை. விருந்து ஒரால் - விருந்தினரை நீக்குதல் : தழுவல் என்பது தழால் என்று ஆவது போன்று, ஒருவல் என்பது ஒரால் என்று ஆயிற்று. மடவார் - அறிவில்லாதவர். இஃது **எடுத்துக்காட்டுவமையணி**.

4. நிறையுடைமை - நற்குணங்களெல்லாம் ஒன்றுனும் குறைவின்றி நிறைந்திருத்தல் ; சால்புடைமை.

இவை நான்கு பாட்டாலும் பொறையுடைமையின் சிறப்புக் கூறப்பட்டது.

5. ஒறுத்தார் - தண்டித்தவர். ஒன்ருக - ஒரு பொருளாக. வையார் - மனத்தில் கொள்ளார். பொதிந்து வைத்தலாவது: நிறையுடைமை காரணமாக இடைவிடாது நினைத்தல்.

6. பொன்றுந் துணையும் - (உலகம்) அழியுமளவும்.

7. திறனல்ல - செய்யத் தகாத கொடிய செயல்கள். நோ - துன்பம்.

8. மிகுதியால் - மனச் செருக்கினுல். மிக்கவை - தீயவை. தகுதி - பொறுமை.

இவை நான்கு பாட்டாலும் பிறர் செய்த குற்றங்களைப் பொறுத்தல் சொல்லப்பட்டது.

9. துறந்தாரின் - துறந்தவரைப்போல. இறந்தார் - (நல்வழியைக்) கடந்தவர். நோற்கிற்பவர் - பொறுத்துக் கொள்ள வல்லவர்.

10. நோற்பார் - பொறுப்பவர்.

இவை இரண்டு பாட்டாலும் பிறர் வருத்தமுண்டாகச் சொல்லியவற்றைப் பொறுத்தல் கூறப்பட்டது.

2. அழுக்காருமை

அழுக்காருமை என்பது பிறர் உயர்ச்சியைக் கண்டு பொறுக்கமாட்டாமையைச் செய்யாமை ; அஃதுதாவது பொறுத்தல் என்பது பொருள்.

1. ஒழுக்காரு - ஒழுக்க ஆரு(க) - தனக்குச் சொல்லிய ஒழுக்க நெறியாக. இயல்பு - அறிவோடு கூடிய தன்மை ; அத் தன்மையும் நன்மை பயத்தலின், ஒழுக்க நெறிபோல உயிரினும் சிறந்ததாகக் காப்பாற்றுக என்பதாம்.

2. விழு பேற்றின் - மேலான பேறுகளுள். அஃது - பொருமையினின்றும் நீங்குதல். பொருமைப் படுதல் பகைவரிடத்தும் ஒழிதல் வேண்டுமென்பர் 'யார் மாட்டும்' என்ருர். அன்மை - வேருதல் ; நீங்குதல்.

இவை யிரண்டு பாட்டாலும் அழுக்காறு இல்லாமையினது குணம் கூறப்பட்டது.

3. அறன் - (மறுமைக்கு) அறமும், ஆக்கம் - (இம்மைக்குச்) செல்வமும். பேணுது - மகிழாமல்; விரும்பாமல்.

4. அழுக்காற்றின் - பொருமை காரணமாக. அல்லவை - அறம் அல்லாத வை ; அவையாவன : செல்வம், கல்வி முதலியன உடையாரிடத்துத் தீங்கு நினைத்தலும், சொல்லுதலும், செய்தலுமாம். இழுக்காற்றின் - தீய நெறியால். ஏதம் - துன்பம். படுபாக்கு - வருதல் ; உண்டாதல்.

5. அது - அப் பொருமையே. சாலும் - போதும். ஒன்னுர் - பகைவர். வழுக்கியும் - ஒழிந்திருந்தும். ஈன்பது - பயப்பது.

அதுவே என்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தால் தொக்குநின்றது.

6. கொடுப்பது அழுக்கறுப்பான் - பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொருமைப் படுபவன். சுற்றம் - உறவினர். உடுப்பதூஉம் உண்பதூஉம் - உடுக்கப்படும் உடையும் உண்ணப்படும் உணவும் : இன்னிசை யளபெடைகள். சுற்றம் கெடும் எனவே அவன் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

7. அவ்வித்து - பொருமைப்பட்டு. செய்யவள் - திருமகள். தவ்வையை - தமக்கைக்கு : உருபுமயக்கம். தவ்வை - மூதேவி. விடும் - நீங்கும்.

8. அழுக்காறு என ஒரு பாவி - பொருமையென்று சொல்லப்பட்ட ஒப்பில் லாத பாவி : அழுக்காறு என்னும் குணத்திற்குக் குணமின்றுயினும், தன்னை யுண்டாக்கினவனை இருமையிலும் கெடுக்கின்ற கொடுமை பற்றி அதனைப் ‘பாவி’ என்றுர், கொடுந்தொழில் உடையானைப் பாவி என்னும் வழக்கு இருத்தலின். திரு செற்று - செல்வத்தைக் கெடுத்து. தீயுழி - நரகத்தில். உய்த்துவிடும் - செலுத்திவிடும்.

இவை ஆறு பாட்டாலும் அழுக்காறு உடைமையினது குற்றம் கூறப்பட்டது.

9. அவ்விய நெஞ்சத்தான் - பொருமை பொருந்திய மனத்தையுடையவன். ஆக்கம் - செல்வம். கேடு - வறுமை. ‘உளவாயின்’ என்பது எஞ்சி நின்றது. நினைக்கப்படும் - ஆராயப்படும் : பொருமையாற் செல்வமும், நடுவு நிலைமையால் வறுமையும் உண்டாதல் கூடாமையால், அறிவுடையவரால் இவற் றிற்குக் காரணமான பழவினை யாதென்று ஆராயப்படுதலால், ‘நினைக்கப்படும்’ என்றுர்.

10. அகன்றுர் - பெரியராயினுர். பெருக்கம் - செல்வம். தீர்ந்தார் - நீங் கினவர்.

இவை யிரண்டு பாட்டாலும் அழிவும் ஆக்கமும் வருதற்குக் காரணம் சேர்த்துச் சொல்லப்பட்டது.

3. வெஃகாமை

வெஃகாமையாவது பிறர்க்குரிய பொருளைக் கவர்ந்துகொள்ள நினையாமை யாம்.

1. நடு - நடுவு நிலைமை. வெஃகின் - கவர விரும்புவானுயின். குடி பொன்றி - குடியைக் கெடச் செய்து : ‘பொன்ற’ என்பது ‘பொன்றி’ எனத் திரிந்து நின்றது. செய்து என்பது சொல்லெச்சம். ஆங்கே - அப்பொழுதே.

2. படு பயன் - வரும் பயன். வெஃகி - விரும்பி. பழிப்படுவ - பழியி னிடத்தே பொருந்தும் செயல்கள். நாணுபவர் - அஞ்சுபவர்.

3. சிற்றின்பம் - நிலையில்லாத இன்பம்: பாவத்தால் வருதலின் அப் பொழுதே அழியுமென்பார் 'சிற்றின்பம்' என்றார். மற்றின்பம் - நிலையுடைய இன்பம்.

4. இலம் - வறியம். புலம் - ஐம்புலன்கள்: இங்கே புலன்கள் பொறி களைக் குறித்து நின்றன. வெல்லுதல் - அவற்றைப் பாவ வழியிற் செல்ல விடாமை. புன்மை - குற்றம். காட்சியவர் - அறிவினையுடையார். புன்மையில் காட்சி - பொருள்களைத் திரிபின்றி யுணர்தல்.

5. அஃகி - நுட்பமானதாகி. என் ஆம் - என்ன பயனையுடையதாம்? வெறிய - அறிவொடு பொருந்தாத செயல்கள்.

6. ஆற்றின்கண் - (அருளறத்திற்கு) வழியாகிய இல்லறத்தின்கண்: இல் லற நெறியால் அறிவு முதிர்ந்தவிடத்தல்லது துறத்தல் கூடாதாகையால், அந்த இல்லறத்தினைத் துறவறத்திற்கு 'ஆறு' என்றார். பொல்லாத - குற்ற வழி கள். சூழ - எண்ண. கெடும் - இரண்டறமும் சேர இழப்பான். பொல்லாத வற்றை எண்ணிய அளவாலே கெடுமெனவே, செய்தாற் கெடுதல் சொல்லாமலே பெறப்பட்டது.

7. வேண்டற்க - விரும்பாதொழிக. விளைவயின் - நுகருங்கால். மாண்டற்கு அரிதாம் - நன்றுதல் இல்லை.

இவை ஏழு பாட்டாலும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது.

8. அஃகாமை - சுருங்காமை. வெஃகாமை - வேண்டாமை. அஃகாமை என்பது ஈண்டு அஃகாமையின் காரணத்தை உணர்த்துதலால் ஆகுபெயராம். வெஃகாதான் செல்வம் அஃகாது என்பதாயிற்று.

9. திறன் - (அடைதற் காம்) கூறு: அவையாவன - காலமும், இடமும் செவ்வியும் முதலாயின.

இவை இரண்டு பாட்டாலும் வெஃகாமையின் குணம் கூறப்பட்டது.

10. இறல் ஈனும் - அழிவைத் தரும்: பகையும் பாவமும் பெருக்கலின் 'இறல் ஈனும்' என்றார். விறல் - வெற்றி. அப் பொருளை வேண்டியுழல்வோர் யாவரையும் கீழ்ப்படுத்தலின் 'விறலீனும்' என்றார். செருக்கு - செல்வம்: செருக்கென்னும் காரியப் பெயர் அதையுண்டாக்குவதற்குக் காரணமான செல் வத்தை யுணர்த்துதலால் ஆகுபெயர்.

இதனால் வெஃகுதலின் குற்றமும் வெஃகாமையின் குணமும் ஒருங்கு கூறப்பட்டன.

4. புறங்கூறாமை

புறங்கூறாமையாவது காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசாமையாம்.

1. அறம் கூறான் - அறமென்று சொல்லுவதும் செய்யாது. அல்ல - பாவங்கள். புறங்கூறான் என்றல் - புறங்கூறான் என்று உலகத்தாரால்

சொல்லப்படுதல். இனிது - நல்லது. புறங்கூறுமை என்ற அறம், அக் குற்றங்களால் இழித்துக் கூறப்படாமல் மேற்பட்டு விளங்கும் என்பதாம்.

இதனுல் புறங்கூறுமை என்ற அறத்தின் நன்மை கூறப்பட்டது.

2. அறன் அழீஇ - அறம் என்பது ஒன்றில்லை என அழித்துச் சொல்லி. அல்லவை - பாவங்கள். புறன் அழீஇ - ஒருவனைக் காணுதவிடத்துப் பழிச் சொற்களால் குறைவாகப் பேசி.

அறத்தை யழித்தலினும் புறங் கூறுதலும், அல்லவற்றைச் செய்தலினும் பொய்த்து நகுதலும் தீயனவாம் என்க. இச் செய்யுள் முறை நிரனிறைப் பொருள்கோள்.

3. அறம் - அற நூல்கள் : ஆகுபெயர். பின் புறங்கூறிப் பொய்த்தல் ஒழிதலின் 'சாதல்' ஆக்கம் தரும் என்றுர்.

4. கண் நின்று - கண்ணெதிரே நின்று. கண் அற - கண்ணேட்டமற. முன் இன்று - எதிரில் இல்லாமல். பின் - பிற்காலத்தில் வரும் குற்றம் : ஆகுபெயர். சொல்வான் தொழில் சொல்மேல் ஏற்றப்பட்டது.

இவை மூன்று பாட்டாலும் புறங் கூறுதலின் கொடுமை சொல்லப்பட்டது.

5. 'அறம் நெஞ்சத்தான் சொல்லும் அன்மை(யண்)' எனக் கூட்டி, 'புறங்கூறுவா னெருவன் அறத்தைத் தன் மனத்தின் வழியனுய்க் கூறுகிறுன் அல்லன் என்பது' எனப் பொருளுரைத்துக் கொள்க. மனம் தீதாயிருக்கையில், அறம் நல்லதென்று சொல்லுகிற அச் சொல், அறிவுடையோரால் கொள்ளப்படாது என்பதாம்.

6. திறன் என்னும் பண்புப் பெயர் திறத்தையுடைய பழிச் சொற்களை உணர்த்துதலால் பண்பாகு பெயராம்.

7. பக - நீங்க. கேளிர் - சுற்றத்தார் : கேளிரும் என்ற உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. நக - மகிழ. நட்பாடல் - நட்புச் செய்தல். தேற்றுதவர் - அறியாதவர் : தேற்றுமையென்பது தன்வினைப் பொருளில் வந்தது.

8. துன்னியார் - நெருங்கினவர். தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல். எதிலார் மாட்டு - அயலாரிடத்து. செய்வது என்பது சொல்லெச்சம்.

9. ஆற்றும்கொல் - சுமக்கின்றதுபோலும்! வையம் - நிலம். புறன் நோக்கி - பிறர் நீங்கின அளவு பார்த்து. புன் சொல் - பழிப்புச் சொல். பொறை - உடற் சுமை.

இவை ஐந்து பாட்டாலும் புறங் கூறுவார்க்கு உண்டாகும் குற்றம் கூறப்பட்டது.

10. ஏதிலார் - அயலார். குற்றம்போல் - குற்றம் காணுமாறுபோல. காண்கிற்பின் - காண வல்லராயின் : நடுவு நிலையாக இருந்து ஒப்பக் காணுதலாகிய அருமை நோக்கி, 'காண்கிற்பின்' என்றுர். தீது - துன்பம். இதனுல் புறங்கூறுதலை விடுவதற்கு வழி சொல்லப்பட்டது.

5. பயனில சொல்லாமை

பயனில சொல்லாமையாவது தமக்கும் பிறர்க்கும் அறம் பொருள் இன்ப மாகிய பயன்களுள் ஒன்றையும் தாராத சொற்களைச் சொல்லாமையாம்.

1. முனிய - வெறுக்க. பயனில - பயனிலவாகிய சொற்கள். எல்லாரும் - எல்லாராலும் : மூன்றனுருபு விகாரத்தால் தொக்கது.

2. சொல்லல் - சொல்லுதல். நயன் இல - விருப்பம் இலவாகிய செயல் கள் ; வெறுக்கப்படும் செயல்கள்.

3. நயன் இலன் - நீதியில்லாதவன். பயன் இல - பயன் இலவாகிய பொருள்கள். பாரித்து - விரித்து. 'பயன் இலவாகிய உரையால் (சொல்லால்) இவன் நீதியில்லாதவன் என்பதை அறியலாம்' என்பார், அவ் வறிதலை உரையின்மீதேற்றி 'உரை சொல்லும்' என்றார்.

4. நயன் சாரா - நீதியொடு பொருந்தாதனவாகி. நன்மையின் - நற் குணங்களினின்றும். பண்பு - இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற் குணங்கள். 'சொல்லுமாயின்' என்பதும், 'அவர்மாட்டு' என்பதும் இசையெச்சமாக வருவித்து உரைத்துக் கொள்க.

5. சீர்மை - விழுப்பம் ; மேம்பாடு. சிறப்பு - நன்கு மதிக்கப்படுதல். நீர்மை - நற்குணம். 'சொலின்' என்பது சொல்லாமையை விளக்கி நின்றது.

6. பாராட்டுவான் - பலகால் சொல்லுவான். மகன் எனல் - மகன் என்று சொல்லற்க : ஈண்டு, 'எனல்' என்பது, 'அல்' ஈற்று எதிர்மறை வியங்கோள். பதடி எனல் - பதர் என்று சொல்லுக: ஈண்டு, 'எனல்' என்பது, 'அல்' ஈற்று உடன்பாட்டு வியங்கோள். அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் 'மக்கட் பதடி' என்றார்.

இவை ஆறு பாட்டாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.

7. நயன் இல - நீதியொடு படாத சொற்கள். 'சொல்லினும்' எனவே சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீய என்பதாம்.

8. அரு பயன் - அறிதற்கரிய பயன்கள் ; அவையாவன : வீடுபேறும் மேற்கதிச் செலவும் முதலாயின. 'பெரும்பய னில்லாத சொல்' எனவே சிறிது பயனுடைய சொற்களும் ஒழிக்கப்பட்டன.

9. பொருள் - பயன். தீர்ந்த - நீங்கிய. பொச்சாப்பு - மறதி. மருள் - மயக்கம். மாசறு காட்சி - தூய அறிவு ; மெய்யறிவு. மருடீர்ந்த என்னும் பெயரெச்சம் காட்சியவரென்னும் குறிப்பு வினையாலணையும்பெயர் கொண்டு முடிந்தது.

இவை மூன்று பாட்டாலும் பயனிலவாகிய சொற்களைச் சொல்லாமையின் குணம் சொல்லப்பட்டது.

10. சொல்லின் என்பது இருவழியும் (இரண்டு வாக்கியங்களிலும்) மிகையாயி னும் **சொற்பொருட்பின் வருநிலை** யென்னும் **அணி**நோக்கி வந்தது.

இதனால் சொல்லத்தக்க சொற்கள் பயனுடைய சொற்கள் எனவும், சொல் லத் தகாத சொற்கள் பயனில்லாத சொற்கள் எனவும் நியமிக்கப்பட்டன.

3. மணிமேகலை

மலர் வனம் புக்க காதை

2. உயங்கு நோய் வருத்தம் - வருந்துவதற்குக் காரணமாகிய மிக்க துன்பம். உரைமுன் தோன்றி - மொழியிடமாகத் தோன்றி.

4. எது நிகழ்ச்சி - பயனுக்கு எதுவாகிய வினையின் நிகழ்ச்சி : வினை, பயன் கொடுப்பதற்குத் தோன்றுவது. எதிர்ந்துளது - எதிர்ப்பட்டது.

மலரின்கண், நாற்றம் அடங்கியிருந்து பின்னர் வெளிப்படுதல் போன்று, வினையும் மறைந்திருந்து பயனளிக்கும் காலம் வந்தவிடத்து வெளிப்படும் என்க.

5. தந்தையும் தாயும் - கோவலனும் கண்ணகியும். நனி உழந்த - மிக வருந்திய.

6. வெந்துயர் இடும்பை - கொடிய துன்பத்தை விளைவிக்கும் துன்ப மொழிகள். வெதுப்ப - சுட.

7. காரிகை - அழகிய மணிமேகலை.

8. மாதர் - காதல். மாதர் செங்கண் - காதலை விளைவிக்கும் அழகிய சிவந்த கண். வரி வனப்பு - (மை) எழுதின அழகு : வரி - கண்ணில் உள்ள செவ்வரி கருவரியுமாம்.

9. புலம்பு நீர் - வருத்தத்தா லுண்டாகிய கண்ணீர். உருட்டி - உதிர்த்து. பொதி - கட்டு.

10. நீராட்ட - நனைக்க.

13. காமர் செங்கை - விருப்பம் பொருந்திய சிவந்த கை : உடையாளது விருப்பம் கையின்மேல் எற்றப்பட்டது. தாமரை மலர் மாதவி கைக்கும், மதி மணி மேகலை முகத்திற்கும் உவமை.

14. தூ நீர் மாலை - தூய நீர்மையையுடைய மலர் மாலை. தூத்தகை - தூய தன்மை.

15. நிகர் மலர் - ஒளி பொருந்திய மலர்.

16. மது மலர் குழலி - தேன் பொருந்திய மலர்களை(த் துறவு பூணுவ தற்குமுன்) அணிந்திருந்த கூந்தலையுடைய மணிமேகலை.

18. குரவர் - தாய்தந்தையர்.

19. தலைத்தலை - மேன்மேல்.

21. ஆய் மலர் ஓட்டிய - மெல்லிய நீல மலரை வென்ற.

23. படையிட்டு நடுங்கும் காமன் - (அவளால் பகை வெல்லக் கருதி யிருந்த) காமன் (இனி வெல்லுதல் அரிதென்று) படையைப் போட்டுவிட்டு நடுங்குவான்.

24. ஆடவர் - ஆண் மக்கள் : ஈண்டு இன்பத் துறை நிற்பார். உண்டோ என்ற ஒகாரம் எதிர் மறை.

25. பெற்றியில் நின்றிடின் - தம் இயற்கை திரியாமல் நிற்பாராயின் ; அவ்வாறு நிற்றலாவது இவளை விரும்பாதது நிற்றல்.

28. பாராவாரம் - கடல். பார்ாவாரப் பல் வளம் என்பது பாராவாரம் பல் வளம் என மெலிந்து நின்றது. பழுநிய - முதிர்ந்த.

29. காராளர் - ஒரு சாதியார் ; வேளாளருமாம். சண்பை - ஒரு நகரம்; சீகாழி எனலுமாம்.

30. இரு பிறப்பாளன் - பார்ப்பனன்.

32. ஆராமம் - பூஞ்சோலை.

33. விஞ்சையன் - வித்தியாதரன்.

34. திரு விழை மூதூர் - திரு மகளும் விரும்பும் காவிரிப்பூம் பட்டினம் : திருவும் என்ற உம்மை தொக்கு நின்றது. தேவர்கோன் - தேவேந்திரன். எடுத்த - செய்யத் தொடங்கிய.

36. தாரன் - மலர்மாலை யுடையவன். மாலையன் - மணிமாலை யுடையவன். தமனியம் பூணினன் - பொன் அணிகளை யுடையவன்.

37. பாரோர் காணு பலர் தொழு படிமையன் - பூமியிலுள்ளோர் காண லாகாத பலரும் தொழும் தெய்வ வடிவினையுடையவன்.

40. கண்மாறி - கண் இமைக்கும் அளவில் மறைந்து; கண்ணோட்டம் இன்றி எனவும், இடம் மாறி எனவும் வேறு பொருள் கூறலுமாம்.

41. தன் பதி நெட்டிடையாயினும் - தன் ஊர் சேய்மைக்கண் உள்ள தாணுலும்.

45. இலவந்திகை - எந்திர வாவி ; நிறைக்குறின் நிறைத்துப் போக்கு றின் போக்கும் பொறியமைந்தது : ஈண்டு நீர் வாவியைச் சூழ்ந்த வயந்தச் சோலை ; அஃது அரசனும் அவன் உரிமை மகளிரும் ஆடும் காவற் சோலை.

46. உலக மன்னவன் - சோழன். உழையோர் - உரிமை மகளிர் ; அமைச்சரும் காவலாளருமாம். 'உழையோர் ஆங்குளர்' என்றது அதன்கண் போகலாகாது என்றபடி.

49. பாடு வண்டு இமிரா - பாடும் வண்டுகள் ஒலிக்கமாட்டா : வான வர் விரும்புதலால் வண்டுகள் இமிராவாயின.

50. வாடாத மலர்மாலைகள் தேவர்களால் அமைக்கப்பட்டன. தூக்கல் - தொங்கவிடுதல்.

52. உய்யானம் - உத்தியானம் ; அரசர் விளையாடும் சோலை.

54. சம்பாதி - சடாயுவினுடன் பிறந்த கழுகரசன் ; இவன் வானிலே பறந்து ஞாயிற்றின் வெம்மையால் சிறை தீயப்பெற்றனன் என்பர்.

55. தவா நீர் காவிரி - குறையாத நீர்ப்பெருக்கினையுடைய காவிரி.

57. மூப்புடை முதுமை - மிக்க முதுமை. தாக்கு அணங்கு - தீண்டி வருத்தும் பெண் தெய்வங்கள்.

58. யாப்பு - உறுதி.

60. ஒரு பெரு பூட்கை - ஒப்பற்ற பெரிய மேற்கோள்.

61. பகவன் - புத்த தேவன்.

63. விளிப்பு அறை போகாது - ஒலி வெளியே போகாமல்.

66. தாமரை பீடிகை - பதும பீடம்; புத்தன் பாதபீடம். "புத்தன் பாதத்தை மணிபத்மம் என்றலும், அதனை வழிபடுவோர் அதுபற்றி 'ஓம் மணிபத்மேஹூம்' என்ற மந்திரத்தை ஜபித்தலும் பௌத்த சமய மரபு" என்பர்.

68. சுரும்பு இனம் மூசா - வண்டினங்கள் மொய்க்கா.

70. கடம் - கடன்; காணிக்கை. வைத்தோர்: முற்றெச்சம்.

75. வெந்திறல் நோன்பிகள் - மிக்க வலியினையுடைய நோன்பிகள். விழுமம் - வருத்தம்.

84. அணி பூங்கொம்பர் அவள் - அழகிய பூங்கொம்பை ஒத்த மணிமேகலை.

86. சிமிலி கரண்டையன் - உறியில் வைத்த குண்டிகையை உடையவன். நுழை கோல் பிரம்பினன் - நுண்ணிதாய்த் திரண்ட பிரம்பையுடையவன்.

87. அராந்தாணம் - அருகத்தானம்; அருகன் கோட்டம்.

89. கையற்று - செயலற்று.

90. உயவல் - வருந்துதல்.

91. மண்ணா மேனியன் - கழுவாத உடலையுடையவன்.

95. புழுக்கறை பட்டோர் - புழுக்கத்தைத் தரும் அறையில் அகப்பட்டோர்.

96. இம்மை - இம்மை யின்பம். மறுமை - மறுமை யின்பம். இறுதியில் இன்பம் - முடிவில்லாத முத்தியின்பம்.

97. தலைமகன் - ஆசான்.

99. விளை பூந்தேறல் - விளைகின்ற இனிய மது.

100. இவ் யோகத்து உறுபயன் - இத் தவ நெறியில் இதனினும் மிக்க பயன்; இதனினும் உறுபயன் என விரிக்க. யோகம் - தேறலின் சேர்க்கை என்றுமாம்.

101. கையுதிர்க்கொண்ம் - அகற்றிவிடும்: சீலமில்லாதாரைக் காணின் அவருடன் பேசாது அவரைப் போகும்படி கையை அசைத்துக் குறிப்பித்தல் சைன முனிவர்க்கு இயல்பு.

102. உண்ணா நோன்பி - அமாவாசை பௌர்ணமி என்னும் இரண்டு உவாவிலும், அட்டமி நாளிலும் பட்டினி கிடந்து, மற்ற நாட்களில் உண்ணும் விரதி; பட்டினி நோன்பி.

103. களி மகன் - கட்குடியன். பின்னர் - பின் நிற்பார்.

104. கணவிர மாலை - அலரிப்பூவால் ஆன மாலை.

106. சிதவல் துணி - சிதரின துணி ; கிழிந்த துணி. சினை - மரக் கிளை.

107. ததர் வீழ்பு - செறிந்த சுள்ளி; ததர் - கொத்துமாம்.

108. வெண்பலி சாந்தம் - வெண்ணீறும் சந்தனமும். மெய் முழுது உறீஇ - உடல் முழுதும் பூசிக்கொண்டு. உறீஇ - பூசி.

110. அழூஉம் - அழுதும் ; விழூஉம் - விழுந்தும். அரற்றும் - அரற்றியும். கூஉம் - கூவியும்.

111. தொழூஉம் - தொழுதும். எழூஉம் - எழுந்தும். சுழலலும் சுழலும் - சுழலுதலைச் செய்தும்.

112. ஓடலும் ஓடும் - ஓடுதலைச் செய்தும்.

113. நீடலும் நீடும் - நெடிது நின்றும். நிழலொடு மறலும் - நிழலுடன் பகைமை கொண்டும் (நிற்கின்ற).

110–113. 'அழூஉம்' முதலியவற்றை வினையெச்சப் படுத்து, 'நிற்கின்ற' என்ற ஒரு சொல் வருவித்து முடிக்க. இனிப் பின்வரும் மையலுற்ற மகன் என்பதனை எழுவாயாக்கி அழூஉம் முதலிய வினைகளோடு தனித்தனி முடித்து அவன் என ஒரு சொல் வருவித்து உரைத்தலுமாம்.

114. மையலுற்ற மகன் - பித்துற்றவன்.

115. கையறு துன்பம் - செயலற்ற துன்பம். கண்டு நிற்குநர் - கண்டு வருந்தி அவன் பின்னே நிற்போர்.

116. சுரியல் - சுருண்ட. தாடி - மோவாய் மயிர். மருள்படு - இருண்ட. பூங் குழல் - அழகிய கூந்தல்.

117. தவளம் வாள் நகை - வெண்மை மிக்க ஒளி பொருந்திய பற்கள்.

118. ஒள் அரி நெடு கண் - ஒளி பொருந்திய அரி படர்ந்த பெரிய கண்கள்.

119. கரு கொடி புருவம் - கரியதாய் வளைந்த புருவம். கொடி - ஒழுங்குமாம். பிறைநுதல் - எட்டாம் பிறை போன்ற நெற்றி.

121. அம் நுண் மருங்குல் - அழகிய நுண்ணிய இடை.

122. இகந்த - தாள் முழுதும் இல்லாத. இகந்த வட்டுடை - முழந்தாள் அளவாக உடுக்கப்படும் உடை.

123. மறுகு - தெரு.

124. மகன் - காமன்.

125. பேடு - பதினோராடல்களுள் ஒன்று.

126. வம்ப மாக்கள் - புதியராய் வரும் மக்கள். கம்பலை - முழக்கம்.

127. சுடுமண் - செங்கல்.

130. வித்தகர் - ஓவியக்காரர்.

132. விழவு ஆற்றுப்படுத்த - விழாவினைக் கொண்டாடிய.

134. ஐயவி - வெண் சிறு கடுகு. முச்சி - உச்சி. பேய் தீண்டா வண்ணம் குழந்தைகளின் முடியில் நெய்யணிந்து வெண் சிறு கடுகை அப்புதல் மரபு.

135. கயிற்கடை - கொக்கி. முக் காழ் - மூன்று வடங்கள்.

136. பொலம் பிறை சென்னி - அழகிய பிறைபோன்ற அணியினை அணிந்த சென்னி ; அழகிய பிறை வடிவாகிய அணியின் இரு கோடு என்று உரைப்பாரு முளர்.

137. குதலை - இளஞ்சொல். மெய் - சொல்லின் வடிவு.

138. சின்னீர் - சிறிதாகிய நீர் ; இலக்கணை. ஐம்படை - காத்தற் கடவுளான திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் என்னும் ஐந்து படைகளின் வடிவாகிய அணி ; இது தாலி என்றும் வழங்கும் ; இதனைச் சிறுவர்க்கு அணிதல் மரபு.

139. அற்றம் - மறைப்பதற்கு உரிய இடம். காவா - மறைக்காமல். சுற்றுபு பூந் துகில் - சுற்றப்பட்ட அழகிய ஆடை.

142. பொலம் தேர் - பொன் தேர். புகர் - புள்ளி. வேழம் - யானை.

144. ஆல் அமர் செல்வன் மகன் - கல்லால மரத்தின்கீழ் அமர்ந்த சிவபெருமான் மைந்தனாகிய முருகன். கால்கோள் - தொடக்கம்.

147. கம்பலை மாக்கள் - முழக்கத்தினைச் செய்யும் மக்கள் ; வேறு சில காட்சி கண்டு முழங்கித் திரிபவர்.

149. அணி அமை தோற்றம் - எழில் அமைந்த நல்ல உருவம் ; அணிகள் இல்லாத உருவம் எனவுமாம்.

157. எஞ்சல கொல்லோ - தோற்பன அல்லவோ ? எஞ்சுதல் - குறைதல் ; தோற்றல். இசையுந - ஒப்பன.

158. இனைந்து உக - வருந்திக் கெட.

159. வடுவுருமல் - சுவடு படாமல் (சென்று) : சென்று என்ற சொல் ஒன்று வருவித்து உரைக்க.

160. குரவம் - குராமரம். மரவம் - வெண்கடப்ப மரம்.

161. திலகம் - மஞ்சாடி மரம். வகுளம் - மகிழ மரம்.

162. நரந்தம் - நாரத்தை. நாகம் - சுரபுன்னை.

163. பிடவம் - குட்டிப் பிடவம். தளவம் - செம் முல்லை.

164. குடசம் - வெட்பாலை. வெதிரம் - மூங்கில்.

166. எரி மலர் இலவம் - நெருப்பைப் போல் சிவந்த மலர்களையுடைய இலவம். பரப்பி : பரப்ப என்க.

168. சித்திரச் செய்கை படாம் - சித்திரத் தொழிலமைந்த துகில்.

170. தொழுதனள் காட்டிய - தொழுது காட்டிய. புத்தன் பாதபீடிகை யுள்ளதாதலின், வனத்தைத் தொழுதுகாட்டினள்.

4. கம்ப ராமாயணம்

அயோத்தியா காண்டம்

கைகேசி சூழ்வினைப் படலம்

1. கங்குலின் நாழிகை - இரவின் பொழுது. நள் அடைந்த பின்றை - நடுவை அடைந்த பின்பு. யாழிசை அஞ்சிய அம் சொல் ஏழை - யாழினது ஒலியும் அஞ்சப்பெற்ற அழகிய மொழியையுடைய கைகேயி. 'யாழிசை அஞ்சிய சொல்' என்பதன் கருத்து: யாழிசையினும் சொல் இனிதென்பது. அயில் மன்னர் - வேலைத் தாங்கிய அரசர். துன்ன - நெருங்கிச் சூழ்ந்துவர. ஆழி நெடு கை - ஆழியையுடைய நீண்ட கைகள். மடங்கல் ஆளி அன்னான் - ஆண் சிங்கத்தை ஒத்தவனாகிய தசரதன். ஆழி ஆளி அன்னான் எனக் கூட்டுக; ஆளி அன்ன ஆழியான் என விகுதி பிரித்துக் கூட்டினும் அமையும். மடங்கல் ஆளி - ஒரு பொருளைக் குறிக்கும் இருசொற்கள். மடங்கல் - பிடரி மயிர் மடங்கியிருக்கப் பெற்றது என ஆண் சிங்கத்திற்குக் காரணக் குறி.

2. மன்னர் வணங்கி வாயிலில் நிற்ப - உடன்வந்த அரசர் தசரதனை வணங்கிக் கைகேயி மாளிகையின் வாயிலில் நிற்க. ஆங்கு - அவ் விடத்தில். ஏயின செய்யும் மடந்தைமாரொடு - ஏவின பணி செய்கின்ற பணிப் பெண்களோடு. பாயல் துறந்த - படுக்கையை விட்டு வெறுந் தரையில் கிடந்த. படை - வேற்படை (போன்ற). தட கண் - பெரிய கண்கள். ஆய் இழை - ஆராய்ந்து அணிந்த அணிகளையுடைய கைகேயி. ஆழி மன்னன்: சுட்டளவாய் நின்றது; எடுக்கலுற்றான் என அடுத்த பாடலொடு முடியும்.

3. அவண் அடைந்து - அவ் விடத்தைச் சேர்ந்து. அரந்தை - துன்பம். கொல்: அசை. மானை எடுக்கும் ஆனையேபோல் - பெண்மானைத் துதிக்கை கொண்டு தூக்குகின்ற களிற்றைப்போலவே. தழீஇ - தழுவி.

4. நின்று தொடர்ந்த - தொடர்ந்து நின்ற: விகுதி பிரித்துக்கூட்டல். தொடர்ந்து நின்ற - தழுவியெடுத்து நின்ற. துவள்கின்றது மின்போல் - அசைகின்றதாகிய மின்னலைப்போல. வீழ்ந்தாள், இயம்பலள்: முற்றெச்சங்கள். நீடு உயிர்க்கலுற்றாள் - பெருமூச்சு விடத்தொடங்கினாள்.

5. அலங்கல் - மாலை. என்னை நிகழ்ந்தது - நிகழ்ந்த செயல் யாது? சொன்னபின் - சொன்னால்: வினையெச்சம். காண்டி - பார்: முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று. சொல்லிடு - சொல்வாயாக.

6. கள் அவிழ் கோதை - தேன் வழிகின்ற கூந்தலையுடையவளான கைகேயி; கள், சூட்டிய மலர்மாலையினின்றும் பெருகுவது. வெள்ளம் நெடு சுடர் மின்னின் - மிகுந்த பெரிய ஒளியையுடைய மின்னல்போல. மின்ன - விளங்கும்படி. நக்கான் - சிரித்து: முற்றெச்சம்: நக்கது, பிறர் பேதைமையால் என்க. ஒன்றும் உலோபேன் - சிறிதும் உலோபம் செய்யேன். உலோபம் - ஈயாமை. உலோபேன் என்றது 'லோபம்' என்னும் வடமொழிப் பெயரடியாகப் பிறந்த எதிர்மறை வினைமுற்று. தனக்குப் போலக் கைகேயிக்கும் இராமனிடத்து அன்பு இருந்தது கருதி, **'இராமன் உன் மைந்தன்'** என்று தசரதன் கூறினான். 'உவந்துள' எனவும் பாடம்.

7. ஆன்றவன் - பல நற்குணங்களாலும் நிறைந்தவனுன தசரதன். அன்னம் அன்னுள் - நடையால் அன்னப்பறவை போன்றவளாய் கைகேயி. 'ஐயமிலாள்' எனவும் பாடம். பேரவலம் - மிக்க துன்பம். துடைத்தல் - போக்குவது. இமையோர் குலம் - தேவர் கூட்டம். சான்று ஆக - சாட்சி ஆகட்டும். ஆக : முற்று ; வினையெச்சமாகக் கொள்ளினும் அமையும். ஏன்ற : ஏற்ற என்பது மெலிந்து நின்றது : கொடுப்பதாய் உடன்பட்ட என்பது பொருள். ஈதி - கொடுப்பாய்.

8. வரம் கொள - வரங்களைப் பெற்றுக்கொள்ள. மம்மர் - தடுமாற்றம். 'மன்னும்' எனவும் பாடம். அல்லல் - துன்பம். 'ஈவனே கொள் என்பால்' எனவும் பாடம். பரம் - பாரம் ; சுமை. அடைக்கலப் பொருளைப் பாதுகாத்து உதவவேண்டும் பொறுப்புப்போன்று, இரண்டு வ ர ங் க ளை உதவவேண்டும் என்ற பொறுப்புத் தன்னிடம் உள்ளதால், 'ஈவன் என்பால் பரங்கெட' என்ருன் தசரதன். பகர்ந்திடு - கூறு. உரம் கொள் மனம் - வலிமை கொண்ட நெஞ்சம். சிறிதும் இரக்கமில்லாத கல்நெஞ்சு என்பார், 'உரம்கொள் மனம்' என்ருர்.

9. ஏய - ஏவிய என்பதன் விகாரம் : கொடுத்த என்பது பொருள். சேய் - மகன். 'சேயரசாள்வது' எனவும் பாடம். கேள்வன் - கணவன். தீயவை யாவையினும் சிறந்த தீயாள் - எரி, கூற்று, நஞ்சு, பாம்பு முதலிய கொடிய பொருள்கள் எல்லாவற்றினும் கொடிய கைகேயி ; தீயவை எல்லாவற்றினும் மேம்பட்ட தீப் போன்றவள் என்றுமாம்.

10. சோக விடம் - துன்பத்தைத் தரும் சொல்லாகிய நஞ்சு. தொடர - பற்றின அளவிலே. துணுக்கம் - நடுக்கம். எய்தா - எய்தி ; அடைந்து. ஆகம் அடங்கலும் - உடல் முழுதும். அராவின் - பாம்பின் (நஞ்சால்). வேழம் - யானை. ஆகம் வெந்து வீழ்ந்தான் : சினைவினை முதலோடு முடிந்தது. 'சோகவிடம் தொடர' என்றது, 'உலகத்தில் விடம் கொல்வது, **தான் உட்புகுந்த பின்பே ;** இந்தச் சோகம் தருகின்ற சொல்லாகிய விடம், **தொடர்ந்த அளவிலேயே** கொல்லும்' என்னும் வேற்றுமை தோற்றுவித்து நின்றது : **உருவக அடியாக வந்த வேற்றுமையணி.**

11. பூதலம் உற்று - தரையில் விழுந்து. வேதனை - துன்பம். முற்றிட - முதிர்ச்சியடைய. வெந்து வெந்து - (மனம்) மிக வெதும்பி : அடுக்கு, மிகுதிப் பொருளது. கொல்லன் - இரும்புக் கொல்லன் ; கருமான். உலை - உலைக் களம்.

12. உலர்ந்தது நா - நா வறண்டது. பொங்கு சோரி - மிகுந்த குருதி. சலம் தலைமிக்கது - கவலை மிகுந்தது: சலம் - தணியாக் கோபமுமாம். என்று என்று : பலமுறை என்னும் பொருளில்வந்த அடுக்கு. அலம் தலையுற்ற - சஞ்சலம் மிக்கன. **அலந்தலை** என்பதை **அலத்தலை** என்பதன் மெலித்தல் விகாரமாகக் கொள்ளலுமாம். 'அலந்து அலையுற்ற' எனப் பிரித்து, 'வருந்தி அலைந்தன' எனக் கூறலுமாம். பெருந்துன்பத்தோடு கைகேயியிடம் வெகுளியும் அரசனுக்குத் தோன்றிற்று என்பார், 'கண்கள் பொங்கு சோரி பொடித்த' என்ருர். அவலச் சுவையோடு வெகுளிச் சுவையும் கலந்து வந்தது. பின் வரும் பாக்களிலும் இதைக் காணலாம்.

13. மேவி - எழுந்து. விம்மும் - புலம்புவான். உயிர்ப்பு - மூச்சு. ஓவியம் - சித்திரம். ஓயும் - செயலொடுங்குவான். ஏற்ற - மோத. மேவி நிற்

றல் முதலிய பல தொழில்கள் தசரதனிடத்து ஒருங்கு நிகழ்ந்தனவாகக் கூறிய இது **கூட்டவணியின்பாற் படும்.** இதனை வடமொழியாளர் **சமுச்ச யாலங்காரம்** என்பர். பின்வரும் பாக்களிலும் இவ் வணி காண்க.

14. பழி - பழிச்சொல். உறும் பழியை, உற்ற பழி என்றது தெளிவு பற்றி வந்த **கால வழுவமைதி.** நாணுதலாவது, தனக்கு ஒவ்வாத இழிந்த செயலில் உள்ளம் ஒடுங்கல். "கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல் நல்லவர் நாணுப் பிற" என்ற வள்ளுவர் மொழி காண்க. உள் நிறை வெப்பொடு - உள்ளே நிறைந்த கொதிப்பொடு. உயிர்த்துயிர்த்து - மிகப் பெருமூச்சு விட்டு: அடுக்கு மிகுதிப்பொருட்டு. உலாவும் - அலைவான். அயர்க்கும் - சோர்வான். வெம்புண் நுழைகிற்க - வெய்ய புண்ணில் வலிய நுழைவதனால். உழைக்கும் - வருந்தும். 'கைவேல் புண் நுழைகிற்க' என்றது தான் கொடுத்த வரம் தனக்கே வருத்தத்தை விளைத்தல்பற்றி.

15. கம்பம் நெடு களி யானை - கட்டுத் தறியிற் கட்டப்பட்ட மிக்க மதத்தை யுடைய களிறு. விம்மல் - கலக்கம். உம்பர் - தேவர். ஊழி - உலகம் அழியும் காலம். அன : அன்ன என்பதன் இடைக்குறை : ஒத்த என்பது பொருள். அன்னதே - அவ்வாறாகவே இருந்தது. ஆல் - அசை. 'கம்பம் மன்னன்' எனக்கூட்டி 'நடுக்கத்தையுடைய அரசன்' எனவும், 'அன்னது' என்பதற்கு 'அந்த அம்புபோல் வருத்தத்திற்குக் கருவியாகவே இருந்தது' எனவும் பொருள் கொள்ளலும் ஆம்.

16. அஞ்சலள் - (கைகேயி) பயப்படவில்லை. ஐயனது - கணவனாகிய தசரதனது. நஞ்சிலள் - இரங்கவில்லை : நஞ்சிலள் என்பது நைந்திலள் என்பதன் போலி. என்ன நாணம் ஆம் - பெண்களுக்குரிய வெட்கம் என்ன பயன்படும் ? ஆல் - அசை. பண்டு - பழமையாய். மடந்தை வேடம் - பெண் உருவம். என்றே - என்று எண்ணியே. தஞ்சு என - எளிய பற்றுக்கோடு என்று: தஞ்சு என்பது தஞ்சம் என்பதன் விகாரம். உள்ளலார்கள் - நினையார்கள். தக்கோர் - கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் இவற்றால் தகுதி வாய்ந்த பெரியோர்.

17. எய்த நோக்கி - பொருந்த (நன்றாய்)ப் பார்த்து. நெய் நிலை வேலவன் - நெய் பூசப்பெற்ற அழியாத வேலை எந்திய தசரதன். திசைத்தது - திகைத்தது. புணர்த்த - கற்பித்துச் சொல்லிய.

18. தீயோர் - கொடியவர். இசைத்ததும் இல்லை - கூறியதும் இல்லை. குசை - கடிவாளம். பரி - குதிரை. கொள்வென் - பெற்றுக்கொள்வேன். வசை திறன் - பழியின் கூறுபாடு. நின்வயின் - உன்னிடத்தில். மாள்வென் - இறப்பேன். 'குசை பரியோய்' என்றது, 'முன் யான் கடிவாள வார் பற்றிப் பரி தூண்டித் தேர் செலுத்தினதா லன்றோ உனக்குப் புகழ் உளதாயிற்று?' என்று கைகேயி குறிப்பித்தவாறு.

19. ஏழை - அறிவில்லாதவள் : கைகேயி. சிந்தை திரிந்து - மனம் தடுமாறி. ஏற்கெனவே வருந்தியிருந்த அரசனுக்கு, **மாள்வென்** என்று கைகேயி கூறிய கடுஞ்சொல், பின்னும் வருத்தத்தை உண்டாக்கிய தென்பார், 'வெந்ததனால் உண்டாகிய கொடிய புண்ணில் வேல் நுழைந்த தொப்ப' என்று உவமையால் விளக்கினார்.

20. ஆ - அந்தோ ! ஆவி காலும் - பெருமூச்சு விடுவான். உண்மை ஒன்றும் - மெய் என்ற ஒரு பொருள் முழுதும். சாக - அழிக. எனு எழும் - என்று சொல்லி எழுந்திருப்பான். தளரடி : தள்ளாடி என்பதன் இடைக் குறை : அசைந்து என்பது பொருள். மாகம் - மேலுலகம். நாகம் - கீழுலகம். மண் - நடு உலகம்.

21. நாரியர் - பெண்கள். ஞாலம் - உலகம். கொடு - கொண்டு : இடைக்குறை. பூரியர் எண்ணிடை - கீழ்மக்கள் எண்ணிக்கையில். பொங் கும் - கோபிப்பான். வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான் - வீரர்களுடைய வீரத்தை வென்று நின்ற வேற்படையை யுடைய தசரதன்.

22. புடைக்கும் - மோதுவான். 'பொய்யுரை' எனவும் பாடம். புழுங்கி விம்மும் - மனம் புழுங்கி வருந்துவான். நெய் எரியுற்றென - நெய்யில் நெருப் புப் பட்டாற்போல ; நெய் நெருப்பில் உற்றாற்போல எனினும் அமையும். நெஞ்சு அழிந்து - மனம் உருகி. வையகம் முற்றும் - உலகம் முழுதும். நடந்த - சென்ற.

23. ஒறுப்பினும் - தண்டித்தாலும். அந்தரம் - தீமை. ஓவா -காவா மல். இறுப்பினும் - (வரம்) கொடுத்தாலும். 'மறுப்பினும்' எனவும் பாடம். போகிலாளை - விலகாதவளை. வாளால் இறுப்பினும் - வாளால் இரண்டாக வெட்டிக் கொல்லுதலினும். ஆவது - பொருந்துவது.

24. கோல் மேற்கொண்டும் - செங்கோலை மேற்கொண்டும். கோல் என் பது அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை; அம் முறை, ஒருபாற் கோடாது செவ்விய கோல் போலுதலின், கோல் எனப்பட்டது : உவம ஆகு பெயர். 'குற்றமகற்றி' எனவும் பாடம். குறி கொண்டார்போல் - தம் கருத்தைச் செலுத் தியவர்போல. மேல் உற்றது - இனிமேல் வரும் நன்மை. பொறை - பொறுமை : காரணம்பற்றியாவது, மடமையாலாவது ஒருவன் தமக்கு மிகை செய்தவிடத்துத் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தல். கந்து கொல் யானை - கட்டுத் தறியை முறிக்கின்ற களிறு. களி மன்னர் - செருக்கையுடைய அரசர். மேல் மேல் வந்து முந்தி - ஒருவரினும் ஒருவர் முற்பட்டுவந்து. மிடை - நெருங்கு கின்ற.

25. சேய் - மகன். அன்னான் - அவன் எனச் சுட்டுமாத்திரையாய் நின் றது. கொண்டாலும் என்ற உம்மை கொள்ளுதலின் அருமை விளக்கி நின்றது. நள்ளாது - விரும்பார். நால் நிலம் - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களாகப் பகுக்கப்படும் உலகில் உள்ளவர் : நிலம் : நிலத்தில் உள்ளவர்க்கு இடவாகு பெயர். நிலம் என்ற அஃறிணைப் பெயர்ச் சொல்லிற்கு ஏற்ப, நள்ளாது என்ற அஃறிணை வினை வந்தது. நிலம் என்பது : சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை எனினும் அமையும். ஓத உவக்கும் - சொல்ல விரும்புகின்ற. கொள்ளாய் - கொள்ளமாட்டாய் : எதிர் மறைமுற்று ; உடன்பாடாகக் கொண்டு பொருள் உரைப்பினும் அமையும். எள்ளாநிற்கும் - இகழ்கின்ற. என் பயன் - பயன் யாது ?

26. வானோர் கொள்ளார் - தேவர் உடன்படார். ஏனோர் - கீழுலகத்தில் உள்ளவர். இசைந்தான் - உடன்பட்டவனாகிய இராமன். நல்கும் - கொடுப் பான்.

27. ஈயக் கடவேன் - வழங்கக் கடமைப்பட்டுள்ளேன். உள் நேர் ஆவி - உள்ளே பொருந்திய உயிர். வண்மை கைகயன் மானே - வரையாது கொடுக்கும் கேகயத்தரசன் மகளே! மான் : உவம ஆகுபெயர். பெறுவாயேல் - பெற விரும்புவாயானல். மண்ணே கொள் - உலகை மாத்திரம் பெற்றுக்கொள் : ஏகாரம் பிரிநிலே. மற்றையது - இராமனைக் காட்டிற்கு அனுப்புதல்; அதனை வாயால் சொல்லவும் அஞ்சி இவ்வாறு தசரதன் கூறினன். 'வண்மைக் கைகயன் மானே பெறுவாயேல்' என்பது, 'கொடுக்கும் குலத்தில் பிறந்த நீ, என் வேண்டுகோளைத் தாராது, என்னிடத்துப் பெற விரும்புவது தகாது' என்ற கருத்தை உள்ளடக்கியிருத்தல் கருதத் தக்கது. மண்ணே: தொனிப் பொருள் காண்க.

28. வாய் தந்தேன் என்றேன் - வாயால் கொடுத்துவிட்டேன் என்றேன். நோய் தந்து - வருத்தத்தைக் கொடுத்து. நோவன - துன்புறுத்துவன. நுவலாதே - சொல்லாதே. தாய் தந்து என்ன - தாய் கொடுத்தாற்போல. **தந்து** என்றதைத் தந்தை என்பதன் விகாரமாகக் கொண்டு, 'தாய் தந்து என்ன' என்பதற்கு, 'தாயே! தந்தையே! என்று சொல்லி இரக்க' என்று பொருள் கொள்வாரும் உளர். தழல் வெங்கண் - நெருப்புப்போலும் வெய்ய கண்; நெருப்பைக் காலுகின்ற வெய்ய கண்ணுமாம். பேய் என்ற இடத்து, இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தந்தீயும் - தரும்: தந்தீயும் என்பது தரும் என்னும் முற்றுவினைத் திரிசொல்.

29. இன்னே இன்னே - இவ்வாருக: அடுக்கு, பன்மைப் பொருட்டு. பன்னி - பலவகையாகச் சொல்லி. இகல் வேந்தன் - மாறுபட்டு வெற்றி கொள்ளும் அரசன். தடுமாருள் - அசையாதவளாய்: முற்றெச்சம். நல்காய் - கொடாமல்: முற்றெச்சம். முனிவாயேல் - வெறுப்பாயானல். 'நீயே வாய்மை தவறின் உலகில் வாய்மையே நிலேயா'தென்பாள், 'மன்னு, யாருளர் வாய்மைக்கு இனி?' என்றுள் கைகேயி; 'உன்போல வாய்மை தவறுபவர் வேறு யாரும் இரார்' என இகழ்ச்சி செய்தவாறும் ஆம்.

30. ஆவி புழுங்கா - உயிர் வெதும்பி. அயர்கின்றுன் - சோர்கின்றவனுகி. வாய் மொழி - வாய்மை மொழி. பொறை கூர - பொறுமை மிக. நச்சு: நஞ்சு என்பதன் வலித்தல் விகாரம். முச்சு: மூச்சு என்பதன் குறுக்கல் விகாரம். 'முச்சத்தார்' எனவும் பாடம்: 'மனமடங்கிய பெரியோர்' என்பது பொருள்.

31. வயம் - வசம். உரை குன்றேன் - சொன்னசொல் தவறேன். கண் - கண்போன்றவன். உயிர் - உயிர்போன்றவன். இறவாமை - நீங்காமை. நய - விரும்பி அருள்புரிவாய்.

32. மெய்யே - உண்மை என்னும் அறமே. வேர் - அடி. வினை - செயல். நையாநின்றேன் - வாடுகின்றேன். நளினம் - தாமரை. கழிவானேல் - நீங்குவானுனல். உய்யேன் - பிழையேன். அபயம் - அடைக்கலம்.

33. இரந்தான் - வேண்டுகின்ற மன்னவன். முனிவு எஞ்சாள் - கோபம் தணியாதவள். வசை - பழி. சரம் - அம்பு. தவிர்க - ஒழிக. உரம் -வலி.

34. கொடியாள் - கொடியவளாகிய கைகேயி. இன்ன - இப்படிப்பட்டவைகளை. வெம் பரல் மொய் கானிடை - வெய்ய பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டில். என்னு - என்று சொல்லி. இடி ஏறு - பேரிடி. மால் வரை -

பெரிய மலை. 'இடியேறுண்ட மால்வரை' என்றது, 'முன்னாளிற் சிறகுள்ளவையாயிருந்து பறந்து சென்று நாடுகளின்மேல் விழுந்து அழித்துக்கொண்டிருந்ததனால் இந்திரனால் வச்சிராயுதங்கொண்டு சிறகு அரியப்பட்ட மலைகள்' என்னலாம்.

35. வீழா - விழுந்து. ஆழா - அழுந்தி. சொற் கொடியாள் - கொடுஞ் சொல்லாள் : விகுதி பிரித்துக்கூட்டிப் பொருள் உரைத்துக்கொள்க. கொடு - கொண்டு: இடைக்குறை. போழ்ந்தாள்-பிளந்தவள். 'புலர்கின்றான்' எனவும் பாடம்.

36. ஒன்றுநின்ற - உடலோடு பொருந்திநின்ற. கேள்வர்-கணவர். 'உயிர் கேள்வர்' எனவும் பாடம். பொன்றுமுன்னம்-இறப்பதற்குமுன்னே. பொன்றினர்-இறந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தானாக, உடனே பெருங்கோப்பெண்டும் உடனிறந்த சிலப்பதிகார வரலாறு ஈண்டு நினைவுகூறற்கு உரியது. இன்றோர் காறும் - இன்று வரையிலும் : ஓர் - அசை. எல் - விளக்கம். இறையோர் - கணவர். கொல்லுதியோ - கொல்லுகின்றாயோ ?

37. எவம் - துன்பம் : எவ்வம் என்பதன் விகாரம். இல் - நற்குடிப் பிறந்த மகளிர் : ஆகுபெயர். ஆ - அந்தோ ! நா - நாவிலிருந்து வரும் சொல் : ஆகு பெயர். ஞாலம் - உலகில் உள்ளவர்: ஆகு பெயர். பாராய், நோக்காய், எண்ணாய் என்பன எதிர்மறை ஆகார விகுதி புணர்ந்துகெட்ட வினைகள். 'போகின்றாய்' எனவும் பாடம்.

38. ஏண் - பெருமை. நாண் மடம் அச்சம் என்பன, பயிர்ப்பு என்னும் குணத்திற்கும் உபலட்சணம். நாண் - தகாதவற்றின்கண் உள்ளம் ஒடுங்குதல். மடம் - எல்லாம் அறிந்தும் அறியாததுபோ லிருத்தல். அச்சம் - என்றும் காணாதவற்றைக் கண்டவிடத்து அஞ்சுதல். பயிர்ப்பு - தன் கணவன் அல்லாதவர் கை முதலியன மேற்படின் அருவருத்தல். பூண் - அணிகலன். புகழ் பேணி - புகழை விரும்பி. நாண் பால் - நாணின் பகுதி. தம் பால் நணுகார் - தம்முடைய பகுப்பாகிய பெண்பாலார் இனத்தில் சேரமாட்டார். ஆண் பாலாரே - ஆண் பாலார் இனத்தில் சேர்ந்தவரே யாவர். பெண் பாலாரோடு அடைவு - பெண் பாலாரோடு வடிவு ஒப்புமைபற்றிச் சேர்வது (எவ்வாறு ?). அம்மா : வியப்பிடைச் சொல். இனிப் பின்னிரண்டடிகட்கு - 'நாண் என்ற பெண்மைக் குணத்தைத் தம்மிடத்துக் கொள்ளாத மங்கையரோடு சேராத ஆண் பாலாரே ஆண்பாலார் என்று சொல்லுதற்கு உரியவர் ; அவ்வாறு நாணமற்ற மகளிரிடத்துச் சேரும் ஆண் பாலாரோ பெண் பாலாரோடு சேர்த்துச் சொல்லுதற்கு உரியவர்' என்று பொருள் உரைப்பாரும் உளர்.

39. மண் - உலகம். வலத்தால் - வலியால்; வெற்றியால் எனினும் ஆம். விண்ணோர் - தேவர். அந்தரம் - தீமை ; மரணமும் ஆம். 'என் மனை' எனவும் பாடம்.

40. என்று என்று - என்று பலவாறாக : அடுக்கு - பன்மைப் பொருட்டு. உன்னும் - நினைப்பான். பன்னி - பலபடி சொல்லி. உயிர்க்கும் - பெருமூச்சு எறிவான். 'பன்னியிரக்கும்' எனவும் பாடம். இடர் தோயும்-துன்பக் கடலுள் மூழ்குவான்: 'தோய்தல்' என்ற வினைக்கு ஏற்ப, 'இடர்' கடலாக உரைக்கப்பட்டது. ஒன்று ஒன்று ஒவ்வா-ஒன்றோடொன்று ஒவ்வாத. இன்னல் உழக்கும்-துன்பத்தில் வருந்துவான். மயங்கும் - மூர்ச்சிப்பான். இடியும் - உடைவான். குன்று ஒன்று ஒன்றோடு ஒன்றியது: **இல்பொருளுவமை.**

41. ஆழி பொன் தேர் - சக்கரத்தைக் கொண்ட பொன் மயமான தேர். அயர்வு - தளர்ச்சி. பூழி - புழுதி. பொன் தோள் - அழகிய தோள். ஊழின்

பெற்றல் - முறைமையாகப் பெற்றல் (நன்று). 'பொய்த்தால்' எனவும் பாடம். பாழி- வலிமை. தார்-மாலை. பசை அற்றாள் - அன்பில்லாதவளாகிய கைகேயி. பூழி: புழுதி என்பதன் மரூஉமொழி. போழ்து : பொழுது என்பதன் மரூஉமொழி.

42. அரிந்தான் - அறுத்துக் கொடுத்தான். ஓர் மன்னவன் : சிபி என்பான். அருமேனி - பெறுவதற்கு அருமையான உடல். வரிந்து - இறுக்கி. ஆர் - கட்டப்பட்ட. பரிந்தால் - வருந்தினால். பாயும் கனல் - பரவுகின்ற தீ. 'எரிந்தாறுதே இன்னுயிருண்ணும் எரி' என்பதனால், 'எரி ஒரு பொருளைப் பற்றி எரித்தபின் ஆறிவிடுவதாயிருக்கக் கைகேயியாகிய தீயோ உயிரோடு கூடிய மன்னவனைப் பற்றி எரித்தும் தணியாது, அவன் உயிரையும் கொள்ளுகின்ற' தென வேற்றுமை அணிநலம் தோன்றக் கூறினார். 'தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு' என்ற திருக்குறளின் பொருள் ஈண்டு நினைவு கூர்தற்குரியது. 'எரிந்தேறுதே' எனவும் பாடம்.

43. வீந்தாளே - (கேட்ட வரத்தை விரைவில் கொடுக்காவிட்டால்) இறந்தவளே யாவாள் : விரைவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது; தெளிவுபற்றியும் ஆம். வெய்யவள் - கொடியாள். மிடல் - வலிமை. ஈந்தேன் ஈந்தேன் : தேற்றப் பொருளைக் காட்டும் அடுக்கு ; வெகுளியும் ஆம். சேய் - மகன். வசை வெள்ளம் - பழியாகிய கடல். வெள்ளம் : ஆகுபெயர். நீந்தாய் நீந்தாய் : தேற்றப் பொருளைக் காட்டும் அடுக்கு ; வெகுளியுமாம்.

44. கொலை வாள் எறு - கொல்லுதல் தொழிலையுடைய சிறந்த வாள். ஆகத்திடை - மனத்தில். தேறான் ஆகி - உணர்வு இல்லாதவனாகி. செய்கை மறந்தான் - செயலற்றுக் கிடந்தான். ஊறு நின்ற சிந்தையினாள் - (களிப்பு) மிக்குத் தோன்றுகின்ற மனத்தையுடைய கைகேயி. துயில்வு உற்றாள் - தூக்கத்தை அடைந்தாள்.

45. சேண் உலாவிய நாள் எலாம் - மிகுதி பொருந்திய நாட்களிலெல்லாம்: என்றது, மணம் செய்துகொண்டது முதல் வரம் வேண்டிய அன்று வரையிலு முள்ள நாட்களை. உயிர் ஒன்றுபோல்வன - 'மன்னனுக்கும் கைகேயிக்கும் உடல் வேறு, உயிர் ஒன்றே' என்று சொல்லுமாறு, இருவரும் மனமொத்து ஒருவரே நினைந்து செய்தாற்போன்ற செயல்கள். எண் உலாவிய தோளினான் - வலிமை பொருந்திய தோள்களையுடைய கணவன். ஒன்றும் - சிறிதும் : இழிவு சிறப்பும்மை. வாள் - ஒளி. நளிர் கங்குல் - குளிர்ந்த இரவு. இப் பாட்டில் **ஏதுத் தற்குறிப்பேற்ற அணி, உருவக அணியை** உறுப்பாகப் பெற்று வந்துள்ளதை உணர்க.

46. எண் தரும் - எண்ணப்படுகின்ற. கடை சென்ற யாமம் - இறுதியாய் வந்த யாமத்தில். ஏழையால் - அறிவும் இரக்கமும் இல்லாத கைகேயியால். தொங்கல் - மாலை. காமர் துணை கரம்- அழகிய இரண்டு கைகள். எற்றி எற்றி - பலமுறை அடித்துக்கொண்டு : அடுக்கு, பன்மைப் பொருளது. விளிப்ப போன்றன - அழுவன ஒத்தன. இப் பாட்டில் **உருவக அணியை** உறுப்பாகப் பெற்றுத் **தன்மைத் தற்குறிப்பேற்ற அணி** வந்துள்ளதைக் காண்க.

47. கயம் - குளம். புள் - பறவை. தேய்கை - தேய்தல். ஒத்த - பொருந்திய. மருங்குல் - இடை. சிலம்பின் நின்று சிலம்புவ - காற் சிலம்பொலிபோ லிருந்து ஒலிப்பவை. விடத்தை - நஞ்சுபோன்றவளாகிய கைகேயியை. கயத்தியை - கீழ்மையை யுடையவளை. பொழுது விடிகையில் ப ற வை க ள்

ஒலிப்பதை, கைகேயி செய்த கொடுஞ் செயலைக் கண்டு தம் மனத்தினுள் அவை வைவதுபோலும் என்று புனைந்துரைக்கப்பட்டுள்ள இப் பாட்டில் **தன்மைத் தற்குறிப்பேற்ற அணி** வந்துள்ளதைக் காண்க.

48. சேமம் - கட்டு மிடங்கள். வாமம் - அழகு. மேகலை - இடையில் அணியும் அணி. 'மறங்கிலா' எனவும் பாடம்: 'பிணங்கல் இலாத' என்பது பொருள். இறத்தும் - விட்டுச் செல்லுவோம். **தற்குறிப்பேற்ற அணி**காண்க.

49. சிரித்த பங்கயம் - மலர்ந்த தாமரைப்பூ. செங்கணிராமன் - சிவந்த கண்களையுடைய இராமன். கரிக் கரம் - யானையின் துதிக்கை : கரி கரம் என்னும் வட நூல் முடிவு எதுகை நோக்கி மிக்கது. வரித்த தண் கதிர் முத்து - கட்டின குளிர்ந்த ஒளிக் கதிர்களையுடைய முத்துக்கள். மீன் - விண்மீன்கள் ; நட்சத்திரங்கள். **தற்குறிப்பேற்ற அணி** காண்க.

50. நாமம் - அச்சம். நாள் அடைந்த - நாளைப்பெற்ற. காமன் வில் குடை கங்குல் - மன்மதனது கரும்புவில் துளைக்கின்ற இராப்பொழுது. 'வில்' என்பது, இலக்கணையால், அதுகொண்டு எய்யப்படுகின்ற மல ரம்புகளை யுணர்த்தும். கற்பியா - தெரிவித்து. தழங்கல் ஆ - ஒலிபோலாக. 'ஆ' என்பது 'ஆக' என்பதன் விகாரம். தாம் : அசை.

51. இனம் மலர் குலம் - பல இனங்களான மலர்களின் கூட்டம். இள வாசம் மாருதம் - மணமுடைய இளங் காற்று. புனை துகில் கலை சோர - அணிந்த சேலையும் மேகலையும் நெகிழ. பூவைமார் - பெண்கள்: ஆகுபெயர். பூவை - நாகணவாய்ப்புள். அனுக்கம் - வருத்தம்; நடுக்கம்.

52. சாய் - மென்மை : சாயல் என்பதன் விகாரம் ; சாயா என்பதன் விகாரமுமாம். அடங்க - அழிய. தயங்கு - விளங்குகிற. தீ அடங்கிய - கொடுமை பொருந்திய. சீரிய - நற்குணங்கள் பொருந்திய. குமுதம் - ஆம்பல் மலர் : ஆகுபெயர். **உவமையணி** காண்க.

53. அராகம் - பொருள்களமேல் தோன்றும் பற்றுள்ளம் : இது வேட்கை எனப்படும். ஆசை - அப் பொருள்களைப் பெறவேண்டும் என்று மேல் மேல் எழும் விருப்பம் : இஃது அவாவின் மிகுதி என்னலாம். 'ராகம்' என்ற ஆரியச்சொல் 'அராகம்' எனத் தமிழில் வரும். வை அராவிய - கூர்மை செய்யப்பட்ட. வாளி - அம்பு. வாடை - வடக்கிலிருந்து வீசும் காற்று : ஈண்டு, வடபுறமாக வீசும் தென்றற் காற்று என்பதே பொருத்தம், இராமனுக்கு முடிசூட்டுவிழா நிகழ இருந்தது சித்திரைத் திங்கள் ஆதலால். மெய் அராவிட - உடலைச் சிதைக்க. பை அரா- நச்சுப் பையையுடைய பாம்புகள் ; பை - படமுமாம். பண் கனிந்து எழு பாடல் - இசைமுதிர்ந்து தோன்றுகின்ற பாடல்கள்.

54. ஆழியான் - இராமன் ; ஆழி (சக்கரம்) உடையவன். இடையான - நடுவிலே வந்த. உயர் போது - தாமரை மலர், 'பூவெனப் படுவது பொறி வாழ் பூவே' ஆதலால். போது என்பது, அரும்பும் ஆகாமல் மலரும் ஆகாமல் அவ் விரண்டற்கும் இடைப்பட்டது ; ஈண்டு மலர். எண் தவம் - எண்ணத்தக்க (மிக்க) தவம்; இவ் வடையை மனங்கள் என்ற சொல்லொடும் கூட்டிக்கொள்க. வாழும் நாள் - வாழ்வடையும் காலம். மஞ்சு தோய் புயம் - (கைம்மாறு கருதாமல்) மேகத்தை ஒத்து வழங்கும் கைகள். மஞ்சர் - ஆடவர் : மைந்தர் என்பதன் போலி.

55. ஐ உறும் சுடர் மேனியான் - வியப்பைத் தருகின்ற ஒளியோடு கூடிய உடம்பையுடைய இராமன். எழில் - அழகு: வளர்ந்து அமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளரும் என்பதுபோன்று காட்டுதல். குலம் மாமலர் குவை - சிறந்த பெரிய பூக்களின் தொகுதி. குலம் - பலவின் ஈட்டம். குவை - ஒன்றன் கூட்டம். வேல் நெடுங்கண் - வேற்படை போன்ற பெரிய கண்கள். ஆடவர்க்குத் துன்பம் செய்தலால், 'வேல் நெடுங் கண்' என்றார். முகிழ்த்து - மூடிக்கொண்டு. பொம் என விம்ம - பொம் மென்று ஒலிக்க.

56. ஆடகம் தரு பூண் - பொன்னால் செய்யப்பெற்ற நகைகள். முயங்கிட - அழுந்த. வஞ்சி - வஞ்சிக்கொடி போன்ற இடை: உவம ஆகு பெயர். அஞ்சி - அஞ்ச : எச்சத்திரிபு. அனந்தர் - மனச் சோர்வு. 'அனந்தரால் கண் டிலர்' எனக்கூட்டுக. 'அனந்தரால் பேரி இசைத்தலால்' எனக்கூட்டி, 'மந்த ஒலியோடு முரசு முழங்குதலால்' எனப் பொருள் காணுதலும் அமையும்: 'அனந்தற் பறை' எனப் புறநானூற்றில் இப் பொருளில் வருவது காணலாம். எடு - புறவிதழ். அகம் - அகவிதழ் : ஆகுபெயர். யாம பேரி - பொழு தின் கூறுபாட்டை அறிவிக்கும் முரசு. சேடகம் புனை கோதை - சிறப்புப் பொருந் திய மலர்மாலை ; திரட்சியைக் கொண்ட மயிர் முடியுமாம். திண்மை - உறுதி. ஊடல் கண்டவர் - புலந்தவர்.

57. தழை - தழையால் ஆன தோரணங்கள் : பீலிக் குஞ்சங்கள் என் பாரும், தழையாடைகள் என்பாரும் உளர். ஒலித்தன - விளங்கின. தார் - பூமாலைகள். மல்கு பேர் இழை ஒலித்தன - ஆடவரும் மங்கையரும் மிகுதி யாக அணிந்த சிறந்த அணிகலன்கள் ஒலி செய்தன. புள் - பறவைகள். வாசி - குதிரைகள். மழை - முகில் : ஆகு பெயர். கலித்த - ஒலித்தன. **சொற்பின்வருநிலையணி** காண்க.

58. வையம் - உலகம். நைய நைய - மிகவும் வருந்த: அடுக்கு மிகுதிப் பொருட்டு. நல் ஐம்புலன்கள் - சிறந்த ஐந்து புலன்களும். அவிந்து - அழிந்து. அடங்கி - அமைந்து. நடுங்குவான் - பதறுகின்ற அரசன்: வினையாலணையும் பெயர். படைத்த - தோற்றுவித்த. சேய் ஒளிபோல் - செவ்விய ஒளி குறைதல் போல. தீபம் - விளக்குக்கள். மழுங்கின - ஒளி குறைந்தன.

59. வங்கியம் - இசைக் குழல்கள். தேன் விளம்பின - தேன் என்னும் இன்னிசை வண்டுகள்போல ஒலித்தன ; தேனைப்போல இனிமையாக ஒலித்தன என்றுமாம். வாணி - வாழ்த்துச் சொற்கள். முந்தின - மிகுந்தன. பாணி யின் பங்கி - பாட்டுக்களின் வகைகள். அம்பரம் எங்கும் விம்மின - வானம் முழுவதிலும் ஒலித்தன : தேவதேவனுதலின் இராமன் முடிசூட்டுவிழாக் குறித்துத் தேவர்களும் வானத்தில் பாட்டொலி எழுப்பினார்கள் ; இனி இவ் வுல கில் எழுந்த ஒலிகள் வான்வரையில் சென்று ஒலித்தன என்றுமாம். பம்பின- மிக் கொலித்தன. கறங்கின - ஒலித்தன. நூபுரங்கள் - காற் சிலம்புகள்.

60. தூபம் முற்றிய - புகைபோல் (கரிதாகி) முதிர்ந்த. கார் இருள் பகை - கரிய இருளாகிய பகை. நீர்த்து அகன்றென - நீர்மை (ஒளி) மழுங்கிட. சேயது - மகனுடைய. வெய்யவன் - சூரியன். குண குன்று - உதய கிரி. **ஏதுத் தற்குறிப்பேற்ற அணி** காண்க.

61. மூவர் - அரி, அயன், அரன் என்னும் மூன்று மூர்த்திகள் : மூவர் என்னும் சொல் மூன்று மூர்த்திகளையும் குறிப்பால் உணர்த்திற்று. தேவ தேவர் - தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய சிவபெருமானர். பாவைமார் - மகளிர் : உவம ஆகுபெயர். பங்கய ராசி - தாமரை மலர்களின் கூட்டம். இயல்பாக உவமையாக நிற்கும் தாமரையை உபமேயமாகவும், உபமேயமாகி நிற்கும் மகளிர் முகத்தை உபமானமாகவும் கூறியிருப்பது **எதிர் நிலை உவமையணி**யாம் ; **விபரீதஉவமை** என்பதும் இதுவே.

62. வேலை - பொழுது. ஏழு வேலை - ஏழு கடல்கள். நகர் - நகரத்தி லுள்ளவர் : ஆகு பெயர். துரப்ப - தூண்ட ; செலுத்த. உன்னல் ஆவன அல்ல - நினைப்பதற்கும் ஆவன அல்ல : இழிவு சிறப்பும்மை விகாரத் தால் தொக்கது ; எனவே, சொல்லலாவன அல்ல என்பது கூறுமலே பெறப் படும். உணர்த்துவாம் - சொல்லுவாம் : ஒருவரைக் கூறும் பன்மைத் தன்மை வினைமுற்று.

63. குஞ்சரம் - யானை. சிந்தை கொள் - மனம் கவரும். பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. பால் வளை - பாலினது வெண்மைபோலும் வெண்மை யான சங்கு வளைகள். வாள் அம்புகள் - வாள்களும் அம்புகளும் போன்ற கண்கள் : உம்மைத்தொகை ; வாள், அம்பு : கண்களுக்கு உவம வாகு பெயர். அஞ்சனம் - மை. வாளிற்கும் அம்பிற்கும் நஞ்சு தடவுதல்போலக் கண்களுக்கு மையிட்டார் என்க. நாள்மலர் - புதுமலர்.

64. உவகை வெள்ளம் - உவகையால் உண்டாகிய கண்ணீர்ப் பெருக்கு ; வெள்ளம் என்பதற்கேற்பக் கண்ணீர் என்பது வருவித்துரைக்கப்பட்டது. கமலம் பூத்த - தாமரை மலர்கள் போன்ற கண்கள் பொருந்திய. முகத்தார், கண்ணர், சுவடு எனக்கூட்டுக : முகத்தவராகிய கண்களையுடையவரது (குங்குமக் குழம் பின்) அடையாளம். நம்பி தம்பியர் - இராமனுடைய தம்பிமார். நறவம் - கள். 'களித்தென' எனவும் பாடம். குவவு தோள் - திரண்ட தோள்கள்.

65. திரு - திருமகள். சாதுகை மாந்தர் - ஒழுக்கங்களுள் சிறந்த அமை தித் தன்மையான ஒழுக்கமுடைய ஆடவர்.

66. வேந்தரே பெரிது - வேந்தர் கூட்டமே பெரியது. வேந்தர், வீரர், மாந்தர்,மகளிர் என்பன அவ்வவ் வினத்தின் கூட்டத்திற்கு ஆகுபெயர். போந்தது- வந்த மக்கள் கூட்டம். புகுவது-இனி வரப்போகும் மக்கள் கூட்டம். தேர்ந்ததே தேரின் அல்லால் - தாம் அறிந்ததையே அறிந்த தல்லாமல். தெரிய - நன்ருக.

67. எழில் - அழகு. தவளம் - வெண்மை. மதி - திங்கள் ; சந் திரன். இப்பாட்டில் **இல்பொருளுவமையணி** காண்க.

68. நலம் கிளர் - நன்மை விளங்குகின்ற. அலங்கல் - மாலை. நிருதர் - அரக்கர். ஏழுலகம் - ஏழு தீவுகளாகவுள்ள இந்த வுலகம். விலங்கல் - மலை. ஆசை - திக்கு. விலங்கல் - யானை : உவமவாகுபெயர். அரக்கர் பகைமையாலும், மலைகள் அசைதலில்லாத இயற்கையை உடைமையாலும், திக்கு யானைகள் பூமியைச் சுமப்பதைவிட்டு வரக்கூடாமையாலும் வரவில்லை என்க.

69. தாளம் வெண் கவிகை - முத்தால் ஆகிய வெள்ளிய குடைகள். அந்தரம் - ஆகாயம். ஆர்ந்தென - நிறைந்தால் என்ன. கவரி - வெண்சாமரம்.

துன்ன - நெருங்க. இரு நிலம் கிழவர் - பெரிய நிலப் பகுதிக்கு உரிமை பூண்ட அரசர். மௌலி - முடி.

70. இல் பயன் சிறப்பிப்பார் - மணம் செய்விப்பார்: இல்லில் இருத்தற்குப் பயன் விருந்தோம்புதல்முதலியன ஆதலால், அதற்கு உரியவ ராம்படி மணப்பித்தலை இவ்வாறு கூறினர். ஈண்டிய - மிக்க. தவத்தின் - தவத்தினால். உய்க்கும் - செலுத்தும். நால் மறை கிழவர் - அந்தணர்.

71. விண்ணவர் - தேவர். விசும்பு - ஆகாயம். தூர்த்தார் - நிரப்பினர். விரி திரை - விரிந்த அலைகளையுடைய கடல்: அன்மொழித்தொகை. ஓதை - ஒலி. கனகம் - பொன். கனகம் மாரி - தானம் செய்கின்ற காலத்தில் பொன்னோடு வார்க்கின்ற நீர் மழை; பொன் மழையுமாம்.

72. விளக்கு ஒளி மறைத்த மன்னர் - (தம்முடைய உடம்பின் ஒளியால்) விளக்கின் ஒளியை மறையச் செய்த அரசர். மின் ஒளி மகுடம் கோடி - மின்னல்போலும் ஒளியையுடைய பலவாகிய முடிகள். சுடர் - சூரியன். அளக்கர் - கடல். மூரல் - பல். முறுவல் - புன்னகை. அன்று, எ: அசைகள்.

73. மங்கலங்கள் - முடிசூட்டுவிழா நடப்பித்தற்குத் தேவையான மங்கலப் பொருள்கள். பாரம் - அக் கரை; முடிவு: இங்கு வேதாந்தம்: அதனை அறிந்தவர் வேத பாரகர். தொல்லை வாயில்கள் - பழைய வாயில்களில் உள்ளவர். வாயில்கள்: ஆகுபெயர். மாதவம் கிழவன் - பெரிய தவத்துரிமையுடைய வசிட்டன்.

74. கன்னி - குமரியாறு. புனல் - நீர். பூரித்து - (குடங்களில்) நிறைத்து வைத்து. அங்கி - அக்நி யென்னும் வடமொழிச் சிதைவு: நெருப்பு. வீர சிங்க ஆதனம் - வீரன் வீற்றிருத்தற்கு உரிய அரியணை.

75. கணிதம் நூல் உணர்ந்த மாந்தர் - சோதிட நூலை யறிந்தவர். காலம்- முகூர்த்த காலம். பிணி அற நோற்று நின்ற பெரியவன் - இரு வினையின் பிணிப்பு (தொடர்பு) நீங்கும்படி தவம் செய்துநின்ற வசிட்டன். வல்லை - விரைவு. கொணர்தி - அழைத்துக்கொண்டுவா. பணி தலைநின்ற - ஆணையைத் தலைமேற் கொண்டுநின்ற. பரிவின் - அன்போடு.

76. விண்தொட நிவந்த - ஆகாயத்தை அளாவும்படி உயர்ந்த. கோயில் - அரண்மனை. வேந்தர்தம் வேந்தன்தன்னை - அரசர்க்கு அரசனாகிய தசரதனை. கண்டிலன் - காணாதவனாய்: முற்றெச்சம். கேட்டான் - கேட்டு: முற்றெச்சம். நண்ணி - அடைந்து. தொண்டை வாய் - ஆதொண்டைக் கனிகள்போலும் வாயிதழ்கள். கூற்றம் - எமன்.

77. கேட்டான் - கேட்டு: முற்றெச்சம். பொருக்கென - விரைவாக: விரைவுக் குறிப்பு மொழி. இராமன், தான்கொண்ட மானிட வடிவத்திற்கு ஏற்பப் பட்டினி கிடந்து நாராயணனை நினைத்து நிற்றலின், 'தன்திரு வுள்ளத்துள்ளே தன்னையே நினையுமற்றக் குன்றிவர் தோளினான்' என்றார்; இனி, தனது அவதாரத்தின் காரணத்தையும், அதற்குச் செய்யவேண்டும் தொழில் களையும் நினைத்தலுமாம். குன்று இவர் தோளினன் - மலைகளை ஒத்த தோள் களையுடைய இராமன். வாய் புதைத்து - (வணக்க மிகுதியால்) வாயை மூடிக் கொண்டு.

78. கொற்றவர் - வெற்றி மிக்க அரசர். குவலயம் - பூமி. பரிவு - அன்பு. சிற்றவை - சிறு அவை - சிறிய தாய்: தாய் என்னும் பொருள தாய 'அவ்வை' இடைக்குறைந்து 'அவை' என நின்றது. செப்பினுள் - சொன்னுள். போதுதி - வருவாயாக.

79. கேளா - கேட்டு. மௌலி - முடி. அரச வெள்ளம் - அரசர் கூட்டம். கீதங்கள் - இசையையுடைய பாட்டுக்கள். தையலார் - மகளிர். தார் அணி தேர் - மாலைகள் அணியப்பெற்ற தேர்.

80. உந்த - தூண்டுதலால். இரு கையும் - இரண்டு பக்கங்களிலும். இரைத்து - ஆரவாரம் செய்துகொண்டு. மொய்த்தார் - நெருங்கினுர். பொருவு அரு தேர் - ஒப்பற்ற தேர். புறத்திடை - வெளியில்.

81. துண் எனும் சொல்லாள் - அஞ்சத்தக்க சொல்லினையுடைய கைகேயி. துறந்து - தவிர்ந்து. மண் எனும் திரு - பூமியாகிய மனைவி: பூதேவி. பணைத்த வேய் - பருத்த மூங்கில்கள். கண் எனும் கால வேல் - கண்களாகிய யமனை ஒத்த வேல்களும். மிடை - நெருங்கிய. கண் எனும் வேல் மிடை கானம் - **சிலேடையொடு சேர்ந்துவந்த உருவக அணி**; வேல்: வேலமரத்திற்கும் வேற்படைக்கும் சிலேடை.

82. அம் கணன் - அழகிய கண்களையுடையவன்: 'கண்ணன்' என்பது இடைக்குறைந்து 'கணன்' என நின்றது. அவனி - உலகம். நம் கண் அன்பு இலன் - நம்மிடத்து அன்பு இல்லாதவன். தள்ளுற - தடுமாறுதலால். கரிய கோலம் மேனியும் - கறுத்த அழகிய உடலும். **செங்** கணும் **கரிய** கோல மேனியும்: **முரண்தொடை**. எனைவர் - எத்தனை பேர்?

83. ஆழி சூழ் உலகம் - கடல் சூழ்ந்த உலகம். தாழ் இரு சடைகள் தாங்கி - தொங்குகின்ற பெரிய சடைகளைத் தாங்கிக்கொண்டு. பூழி வெம் கானம் - புழுதியையுடைய கொடிய காடு. நண்ணி - சேர்ந்து. 'துறைகள்' எனவும் பாடம். ஆடி - நீராடி. ஏவினன் - கட்டளையிட்டான். 'இயம்பினன்' எனவும் பாடம்.

84. எளிதோ - எளிதாகுமோ? (ஆகாதென்றபடி): ஓ - எதிர்மறை. செப்பரு - சொல்லுதற்கு அரிய. செப்ப அரு என்பது, அகரம் தொகச் செப்பரு என நின்றது. செவ்வி - அழகு. ஒப்பது முன்பு (செந்தாமரையினை) - இதற்கு முன்பெல்லாம் செந்தாமரை மலரைப் போன்றது. ஏ: அசை. அ வாசகம் உணர கேட்ட பின்பு - அந்தக் கைகேயியின் உரையை அறியக் கேட்ட பின்பு. அம்மா - வியப் பிடைச்சொல்.

85. தெருளுடை மனத்து மன்னன் - அறிவின் தெளிவையுடைய நெஞ்சோடு கூடிய தசரதன். ஏவலின் - கட்டளையினின்று. திறம்ப - பிறழ்வதற்கு. இருளுடை உலகம் - மயக்கத்தையுடைய உலகம். தாங்கும் - காக்கும். இன்னல் - துன்பம். உருளுடை சகடம் - சக்கரத்தையுடைய வண்டி. உய்த்த - செலுத்திய. கார் ஏறு - கரிய எருது. **உவமையணி** இப் பாடலில் காண்க.

5. வில்லிபுத்தூரார் பாரதம்

உத்தியோக பருவம்

கிருட்டிணன் தூது சருக்கம்

1. விசயன் - அருச்சுனன். மும்மை நெடு பிறவி - மூன்று சிறந்த திரு அவதாரங்கள் : அவை : நரநாராயணர், இராமலக்குமணர், கிருஷ்ணர்ச் சுனர் என்பன. கேண்மை - நட்பு. சுயோதனன் - துரியோதனன். கோ - தலைவன். கார் படைத்த நிறத்தோன் - முகில் பெற்ற கரிய நிறத்தை உடைய கண்ணன் ; படைத்த என்பது உவம வுருபு எனலும் ஆம். பிற - பிறப்பு : முதனிலைத்தொழிற் பெயர் ; வேறு என்று பொருள் கொள்ளினும் அமையும். 'காண்பார்' என்னது, 'கண்டார்' என்று இறந்த காலத்தாற் கூறியது, தெளிவும் விரைவும் பற்றி வந்த கால வழுமைதிபற்றி. பிறப்பாகிய ஆழி என்றதற்கு ஏற்ப முத்தியாகிய கரை என்னுதது **ஏகதேச வுருவக அணி.**

2. கருமம் - செய்தி. முனி புரோகிதன் - உலூக முனிவன். அறிதி - அறிவாய். எஞ்சினர் - இறப்போர் : காலவழுவமைதி. பின்னிரண்டடிகளிற் கூறிய உவமை, பெருந்தீங்கிற்குக் காரணமான பகையை மிக மூட்டி அதை ஒழிப்பதற்கு ஏற்ற வழிகளைத் தேடாதிருத்தலை விளக்கும். இருக்குமதோ என்ற ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. சோதீ - பேரொளியுடையவனே !

3. சமரம் - போர். கடன் - முறைமை. முரசம் பூ கொடியோன் - முரசின் உருவம் எழுதப்பெற்ற அழகிய கொடியை உடையவனுன தருமன். வாணன் இரு சமரம் தொலைத்த பிரான் - பாணாசுரனது. பெரிய போரை ஒழித்திட்ட கண்ணன் : சோணிதபுரத்து அரசனுகிய **பாணாசுரன்** மகள் **உஷை** என்பாள், தன் கனவில் கண்டு மயங்கிய (கண்ணன் பெயரனாகிய) **அநிருத்தனைத்** தோழியால் கொணர்வித்து, அவனோடு இன்புற்றிருந்ததை அறிந்த பாண சுரன், அநிருத்தனை நாகாஸ்திரத்தினுற் கட்டிப்போடக் **கண்ணன்** அறிந்து, அவன் ஆயிரந் தோள்களையும் வெட்டிக் கொல்ல முற்படுகையில், சிவபெருமான் வேண்டுகோளின்படி அவ் வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி னன் என்ற வரலாறு ஈண்டு அறியத்தக்கது. இளைஞர் - தருமன் தம்பியர் நால்வர்.

4. செய் - கழனி. உகளும் - துள்ளும். பைவர் - துன்பம் உழப்போர். உய்வர் ஆர் - பிழைப்பவர் யார் ? உருத்து - வெகுண்டு. அவனிபர் - உலகைக் காக்கும் அரசர். எது - யாது ? அமரர் - தேவர்.

5. குரவர் - பெரியோர் : குரு என்பதன் பன்மையான குரவ : என்னும் வட சொல்லின் திரிபு. கிளைஞர் - உறவினர். துணைவர் - தம்பியர். அரவம் நெடு கடல் - ஆரவாரத்தையுடைய பெரிய கடல். கடலை ஆடை என்றதற்கு ஏற்ப, அவனியைப் பெண் என்னுதது **ஏகதேசவுருவக அணி.** கரவு - வஞ்சகம். தாதை - பெரிய தந்தையாகிய திருதராட்டிரன். முனி - சஞ்சயன். பலம் - பழம். மூலம் - கிழங்கு. சாகம் - இலை. இனிது நன்று - மிகவும் நல்லது.

6. கோது இலான் - குற்றம் இல்லாதவனுன தருமன். மா மாயன் - மிக்க மாயையை யுடையவனுகிய கண்ணன். மாயை - செய்தற்கு அரியன செய்யும் திறம் ; வியத்தற்கு உரிய பண்புகளும் செயல்களும் ஆம். மொய்த்த - (மரங்கள்) அடர்ந்த. முடுகி - விரைந்து. ஏசாரோ - பழிக்கமாட்டார்களோ ?

தவருமல் பழிப்பார்கள் : இரண்டு எதிர்மறைகள் உடன்பாட்டுப் பொருளோடு தேற்றமும் உணர்த்தின. பொய்த்திடாதோ என்பதிலும் இவ்வாறே பொருள் காண்க. நிகழ் - விளங்குகின்ற.

7. நடந்தருளி - சென்று. நினைவு - எண்ணம். அளி - வண்டு. முரலும் - ஒலிக்கும். தாயம் - அரசுரிமை. வளை - சங்கு. குலம் - கூட்டம். வலம்புரி - வலமாகச் சுழிந்திருக்கும் சங்கு. காலன் - எமன். பொருது - போர் செய்து. வசையும் அன்று - பழியும் ஆகாது : உம்மையை ஒழியிசைப் பொருட்டாக்கிப் புகழாகு மென்றும் கருத்துக் கொள்க.

8. முந்து ஊர் - விரைவாக ஊர்ந்து செல்கின்ற. பணி கொடியோன் - பாம்பின் உருவம் எழுதப்பெற்ற கொடியை உடையவனான துரியோதனன் : பாம்புபோலக் கொடியவன் எனினும் ஆம். மூதூர் - பழைய நகரமாகிய அத்தினபுரி. நந்து - சங்கு. புனல் - நீர்வளம். திறம் - பகுதி. இலம் - வீடு : இல்லம் என்பதன் இடைக்குறை. சிந்தூரம் - ஒருவகைச் செம்பொடி. திலகம் - நெற்றிப் பொட்டு. நுதல் - நெற்றி. **சிந்துரம்** - (குவலயாபீடம் என்னும்) யானை. தம்மைக் கொல்லவேண்டி, அரண்மனை வாயிலில் **கம்சனால்** நிறுத்தப்பட்ட **குவலயாபீடம்** என்னும் யானையின் கொம்புகளைப் பிடுங்கி, அவற்றையே படையாகக் கொண்டு அந்த யானையைக் கண்ணனும் பலராமனும் கொன்ற வரலாறு ஈண்டு அறியத் தக்கது.

9. மூள மூள - மிகுதியாக வளர : அடுக்கு மிகுதிப் பொருட்டு. தோம் - குற்றம். கதுமென - விரைவாக. கதும் : விரைவுக்குறிப் பிடைச்சொல். ஞாலம் - உலகம். 'ஞாலம் எல்லாம் பூத்தோனே' என்றது சினையாகிய நாபித் தாமரையின் வினையாகிய பூத்தலை, முதலாகிய கடவுளின்மேல் ஏற்றிச் சொன்ன உபசார வழக்காம். பூ தவிசு - செந்தாமரை மலராகிய பீடம். பூவை - நாகணவாய்ப் பறவைபோன்ற திருமகள் : இன்சொல் பற்றி வந்த உவமவாகு பெயர். புன்மை - சிறுமை. ஊனம் - குற்றம். மானம் - தன் நிலையிலிருந்து தாழாமையும் தாழ்வு வந்த இடத்து உயிர் வாழாமையுமாம்.

10. பைந்தொடி - பசும்பொன்னாலாகிய வளையலை யணிந்த திரௌபதி : பண்புத்தொகை யன்மொழி. வேத்தவை - அரசவை : மென்றொடர் வன்றொடராயிற்று. வசை - பழி. கண்டாய் - உண்டாக்கினாய். எரி தழல் - எரிகின்ற நெருப்பு. இளையாநின்றாய் - பின்னிடுகின்றாய். அஞ்சினேன் - அஞ்சுகின்றேன்: இயல்பினால் நிகழ் காலம் இறந்த காலமாக வந்த கால வழுவமைதி.

11. கான் ஆள - காட்டில் வாழும்படி. கண் இல்லா அருள் இலி - பிறவிக் குருடனும் அருள் இல்லாதவனும் ஆன திருதராட்டிரன். கண் இல்லா - கண்ணோட்டம் இல்லாத எனினும் ஆம். நம் உரிமை - நமக்கு உரிய அரசாட்சிச் செல்வம்.

12. இப் பாட்டில் 'முடித்தான்' என்று வந்தன பலவும் எதிர்மறை இலக்கணையால் 'ஒன்றையும் முடிக்கவில்லை' என்பதை விளக்கும்: இஃது இகழ்ச்சி பற்றிய பிறகுறிப்பின்பாற் படும். பாஞ்சாலி - பாஞ்சால தேசத்து அரசன் மகளாகிய திரௌபதி. கழறிய - உறுதியாகச் சொன்ன. வஞ்சினம் - சூள் ; சபதம். இரவு - இரத்தல்: **பிரம்ம கபாலத்தில் சிவபெருமான் பலியேற்ற வரலாறு** ஈண்டு நினைக்கத் தக்கது. பிறப்பதே - 'பிறத்தல் தகுதியோ ? அன்று' என்றவாறு : ஏகாரம், வினாவோடு எதிர்மறையும் இரக்கமும் காட்டும்.

13. சமர் - போர். உடலம் - உடல் : அம் சாரியை. கிளை உறவு - சுற்றத் தாரது உறவுமுறை. பட்ட பாடே - மிக்க வருத்தமேயாகும் : ஏகாரம், தேற் றத்தோடு இரக்கம்.

14. பரிவு - வருத்தம். மற்று: அசை. பவந குமாரன் - வாயுவினுடைய மகனுன வீமன் : ஆறும் வேற்றுமைத் தொகை வட நூல் முடிபு. பவ நன் என்ற சொல் சஞ்சரிப்பவன் என்ற காரணப்பொரு ளுடையது. பணித்து - அடக்கி. போர் ஏறே - போரிற் சிறந்த ஆண் சிங்கமே: உருவகம். ஏறு போல்பவனை ஏறு என்றது உபசாரவழக்கு எனினுமாம். ஏறு-விலங்குகளின் ஆண் பெயர் ஈண்டுச் சிங்கத்தைக் குறித்து நின்றது. குற்றமது : அது, பகுதிப் பொருள் விகுதி. 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை' என்ற ஔவையார் அமுத மொழியை ஈண்டு நினைவுபடுத்திக்கொள்க. கால்: காலம் என்பதன் விகாரம்.

15. துழாய் முடியோன் - துளசி மாலையை அணிந்த திருமுடியை உடைய வன் ஆன கண்ணன். சுரர் - தேவர். சுருதி - வேதம். பதம் - பாதம் ; திருவடி. மடம் பாவை - மடப்பத்தையுடைய பாவை போன்றவளான திரௌ பதி ; பாவை : உவமவாகு பெயர். கோடுகின்ற மொழியவன் - நெறி தவறிச் சொல் மாறுபடுகின்றவனுகிய துரியோதனன்.

16. மறம் தண்டு - கொடுமையையுடைய கதாயுதம். மகவான் - இந்தி ரன் : யாகம் என்னும் பொருள்படுகின்ற 'மகம்' என்னும் சொல்', 'வான்' என்னும் ஆண்பாற்பெயர் விகுதி பெற்று 'மகவான்' என்முயிற்று. மகவான் மைந்தன் - அருச்சுனன். சிலை - வில். திறல் - வல்லமை. இருவர் - தொகைக் குறிப்புச் சொல், நகுலசகதேவர்களை உணர்த்தி நின்றது; இரட்டையர் எனினும் அமையும். குழல் - கூந்தல். நேரார் - பகைவர். குறிக்கின்றுயே - எண்ணுகின்றுயே : ஏகாரம் இழிவுக் குறிப்பு. உம்மைகள்: எண்ணேடு உயர்வு சிறப்புப் பொருளன.

17. வீமனும் என்ற உம்மை, கதைத் தொடர்ச்சி சார்ந்து வந்த இறந்தது தழீஇய எச்ச உம்மை. மீண்டும் என்ற உம்மையும் இறந்தது தழீஇய எச்ச உம்மையே. மேகம் மேனி - முகில்போல் கரிய உடல். பைம்பொன் நெடு தனி திகிரி - பசும்பொன் மயமான பெரிய ஒப்பற்ற சக்கராயுதம். பரந் தாமன் - (எல்லா ஒளிகளினும்) சிறந்த ஒளி வடிவினனுன கண்ணன் ; எல்லா இடங்களினும் சிறந்த வீடாகிய இடத்தையுடையவன் எனினும் ஆம். தாமம் - ஒளி; இடம். பரிந்து - அன்பாக. தலைவ - தலைமையுடையோனே : தன் வழிப்படுத்துதற்காக உயர்த்துக் கூறினுன். கடு கோபம் தணிக - கடுமையான கோபம் ஆறுக : குணப்பெயர் குணியின் முடிபை ஏற்றது.

18. பொறை வேந்தன் - பொறுமைப் பண்பையுடைய தருமன். 'விதி வலியால் கெடுமதி கண் தோன்றுது' என்பதனேடு, 'பேதைப்படுக்கும் இழ வூழ் அறிவு' என்ற திருக்குறளடியை நினைவுபடுத்திக்கொள்க. உவர் நிலம்-களர் நிலம். பன்னகம் - பல் நாகம் - நச்சுப் பற்களையுடைய பாம்பு: பன்னகம் என் பதன் விகாரமுமாம். பின்னிரண் டடிகளில் **பிறிதுமொழிதலணி** காண்க.

19. கான் நெறி போய் - காட்டு வழியிற் சென்று. கடவ நாள் - கடமைப் பட்டனவான நாள்கள் : கேட்பவர்க்குச் சுமை தோன்றுதவாறு தேவர் பொழு தளவையால் 'பன்னிரண்டு நாள்' என்றும், 'ஒருநாள்' என்றும் கூறி யனுப்பப்பெற்றுர் ஆதலினுல், அக் கூற்றை ஒட்டி, நகுலன் '**கடவ நாள்**' என்றுன்:

மனிதர்க்கு ஓர் ஆண்டு தேவர்க்கு ஒரு நாளாம். ஈற்றடியில் **பிறிது மொழிதலணி** காண்க. இத் தன்மை ஆனவனிடம் இனிமேல் தூது செல்வதாற் பயனில்லை என்பது குறிப்பெச்சமுமாம்.

20. வழங்கினுல் - கொடுத்தால். கொந்து உற்ற குழல் - பூங்கொத்துக் கள் பொருந்தின கூந்தல்: கொந்து என்பது கொத்து என்பதன் மெலித்தல் விகாரம். தெரியுமோ - தெரியவருமோ ? (தெரியவாராது) : ஓகாரம் வினுவோடு எதிர்மறைப் பொருட்டு. தெரியாது என்றது அவையடக்கமாகக் கூறியதே ஆகும். ஆதிமூர்த்தி - எல்லாப் பொருள்களுக்கும் முதன்மையான இறைவ ! மூர்த்தி: அண்மை விளி.

21. கன்னன் பார் ஆள - கன்னன் நாட்டை ஆளும்படி. இகல் - பகைமை ; மாறுபாடு. கார் ஆர் குழல் - கரு நிறம் பொருந்திய கூந்தல் ; முகிலை ஒத்த கூந்தலுமாம். எல் : என்னில் என்பதன் மரூஉ. காக்கலாம் - தடுக்கலாம் : ' குற்றமே **காக்க** பொருளா ,' ' செல்லிடத்துக் காப்பான் சினங் **காப்பான்** ' என்ற இடங்களில், **காத்தல்** என்பது **தடுத்தல்** என்னும் பொருளில் வந்தமைபோல.

22. மனம் அறிவான் - மன வலியைக் காணும்பொருட்டு. ஆய - பொருந் திய; ஒன்றை ஒன்று ஒத்ததாகிய எனினும் ஆம். தூயவன் - மனம், மொழி, மெய் தூயவனுகிய சகாதேவன். மூலம் - முதன்மை. ' தன் வல்லமையால் இந்திரன் முதலிய யாவரையும் வென்று, எல்லா உலகங்களையும் கவர்ந்து, செருக்குடன் ஆண்டிருந்த **மாவலி**யிடம், தேவர் முதலியவரைக் காக்கும்பொருட்டு, **வாமன**வடிவில் சென்று மூவடி மண் கேட்டு, இரண்டடி களால் மண்ணும் விண்ணும் அளந்து, மூன்றும் அடிக்கு இடம் இல்லாமையால் மாவலி முடிமேல் அடிவைத்து அழித்தான் **திருமால்** ' என்ற வரலாறு ' எவ் வுலகும் தாய இணையடிகள் ' என்பதால் குறித்தபடியாம். கருத்தினுல் பிணித்தான் - மனமாகிய கயிற்றினுல் கட்டினுன் : இஃது **ஏகதேச உருவகத் தின்பாற் படும்**.

23. ' அடைந்தேம் ஐவர் ' என்பது தன்மையிடத்துப் படர்க்கை வந்த வழுவமைதி. நெடு மால் - பெருமைக்குணம் உடையவனுன கண்ணன்.

24. என்று என்று - என்று பலமுறை மொழிந்து : அடுக்கு, பன்மைப் பொருளது. இறைஞ்சி - வணங்கி. கதிர் முடியாற்கு - ஒளிபெற்ற முடி யணிந்த சகாதேவனுக்கு. ஓம் - அப்படியே ஆகட்டும். மொழி ஒன்றும் - சொற் களுள் ஒன்றையும். ஓதாதொழிக - சொல்லற்க : ஒரு சொல் நீர்மையது : ' ஒழி ' என்பது துணிவுப்பொருள் உணர்த்துவது.

25. மன்று - அவை. மாசு - மானம் கெடுத்தலாகிய குற்றம். பெரு மான் - தலைவன். ' என்று ' என்ற வினு, ' இனி முடிப்பது இல்லை ' என எதிர் மறையோடு இரக்கத்தையும் குறிப்பது.

26. தொல் ஆண்மை பாண்டவர்க்கு - பழமையான வீரத்தையுடைய பாண் டவர் பொருட்டு. பைங்கூந்தல் - கருமையான கூந்தல் ; பசுமை, கருமை இந்த நிறங்களை வேறுபாடு கருதாது கூறுவது கவி மரபு. ' முடிப்பேன் ' என எதிர்காலத்தால் கூறவேண்டுவது, ' முடிக்கின்றேன் ' என நிகழ்காலத் தால் கூறப்பட்டுள்ளது, விரைவும் தெளிவும்பற்றி வந்த காலவழுவமைதி.

புல்லார் - பகைவர். அந்தப்புரம் - அரச மகளிர் வாழும், காவலுடைய அரண்மனை ; உள்ளிடம். குழல் - கூந்தல்கள். குழல் என்ற சாதி ஒருமைப் பெயர்க்கு ஏற்ப, விரிப்பது என்ற ஒருமை முடிபு வந்தது.

27. அணி முரசு - அழகிய பேரிகை. தாரை - ஊது கருவி. நிழற்ற - நிழலைச் செய்ய. கவரி - வெண்சாமரம். புடை - பக்கம். இரட்ட - வீச. அங்கம் ஒரு நான்கும் - யானை, தேர், குதிரை, காலாள் என்ற பகுதிப்பட்ட நால்வகைப் படைகளும். அவனிபர் - அரசர். தன் சூழ - தன்னைச் சுற்றிவர. இப் பாடலும் அடுத்த பாடலும் குளகம். சூழ, சென்றருளி, கண்டான் என இயையும்.

28. கல் வரை - கற்கள் அடர்ந்த மலை; (குறிஞ்சி நிலம்). பாலை கடு சுரம் - பாலை நிலமாகிய கொடிய செல்லுதற்கு அரிய இடம். கான் யாறு - காட்டாறு; (முல்லை நிலம்). நல் வரையும் நீர் நாடு - நன்மையைத் தன்னிடத்தே கொண்ட நீர்வளமுள்ள நாடு; (மருதநிலம்). தொல்வரைய கோபுரம் - பழமையான நிலைகளையுடைய கோபுரம். மல் வரைய தோளான் - மற்போர்த் தொழிலுக்கு வரம்பாக உள்ள தோள்களையுடைய துரியோதனன்.

29. தூதுகொண்டு - தூதனாகிய அநுமானால். எயில் புறத்து - மதிலின் வெளியில். இறுத்தனர் - தங்கியுள்ளார். தொடையல் - மாலை. தூது என்ற சொல் ஒரே பொருளில் பலமுறை வந்தது **சொற்பொருட் பின்வருநிலையணியாம்.**

30. வலம்புரி - சங்கு. திகிரி - சக்கரம். கார் வலம் புரி கோயில் - முகில்கள் வலமாகச் சூழ்ந்து செல்லுதற்கு உரிய அரண்மனை ; (வானளாவிய அரண்மனை என்றபடி). போர் வலம் புரி நிருபர் - போரில் வெற்றியை விரும்புகின்ற அரசர். பொலம் - பொன். 'தார் வலம்புரியவன்' என்பதை 'வலம்புரித் தாரவன்' என விகுதிபிரித்துக் கூட்டுக : நந்தியாவட்ட மலர் மாலையையுடையவனாகிய துரியோதனன். இதனுள் ஒவ்வோரடியிலும் முதற்சீர் முதலெழுத்துத் தவிர இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றி நின்று பொருள் வேறுபடவந்தமை **திரிபு** என்ற சொல்லணியாம். இவ்வாறே முன்னும் பின்னும் பிறவற்றிலும் இவ்வணி காண்க.

31. வந்து வந்து - மிகுதியாக வந்து : அடுக்கு, மிகுதிப் பொருளது. மருங்கு - பக்கம். முதலடி, **முற்றுமோனை.** கண்மலர் - மலர்க்கண்: முன்பின்னாகத் தொக்க உவமத்தொகை. புத்தி என்பது புந்தி என மெலிந்து நின்றது.

32. பயோததி - திருப்பாற்கடல் : பயஸ், உததி என்ற இரண்டு வட சொற்களால் இயைந்து தமிழில் பயோததி என விகாரப்பட்டு நின்றது. பயஸ் - பால். உததி - கடல். பன்னகாதிபப் பாயல் - பன்னகம்+அதிப+பாயல் - பாம்புகளுக்குத் தலைவனான ஆதிசேஷனாகிய படுக்கை. கண்ணன் எழுந்தருளப் பெற்ற குடில், கண்ணனது வாழு மிடமாகிய பொருள்களுள் ஒன்றன் கூறாக இருக்குமோ என ஐயமுற்றார் : **ஐய வுவமையணி.** குடில் - குடிசை.

33. தோடு வந்து செந்தேன் நுகர் சுரும்பு சூழ் தொடையாய் - பூவிதழ்களில் வந்து சிவந்த நிறமுடைய தேனைப் பருகுகின்ற வண்டுகள் சுற்றிலும் மொய்க்கப்பெற்ற மாலையை யணிந்த விதுரனே ! கேட்டு - கேட்டற்கு : கேட்க என்னும் செய என் னெச்சத்தின் திரிபு.

34. முழக்கு - ஒலி. வழங்கான் - கொடான். தழக்கு - ஆரவாரம். நாலிரு திசையினும் - எட்டுத் திக்குக்களிலும். எட்டுத் திக்குக்களாவன : நான்கு பெருந் திக்குக்களும் நான்கு மூலைத் திக்குக்களுமாம். உழக்கினால் அலது - வருத்திக் கலக்கினாலல்லாமல்.

35. வாவி - நீர்நிலை. உகண்டு எழ - துள்ளி எழுதலினால். அளி - வண்டு. பழனம் நாடு - கழனிகளையுடைய குருநாடு. நாளை - நாளைக்கு ; எதிர் காலத்தில். மூளை வாய் உக - மூளைகள் வாய்வழியே சிந்தும்படி.

36. நகம் - மலை : கோவர்த்தன மலை. காள முகில் - கரிய மேகத்தை ஒத்த கண்ணன். என் அகந்தனை ஒழித்து - என் வீட்டிற்கு வருதலை நீக்கி. நென்னல் - நேற்று. பொன் அகம் கொள் புயம் விதுரன் இல்லிடை - பொன் அணிகளைப் பூண்ட தோள்களையுடைய விதுரன் வீட்டில். இனி, பொன் நகம் கொள் புயம் - பொன் மலையை ஒத்த தோள் என்றும், பொன் அகம் கொள் இல் - திருமகள் இடமாகக் கொண்ட வீடு என்றும், பொன் நகம் கொள் இல் - மேருமலையை ஒத்த அரண்மனை என்றும் உரைக்கலாம். பகருவான் - கூறுவான்.

37. என் இல் - என் வீடு. நின் இல் - உன் வீடு. மின்னின் மின் இலகு - மின்னலைவிட மிகுதியாக ஒளி வீசுகின்ற. விறல் - வெற்றி. உன்னில் - எண்ணிப் பார்க்குமிடத்து. ‘ உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்த லாகாது ’ என்பது நான்கா மடிக்கு ஏற்ற பழமொழி.

38. பதாகை - பெருங்கொடி. அழன்று - கோபித்து. பொர உன்னினும் - போர் செய்யக் கருதினாலும். இரவி - சூரியன். மதியம் - திங்கள் ; சந்திரன்.

39. வழுவாது - தவறாமல். ஏதிலார்கள் - அயலார்கள். தீது - குற்றம். கோது - குற்றம். மகிப - அரசனே ! கொடுத்தி - கொடுப்பாய். ஏ - அசை.

40. கேசவன் - கண்ணன். உரிமை யாவையும் - உரிமையான பொருள்களை யெல்லாம். விரகு - சூழ்ச்சி ; தந்திரம். சீறி - கோபித்து.

41. அமரர் - தேவர். புகலில் என் - சொன்னால் என்ன ? வேய் - அணிந்த. தொடையல் - மாலை. சமர் - போர். என் என்ற வினா, அதனால் எனக்கு வருவதொரு தீங்குமில்லை என்ற எதிர்மறைப்பொருளைக் குறித்து நின்றது.

42. கார் வழங்கு உரும் - முகில் வெளியிடுகின்ற இடி. தார் - மாலை. தட மார்ப - பரந்த மார்பையுடையவனே ! உந்தி - கொப்பூழ் ; நாபி.

43. மாடு - பக்கம். அளி குலம் - வண்டின் கூட்டம். மகரம் வேலை - சுறா மீன்களையுடைய கடல். உறை - உறையும் இடம். கரந்து போயினர்கள் - மறைந்து ஓடிப்போனவர்கள். இதனை விடுக - இக் கருத்தை ஒழிக.

44. தந்தை - சந்தனு. இளைய தாய் - பரிமளகந்தி. இரு தம்பியர் - சித்தி ராங்கதனும் விசித்திர வீரியனும். கொடுத்தவன் - வீடுமன். முந்த - பழமை யாக. என்னது ஆகும் - என்ன முறைமை யுடையதாகும் ?

45. உரிமை - அரசாட்சி யுரிமை. ஒக்க - ஒருநிகராக. பொரு - போர்செய்யும் தன்மையுள்ள. குலம் களிறு - சிறந்த யானைகள். திசைக்கண் - எட்டுத் திக்குக்களிலும். எழு புவி பெறும் - ஏழு தீவுகளாக உள்ள உலகம்

முழுவதையும் பெற்ற. நன்று - நன்ருக உள்ளது : சிறிதும் நன்றன்று என்றவாறு : பிற குறிப்பு : எதிர்மறை இலக்கணே. கரிய கோவலன் - கரு நிறமுடைய கண்ணன்.

46. பேர் அரா அணே - பெரிய பாம்பாகிய படுக்கை : ஆதி சேஷ சயனம். வன்பிஞெடு - கொடுமையோடு. விழி தீ எனும்படி - கண்கள் நெருப்பு என்று சொல்லும்படி மிகச் சிவக்குமாறு : கண்கள் மிகச் சிவத்தல் பெருங் கோபக் குறி. செயிர்த்து - கோபித்து. போர் அரா நிருபன் - போரில் வல்ல பாம்பு களுக்குத் தலைவனுன ஆதிசேடன் : 'மனிதரைக் காப்பவன்' என்னும் பொருளை யுணர்த்தும் 'நிருபன்' என்ற பெயர் இங்கே காரணம் கருதாமல் அரசன் என்ற அளவாய் நின்றது. சுடிகை - உச்சிக் கொண்டை : இங்கே, அதையுடைய தலே.

47. அடல் ஆண்மை - வெல்லும் வீரம். அடர்த்தியேல் - போர் செய்வா யாஞல். கை வழங்குக - கைபோட்டுக் கொடுப்பாயாக : கைபோட்டுக் கொடுத் தல் என்பது ஒப்புக்கொண்டதாகச் சூள் செய்து கொடுத்தற்கோர் அறிகுறி. தூணிடை - தூண்மீது. காவலன் - அரசன் ஆன துரியோதனன்.

48. இருவர் - குந்தியும் மாத்திரியும். முதல் - முதன்மையாய். ஐவர் - எமன், வாயு, இந்திரன், அசுவிநி தேவர் இருவர். மின் - மின்னலே ஒத்த பெண் : உவமவாகு பெயர். பரிவு - அன்பு. அம்ம : வியப்பு.

49. துவரை நாதன் - துவாரகைக்கு அரசஞகிய கண்ணன். சால முற்றும்- மிகவும் முடிவுபெறும். தணந்து - நீங்கி. சிலே - வில். சீலம் - நல் லொழுக்கம். தீது - தீய பண்பு. செயிர்ப்பரோ - வெகுள்வரோ ? வெகுளார் : ஒகாரம், விஞவோடு எதிர்மறைப்பொருட்டு. இப் பாட்டில் **வேற்றுப்பொருள் வைப்பணி** காண்க.

50. கரிந்து - கருகி. சருகு ஆகவும்- சருகுபோல் உலர்ந்து போகவும் : சருகு - உலர்ந்த தழை. புதிய கமலம் வாள் முகம் - அன்றலர்ந்த செந் தாமரை மலர் போன்ற ஒளி பொருந்திய முகம். இணே - இரண்டு. நெடிது உயிர்த்திடும் - பெருமூச்சு விடுகின்ற. இராச ராசன் - அரசர்களுக்கு அரசஞன துரியோதனன்.

51. வன்பு - கொடுமை. உண்டி - உணவு : உண்ணப்படுவது. பதா கினி - சேனே. பதாகிநீ என்னும் வட சொல்லுக்குக் கொடியையுடையது என்பது பொருள் : பதாகா - கொடி. இன் அமுது - இனிய நல்லுணவு. ஓதனம் - உணவு. என் பகைதனக்கும் உற்ற பகை அல்லனே - எனக்கு நேரில் பகைவஞக உள்ளவனினும் (மறைந்து உட் பகைவஞக வுள்ள இவன்) மிக்க பகையாளி அல்லனே ? இனி, 'எனக்குப் பகைவஞக வந்த கண்ணனேத் தனக்கும் பொருந்திய பகைவஞக இவன் எண்ணவேண்டுவது கடமையன்றோ ?' என்றும் உரைக்கலாம்.

52. விழைந்து - விரும்பி. இன்பு உற - இன்பம் மிக. முயங்கினும் - கூடி யிருந்தாலும். பொது மடந்தையர் - யாவருக்கும் பொதுப்பட்ட விலே மகளிர். இது அல்ல : ஒருமைப்பன்மை மயக்கம். என் சொலி வெறுப்பது - 'என்ன சொற் சொல்லி வெறுக்கவேண்டுவது ? வெறுக்கக் காரணமில்லே ; தாயின் பண்பு மகனேத் தொடர்ந்தது' எனப் பழித்தான்.

53. இன்னவாறு - இவ்வாறு. வசை - பழி மொழி. குருதி சோர - இரத்தம் ஒழுக. வாள்கொடு - வாளால். வானவர் - தேவர்.

54. ஈண்டு - இவ் விடத்தில். அவர்க்கு - அப் பாண்டவர்களுக்கு. அடர்த்தியே - வருத்துகின்றாயே! மாண்டவர்க்கு - (அறிவு குணம் செயல்களில்) மாட்சிமைப்பட்டவர்களுக்கு: பாண்டவர்க்கு. இனி, 'மாண்டவர்க்கு உதவியாய' எனக்கூட்டி 'நல்லோர்களுக்குத் துணைவரான' எனவும், 'மாண் தவர்க்கு உதவியாய' எனக்கொண்டு, 'சிறந்த தவத்தைச் செய்யும் முனிவர்களுக்கு உதவுபவரான' எனவும் பொருள் கொள்ளலாம்.

55. சொல் இரண்டு புகலேன் - இரண்டு சொற்கள் சொல்லமாட்டேன்: சுருக்கமாக அன்றிப் பல சொற்கள் கூறேன் என்றும், இன்று சொன்ன சொல் என்றும் தவறேன் என்றும் கருத்துப்படும். வெம் கணை தொடேன் - கொடிய அம்பைத் தொடுக்கமாட்டேன். எனு - என்று சொல்லி. வில் இரண்டு - சிவபெருமான் ஏந்திய வில் ஒன்று, திருமால் ஏந்திய வில் ஒன்று; இனி, விதுரன் தான் வைத்திருந்த இரண்டு விற்கள் எனவும் ஆம். உயர்ந்த வில் - உயர்ந்ததாகிய திருமால் ஏந்திய வில்; இனி, விதுரன் தான் வைத்திருந்த இரண்டு விற்களுள் சிறந்த வில் எனவுமாம். சிவன் வில், திருமால் வில் என்ற அவ் விரண்டு விற்களுள் பலகால் முறிவுபட்ட சிவன் வில்லினும், என்றும் முறியாத திருமால் வில் சிறந்ததென்பது புராணவழக்கு. திருமால் வில், வழிவழியாக விதுரன் கையில் வந்து சேர்ந்ததுபோலும்! மல் இரண்டினையும் - சாணூரன், முஷ்டிகன் என்ற மல்லர்கள் இருவர்களையும். இருவர் - கண்ணன், பலராமன். காளம் முகில் - கரிய மேகம்போன்ற கண்ணன். 'இருவராகி முன் மலைந்த காளமுகில்' என்றது 'ஆவேச அவதாரமாகிய பலராமனினும், அம்ச அவதாரமாகிய கண்ணன் சிறந்தவன்' என்ற தலைமைபற்றிக் கூறியதாகும்.

56. உறுதி சொன்னது - நன்மை தரும் சமாதான மொழி கூறியது. மூரி வில் - வலிமையையுடைய வில். இறுத்தது - ஒடித்துப்போட்டது. கங்குல் - இரவு. புரந்தரற்கு ஈந்தது - தேவேந்திரனுக்கு (க் கவச குண்டலங்களை) ஈந்தது. மைத்துனர்க்கு - மைத்துனர்களான பாண்டவர்க்கு. (அத்தை மைந்தர்களை மைத்துனர் என்பது முற்கால வழக்குப்போலும்!) அசுவத்தாமனை வேறுபடுத்தியது, 'மற்றெலாம்' என்பதில் அடங்கும்.

---

6. திருவிளையாடற் புராணம்

கூடற் காண்டம்

இசைவாது வென்ற படலம்

1. கூடல் - மதுரை : மதுரையை அழிக்குமாறு வருணன் ஏவிய முகில்களைத் தடுக்கும் பொருட்டுச் சிவபெருமான் சடையிலிருந்த நான்கு மேகங்களும் அவன் ஏவல்படி உயர்ந்து நான்கு மாடங்களாகக் கூடி நின்ற காரணத்தால், அந் நகர் நான்மாடக் கூடல் என்னும் பெயருடையதாயிற்று. 'நான்மாடக் கூடல்' என்பது 'கூடல்' எனக்குறைந்து நின்றது. ஆடகம் - பொன். கொடிய - வளைவுடைய; கொடுமை - வளைவு : கோடிய என்பதன் விகாரமுமாம். வில் குரிசில் - வில்லை ஏந்திய சோமசுந்தரக்கடவுள். அடியவனுக்கு - அடியவனாகிய பாணபத்திரனுக்கு. வீடு அரு - அழிவு இல்லாத. பொரு இல் - ஒப்பில்லாத. பரமன் - இறைவன். மாடகம் - முறுக்காணி. யாழ் வழி - யாழின் வழியே. விறலி - பாடினி.

2. கதி - சிவ கதி. அம் பொன் மௌலி - அழகிய பொன்னாலாகிய முடி. புரவலன் - அரசன். புவி மடந்தையை வேட்டு - நில மகளை மணந்து. தழீஇக் கொடு - தழுவிக்கொண்டு. நயம் - இன்பம். மன்பதை - மக்கட் கூட்டம். பஞ்சவன் - பாண்டியன். அஞ்சனம் உண்கண் மரபின் வந்த மடவார் - மையுண்ட கண்களையுடைய குடிப்பிறந்த மனைக்கிழத்தியர். மையல் செய்யும் மடவார் - மயக்கம் செய்யும் காமக்கிழத்தியர். மாது, ஒ - அசைகள்.

3. போகம் மடவார் - இன்பம் விளைக்கும் காமக்கிழத்தியர். மதுரம் கீதம் - இனிய இசை. விஞ்சை - கல்வி : வித்தை என்பதன் போலி. வலாள் - வல்லவள் : வல்லாள் என்பதன் இடைக்குறை. பன்னகம் - பாம்பு. கீதம் வினை - இசைபாடும் தொழில். இகல் - பகை. காதல் மடம் மாது - காதலுக்கு உரிய இளமை பொருந்திய காமக்கிழத்தி.

4. செருக்கு - இறுமாப்பு. ஈடு அழிப்பல் - வலி யழிப்பேன். எழீஇ - எழுந்து : சொல்லிசை யளபெடை. இறைமகன் - மன்னன். தோடு இற பொரு கயல் கணினாள் - தோடு என்னும் காதணி இற்றொழியும்படி போர் புரியும் கண்ணையுடைய அந்தக் காமக்கிழத்தி : கண் காதளவு ஓடுதலை இவ்வாறு கூறினார். கணினாள் என்பது கண்ணினாள் என்பதன் இடைக்குறை. ஈழ நாட்டினும் - ஈழ நாட்டினின்றும்.

5. பந்தம் யாழ் முதுகு தைவர விட்டு - கட்டமைந்த யாழானது முதுகினைத் தடவுமாறு தொங்கவிட்டு. பாடல் ஆயம் - பாடும் மகளிர் கூட்டம். கின்னர மாது - இசைபாடும் தேவ சாதியைச் சேர்ந்த ஒருத்தி. சந்தம் எழ் இசை - பண் அமைந்த எழு இசைகள். தீ பழி - கொடிய பழி.

6. பத்திரன் - பாணபத்திரன். அவள் ஆற்றுது உத்தரம் சொலினும் - அவள் உன்னோடு பாடமுடியாமல் வேறு போக்குச் சொன்னாலும். சித்தம் - மனம். நாணம் உற - வெள்குமாறு. வஞ்சினம் - சூள்; சபதம். செல்லல் - செல்லாதே : அல் விகுதி எதிர்மறையில் வந்தது. எய்த்த - இளைத்த. இருக்கை - இருப்பிடம். 'வருக என்று' என்பது 'வருகென்று' என அகரம் தொக்கு நின்றது.

7. பத்திரன் பெருந்தகை விறலி - பாணபத்திரன் மனைவியாகிய மிக்க கற்பினையுடைய பாடினி. தகை, ஈண்டுக் கற்பு. என்னொடு - எனக்கு ஒப்பாக. உளர்கொலோ - உளரோ? கொல் - அசை. உன்னி - தன்னை நன்கு மதித்தமையால்.

8. ஆடு அமை தட தோளினாய் - அசையும் மூங்கிலை ஒத்த பெரிய தோள்களை யுடையவளே! பாட வல்லையோ - பாடுதற்கு வலியுடையையோ? பகர் - கூறு. கோடு அரு தகை கற்பு - மாறுதல் இல்லாத பெருமையையுடைய கற்பு. வீடு அரு கருணை - அழிதல் இல்லாத அருள்.

9. பரிபவம் - துன்பம்; மானக்கேடு. உழந்து - வருந்தி. மது கால் எடு வார் குழல் - தேன் பொழியும் மலர் அணிந்த நீண்ட கூந்தல். எடு - இதழ்: இதழ்களையுடைய மலருக்கு ஆகிநின்றது. இருக்கை உய்த்து - இருப்பிடத்துக்குப் போகவிடுத்து. திரை - அலை. பொருநை - தண்பொருநை ஆறு; தாமிரவருணி. நிருபன் - அரசன்.

10. மற்றை வைகல் - மறுநாள். அவையிடை - சபையில். நேர்கூட்டி - ஒருவருக்கொருவர் நேரில் இருக்குமாறு செய்து. கலத்தினும் போந்த - மரக்கலத்தினின்றும் வந்த: மரக்கலத்தினால் வந்தவளை மரக்கலத்தினின்றும் வந்தவள் என்றார். கலம் என்பது மரக்கலம் என்பதன் முதற்குறை விகாரம். மதர் நெடு கண் - மதர்த்த நீண்ட கண். கணாள்: கண்ணாள் என்பதன் இடைக்குறை விகாரம்.

11. குற்றம் - செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்னும் குற்றங்கள்: இவை மரக் குற்றத்தால் வருவன என்பர். குணங்கள் - குற்றங்கள் இல்லாத கொன்றை, கருங்காலி, முருக்கு, குமிழ், தணக்கு முதலிய மரங்களால் இயன்றிருப்பன. யாழ்க் கோல் - யாழினுடைய தண்டு; யாழாகிய கோலுமாம். தெய்வம் யா - தெய்வங்கள் யாவை? இசைப்பது - ஒலிப்பது. உயிர் - உயிரெழுத்து. உடம்பு - மெய்யெழுத்து. அவைக்கு - அவற்றிற்கு: சாரியை தொக்கு நின்றது. உத்தரம் பேசி - விடை கூறி. மற்று - பின். எனோடு: என்னோடு என்பதன் விகாரம். வசை - பழி; குற்றம்.

12. இருமையும் பெறு கற்பினாள் - இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் அடைதற்குரிய கற்புடையாள். கலத்தின் வரும் அரு பெறல் கல்வி - மரக்கலத்தினின்றும் வந்த பெறுதற்கரிய கல்வி: உடையாள் தொழில் உடைமைமேல் ஏற்றிக் கூறப்பட்டது. கற்பின் தன்மை வாய்க்கப் பெறுதாள் என்பாள், 'பலர் விரும்புறு பெண்மையின் செருக்கும்' என்றாள். பெண்களுக்கு உரிய நாண் சிறிதுமின்றி, அரசவையில் இவ்வாறு பேசுகின்றாய் என்பாள், 'சபையறிய வாய் திறக்கவேண்டாவோ' என்றாள் பாடினி.

13. நெய் உண் பூ குழல் - நெய் பூசிய மலர்க ளணிந்த கூந்தல். மடவரால் - பெண்ணே! வாது - இசைப் போர். வையும் - இகழும். பூசல் - போர். பாவையர் - பாவை போன்ற மகளிர். எதிர் - எதிராவர். 'மானம் விற்று உன்போல் உய்யும் பாவையரே அதற்கு எதிர்' என்றதனால், 'நீ மானத்தை விற்றுப் பிழைக்க வந்துளாய்' என்றவாறு ஆயிற்று.

14. மீனவன் - பாண்டியன். துன்று தார் குழல் - நெருங்கிய மாலையை அணிந்த கூந்தல். அரிவை - பெண். நடுவுநிலையுடன் அவர்கள் பூசலை விலக்கினான் அல்லன் என்பார், 'விலக்குவான்போல் எதிர்விலக்கி' என்றார்.

15. யாழ் இடம் தழீஇ - யாழினை இடத் தோளில் தழுவி. குரல் வழி - குரல் என்னும் நரம்பின் வழியே. முகிழ் விரல் போய் உந்த - முகிழ்த்த விரல் சென்று தாக்க ; காந்தள் முகிழ்போன்ற விரல் எனினும் அமையும். பெருமிதம் நகை - செருக்கை வெளிப்படுத்தும் புன்னகை. சந்தம் ஏழ் இசை - பண் அமைந்த ஏழ் இசைகள். செவிக்கு - செவிக்கண் : உருபு மயக்கம். அன்பு வந்த காதலாள் - அன்பு வளர்தற்கு ஏதுவாகிய காதலைச் செய்பவள் ; காமக்கிழத்தி. மழலை இன் அமுது என - இளஞ் சொல்லாகிய இனிய அமுதம்போல ; இளஞ்சொற் போலவும் அமுதம்போலவும் எனினும் அமையும்.

16. வாங்கினள் - எடுத்து : முற்றெச்சம். முறுக்கினள் - முறுக்கி : முற்றெச்சம். விசித்து - கட்டமைத்து. வாள் நரம்பு - ஒள்ளிய நரம்பு. எறிந்து - தாக்கி. மடுத்தனர் - கேட்டு ; நிறைத்து : முற்றெச்சம். மெல்விரல் நடை வழி - மெல்லிய விரல் நடத்துதலால் உண்டாகும் ஓசையின் வழியே. நா விளை அமுதம் - நாவால் விளைக்கும் இசையமுதம். 'விரல் நடைவழி நா விளை அமுதம்' என்றது யாழிசையோடு பொருந்த மிடற்றுால் பாடும் இசை. விறலியும் என்னும் உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொரு ளுடையது.

17. தென்னவன் - பாண்டியன். உட்கோள் - உட்கருத்து. எல்லை - முடிவு. தெரிந்தனர் - தெரிந்து : முற்றெச்சம். முன்னவன் - இறைவன். மும்மையும் - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூவாசைகளும். இச் செய்யுளில் **வேற்றுப்பொருள் வைப்பணி** காண்க.

18. பொன் தளிர் அனையாள் - பொன் தளிர்த்தா லொத்த மேனியை யுடைய காமக்கிழத்தி. மையல் புது மது - காமமாகிய புது நறவு. நுகர்ந்து - பருகியதால் : எச்சத்திரிபு. கன்னி நாடவன் - பாண்டியன். அவை - அவை யத்தார் : இடவாகு பெயர். இது - இவ் விசை வாதின் முடிவு. வென்று அடு வேல் கணார் - வென்று பகைவரைக் கொல்லும் வேல் போன்ற கண்களை யுடைய மடவார். கணார் என்பது கண்ணார் என்பதன் இடைக்குறை. மன், ஓ : அசைகள்.

19. மருவிய ஆயம் - தன்னைச் சூழ்ந்த மகளிர் கூட்டம். விருந்தினாள் - புதியளாக வந்த ஈழப் பாடினி. புகழ்ந்ததே புகழ்ந்ததாக - அரசன் நெறி திறம்பித் தன் பாட்டைப் பொய்யாய்ப் புகழ்ந்ததே உண்மையாகப் புகழ்ந்ததாக எண்ணி. பெருமிதம் தலைக்கொண்டு - இறுமாப்பு மேற்கொண்டு. ஆறா - நீங்காத. மஞ்சம் - கட்டில். அணை - படுக்கை. ஆர்வம் திளைத்து - மகிழ்ச்சி மிக்கு.

20. வணங்குறு மருங்கு - வளையும் இடை. மதங்கி - பாடினி. அணங்கு - துன்பம். இறை கொண்ட - தங்குதல் கொண்ட. நெஞ்சள் - உள்ளத்தளாய் : குறிப்பு முற்றெச்சம். அம் கயல் கண்ணி - அழகிய கயல்மீன்போன்ற கண்ணை யுடையவள் : மீநாட்சி. குரை கழல் - ஒலிக்கும் வீரக் கழல். உணங்கினள் - வாட்டமுற்று : முற்றெச்சம். கண்ணீரள் - கண்ணீரையுடையவளாய் : முற்றெச்சம்.

21. தென்னவனாகி - சுந்தர பாண்டியனாகி. வழுதி - இராச ராச பாண்டியன். வாரம் வழி - அன்பு சென்ற வழியே ; பட்சபாதமாய். தூக்கி - ஆராய்ந்து.

22. உறுகண் நோய் - துன்ப நோய். துடைப்பது - போக்கக்கடவாயாக: வியங்கோள்; 'மறப்பது அறிவிலென் கூற்றுக்களே' என்புழிப்போல. வெல்லுமா: வெல்லுமாறு என்பதன் தொகுத்தல் விகாரம். செய்தும் - செய்வோம். மன், ஓ - அசைகள்.

23. மற்றை ஞான்றும் - மறு நாளும். அழைத்தனன் - அழைப்பித்து: முற்றெச்சம் பிறவினைப்பொருளில் வந்தது. குன்றுபோல் புயத்தான் - மலைபோலும் தோளையுடைய பாண்டியன். நென்னல் - நேற்று; முன்னாள். மன்றுளார் - அவையில் உள்ளார். பாண் மடந்தை - பாடினி (பத்திரன் மனைவி).

24. ஏறு அனையாய் - ஆண் சிங்கம் போன்றவனே! ஞாலம் - உலகம். வாரம் வழக்கினை - அன்பின் வழி நின்று வழக்கினை ஆராயும் தன்மையுடையை ஆனாய். அவையும் - அவையில் உள்ளாரும்: சொல்லால் அஃறிணை, பொருளால் உயர்திணை. துலை நா அன்ன - தராசின் நாவினைப்போல் நடுவு நிலைமையுள்ள. பன்னகம் - பாம்பு; பாதங்களால் செல்லுதல் இல்லாதது. பாடுகேம் - பாடுவோம். பாடும் எல்லை - பாடுங்கால்.

25. என்னு - என்று. சந்நிதியில் - இறைவன் திருமுன். அனைய வாறே - அவ்வாறே. செய்மின் - செய்யுங்கள். மரு வளர் குழலினர் - மணம் ஓங்கும் கூந்தலையுடைய விறலியர் இருவரும்.

26. தென்றல் நாடனும் - தென்றல் காற்றின் பிறப்பிடமாகிய பொதியில் மலையையுடைய பாண்டியனும். மந்திரம் செல்வரும் - அமைச்சரும். நன்று தீது - (இசையின்) குணம் குற்றம். நால்வகை கேள்வியோர் - கீதஞானம், இலய ஞானம், சுருதி ஞானம், தாள ஞானம் என்னும் நான்கு வகை ஞானமுமுடையோர். வெள்ளி மா மன்றம் வாணர் - வெள்ளியால் இயன்ற சிறந்த மன்றத்தில் எழுந்தருளும் இறைவர்: வாழ்நர் என்பது வாணர் என மருவி நின்றது.

27. நொய்தின் - விரைந்து. நொடித்து - கூறி. 'ஏவலோர் அழைத்தாரொடு' எனக் கூட்டி, 'அழைத்தாராகிய ஏவலாளருடன்' எனப்பொருள் உரைத்துக்கொள்க. மை திகழ்ந்த விழியார் - மை விளங்கிய விழியையுடைய அவ் விறலியர். ஆல்: அசை.

28. படிமை - தவக்கோலம்; தவ ஒழுக்கமுமாம். படிமை ஆர் தவம் பாடினி - தவக்கோலம் நிறைந்து தவ ஒழுக்கமுடைய விறலி; பாணபத்திரன் மனைவி. கோட்டம் - கோணுதல்; நெறி பிறழ்தல். கடுமை - விரைவு: கடி என்ற உரிச்சொல்லடியாக வந்தது. கலம் - மரக்கலம்.

29. கற்பு - கல்வி யறிவு. மிக்கு எழு - மேம்பட்டு எழுந்த. கற்பு - நிறை. சித் பரம் சுடர் - அறிவே வடிவமான மேலான ஒளி; சோமசுந்தரக் கடவுள். சேவடி - செம்மை அடி - சிவந்த அடி. அற்பு: அன்பு என்பது வலித்தல் விகாரம் பெற்றுநின்றது. பொற்பு - அழகு. பொன் - திரு. அரோ: அசை.

30. அலங்கும் - அசையும். ஆரம் - முத்துமாலை. அங்கதம் - தோளணி. கலன்கள் - அணிகலன்கள். குழாம் - கூட்டம். இலங்கும் - விளங்கும். புலன் - உணர்வு. நாவலர்போல் - நாவலருள் ஒருவர்போல்.

31. வேத்தவை - வேந்து+அவை: வேந்து என்பது வேத்து என வலித்தல் விகாரம் பெற்று நின்றது. அரு கலம் - அரிய மரக்கலம். வேய் - மூங்கில். தட தோள் - பெரிய தோள். வேத்திசை - அரசர்க்கு உரிய இசை. முந்தையோர் - முன் கொண்டாடினவர். சிந்தை வேட்டு - மனம் விரும்பி. ஒன்றும் செப்பினர் இல்லை - யாதும் கூறினரில்லை.

32. வீணை தோள் இடன் ஏந்திய வெண்மலர் வாணி - வீணையை இடத் தோளில் ஏந்திய வெண் டாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகள். பாடு அ இருக்கை - பாடும் அவ் வாசனத்தில்: பதுமாசனத்தில் என்றபடி. வைகி - இருந்து. யாழ் நரம்பு எறிந்து - யாழின் நரம்பை விரலால் தாக்கி. 'யாழ் நரம்பு' என்பது 'யாணரம்பு' என மருவிற்று. எழீஇ - எழுப்பி: சொல்லிசை யளபெடை. பாணர் கோமகன் பன்னி - பாணர் பெருமானாகிய பத்திரன் மனைவி: பத்தினி என்பது பன்னி யென மருவி நின்றது. ஆல்: அசை.

33. குடங்கை நீர் - அகங்கை அளவான நீர். இடுவார்க்கு - இட்டு வழி யிடுவார்க்கு. இமையா குஞ்சரம் - ஐராவதம்: தேவர்கள் இமையா நாட்டம் உடையவராகலின், தேவர்க்கு அரசனாகிய இந்திரன் யானையை 'இமையாக் குஞ்சரம்' என்றார். படம் கொள் பாய் - படத்தைக்கொண்ட அரவாகிய அணை. பூ அணை - தாமரை மலராகிய தவிசு. தருவாய் - அளிப்பாய்: வினை. தருவாய் - அளிப்பவனாகிய நீ: வினையாலணையும் பெயர். படு தலை - கபாலம். இடங்கள்தோறும் - இல்லங்கள்தோறும். ஏசுவார்க்கு - பழிக்கின்ற புறச் சமயி களுக்கு. என் பேசுவன் - யாது கூறுவேன்? ஏ - அசை. 'வழிபடுவார்க்கு அவ்வளவு பெருஞ்செல்வம் அளிக்கும் நீ, படு தலைகொண்டு இரப்பது, ஆன் மாக்களின் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு அருள்புரியும் காரணத்தால் என்பதனை அறியாமல், புறச்சமயிகள் பழித் துரைத்தால், அதற்குக் கூறும் விடை யாதுமில்லை என்றாள்' என்க.

34. தேன் ஆர் மொழியார் - தேனின் சுவைபோலும் சுவை நிரம்பிய சொற்களையுடைய மகளிர். வீடு என்று - வீடுபேறு உரியது என்று. நானா - பலவகைப்பட்ட. நாரி உரு ஆனாய் - பெண் வடிவம் ஆயினாய். பிறர் - புறச் சமயிகள். 'மகளிர் ஆசையை விடவேண்டும் என்று கூறிய நீயே பாதி நாரியுரு வானது, உயிர்களுக்குப் போகத்தை ஊட்டிக் கன்மம் தொலைத்து அருள் புரிவதற்காகும் என்ற உண்மை யுணராமல், புறச் சமயிகள் நின்னைப் பழித் துரைத்தால் அதற்குக் கூறும் விடை யாதும் இல்லை' என்றாள் என்க.

35. வரதன் - அருட் கொடையுடையவன். எவ் வுயிர்க்கும் - எல்லா உயிர் களுக்கும். மாயா விருத்தி வலி - மாயா மலத்தின் தொழில் வலி. சாதம் ஆன - அழியாதது ஆன. வீடு பெறுவார் போல் - வீட்டினை விரும்பி யோகம் செய்வாரைப்போல. விரதம் யோகநிலை - நோன்புகளையுடைய யோகநிலை. 'நீ யோக நெறியில் நிற்பது உயிர்களை யோக நெறியில் புகுத்திப் பேரின்பவீடு அளிப்பதற்காகும் என்னும் உண்மை யுணராமல், புறச்சமயிகள் நின்னைப் பழித் தால் அதற்குக் கூறும் விடை யாதும் இல்லை' என்றாள் என்க.

36. கண் நுதல் மதுரை பிரான் - நெற்றியில் கண்ணையுடைய மதுரை நாயகனாகிய சோமசுந்தரக் கடவுள். பாணி - இசைப்பாட்டு. பண்ணுதல் - இணை, கிளை, பகை, நட்பு ஆன நரம்புகள் பெயரும் தன்மை மாத்திரை அறிந்து வீக்குதல். பரிவட்டணை - வீக்கின நரம்பை விரல்களால் அகமும் புறமும் கரணம் செய்து தடவிப்பார்த்தல். முதல் என்றதனால், ஆராய்தல், தைவரல்,

செலவு, கையூழ், விளையாட்டு, குறும்போக்கு என்பனவும் கொள்க. இசைக் கரணம் எட்டு: வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை என்பன. பயப்ப - பொருந்த. நா விளை அமுதம் - நாவால் உண்டான இசை யமுதம். வாக்கினுள் - வார்த்தாள்.

37. இடை - இடைகலை. இகந்து - ஒழிந்து. மூலம் - மூலாதாரம். நடுவுறு தொழிலால் - சுழுமுனையின் தொழிலால். உள்ளாளம் - உள்ளாள கீதம். கொடிறு - கபோலம். அது - பகுதிப்பொருள்விகுதி. குதூகலம் - மகிழ்ச்சி.

38. கன்னி நாடு உடையான் - பாண்டியன். கைதவன்: பாண்டிநாட்டு வேந்தருள் ஒவ்வொருவருக்கும் உரிய பட்டப்பெயர்; இதற்கு வஞ்சகன் என்று மற்றொரு பொருள்உண்டு. இப் பொருள் பற்றியே அப் பெயர் உண்டாயிற்று என்று தெளிவிப்பான்போல நடுநிலை திறம்பிக் கூற ஒருப்படுகின்றவன் என்றார். முன்னவன் - இறைவன். மனக் கோட்டம் - மனத்தின் கோணல். முரண் - வலி. பொதுமை - நடுவுநிலைமை. இன்னவள்தானே - இந்தப் பத்திரன் மனைவியே. இனையவாறு - இவ்வாறு.

39. கரி உரை - சான்றுமொழி. கைதவன் - பாண்டியன். இலங்கை கைதவம் பாடினி - இலங்கையிலிருந்து வந்த வஞ்சக ஒழுக்கமுடைய பாடினி. புரி குழல் - சுரிந்து கட்டமைந்த கூந்தல். உமை இடம் கரந்து இருந்த அரிய நாவலர் - உமாதேவியார் பொருந்திய இடப்பாகத்தை மறைத்து வந்திருந்த அரிய புலவராகிய சோமசுந்தரக் கடவுள். ஈது அற்புதம் ஈது அற்புதம் - இது வியப்பு, இது வியப்பு: அடுக்கு, உவகையின்கண் வந்தது. அவை - அவையிலுள்ளோர்: ஆகுபெயர். பயந்தனன் - அச்சம் எய்தினன்.

40. செங்கண் ஏறு அழகர் - சிவந்த கண்களையுடைய காளை மாட்டின்மேல் ஏறிவரும் அழகிய சோமசுந்தரக்கடவுள்: 'ஏற்றழகர்' எனற்பாலது 'ஏறழகர்' என விகாரமாயது. ஆடல் - திருவிளையாடல். தெளிந்தனர் - தெளிந்து: முற்றெச்சம். அம் கண் நாயகர் - அழகிய கண்களையுடைய சோமசுந்தரக் கடவுள். சலதி - கடல். வங்கம்மேல் வந்தாள் - மரக்கலத்தில் வந்த ஈழப் பாடினி. வந்தாள்: வினையாலணையும் பெயர். மாண் இழை விறலி - மாட்சிமையுடைய அணிகளை அணிந்த பத்திரன் மனைவியாகிய பாடினி.

41. முந்த - முற்பட. முத்து ஆரம் - முத்து மாலை. எரி மணி கலன் - நெருப்புப்போன்ற மணிகள் அழுத்தின அணிகலன்கள். துகில் - ஆடைகள். ஏனையவட்கும் - மற்றை ஈழப் பாடினிக்கும். வரிசை - சிறப்பிக்கும் பொருள்கள். சிறக்க - மேன்மையுற. வான் இழிந்த தெய்வதம் கோயில் - விண்ணிலிருந்து இறங்கிய தெய்வ விமானம். அறம் கொடி இடம் சேர் பெரு புலவோர் - தரும வல்லியாகிய உமாதேவியை இடப் பாதியில் கொண்ட பெரிய புலவராகிய சோம சுந்தரக் கடவுள். ஆதிகள் - முதலியவைகள். நல்கா - அளித்து.

42. அரண் மூன்று அட்ட முன்னவன் - மூன்று புரங்களையும் அழித்த இறைவன். மொழிவதெல்லாம்: ஒருமைப் பன்மை மயக்கம். இன்ன - இந்த. இறும்பூது - வியப்பு. எய்தா - அடைந்து.

43. விடை கொடு - விடை பெற்றுக்கொண்டு. இயம் - இசைக் கருவிகள். இயக்கம் செய்ய - ஒலிக்க. தன் கோயில் - தனது மாளிகை. மண்ணிய மகிழ்ச்சி வீங்க வைகினன் - நிலைபெற்ற மகிழ்ச்சி மிக இருந்தான்.

---

7. மீநாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

•

1. செங்கீரைப் பருவம்:—இஃது ஐந்தாம் திங்களில் நிகழ்வது கூறுவது. இதைக் குழவி தன் தலையெடுத்து முகமசைந் தாடும் பருவம் என்பர் சிலர்; செவ்விய சொற்களைப் பேசும் பருவம் என்பர் வேறு சிலர். குழவி, ஒரு காலை முடக்கி, ஒரு காலை நீட்டி, இரண்டு கைகளையும் நிலத்தில் ஊன்றிக்கொண்டு, முகத்தை மேல் நிமிர்த்தி யாடுதல் இப் பருவத்துக் குழவியின் செய்கை; அப்போது, செவ்விய சொற்களைச் சொல்லவேண்டும் என்று தாதியர்கள் குழவியை வேண்டிக்கொள்வதாகக் கூறவேண்டும் என்பதே கருத்தாகும்.

நேமி சுவர் - சக்கரவாளகிரி யாகிய சுவர். எட்டு சுவர் கால் - எட்டு அடை சுவர்கள்; அவை : கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்னும் எட்டு மலைகள் என்பர். மேரு தூண் - மேரு மலையாகிய தூண். இரு சுடர் விளக்கு - சூரியன் சந்திரன் என்னும் இரண்டு ஒளி வீசும் விளக்குக்கள். எற்று புனல் - ஊழிக் காலத்தில் மோதும் பெரு வெள்ளம். புது கூழ் - புதிதாய் எஞ்சின உணவு. மத்தம் பெரு பித்தன் - சிவபெருமான். தொந்தமிடல் - கூத்தாடல். முனியாது - வெறுப்புக் கொள்ளாமல். தென்னன் - மலையத் துவச பாண்டியன். அம் பொன் மலை மன்னன் - இமவான்: மேரு என்னும் பொருள்படுகிற 'அம் பொன் மலை' ஈண்டு இலக்கணையால் இமயத்தைக் குறித்து நின்றது என்க.

2. வருகைப் பருவம்:—இது வாரானைப்பருவம் என்றும் கூறப்படும். பதின் மூன்றுந் திங்களில் நிகழ்வது கூறுவது இது. தோழியர்கள் குழந்தையைத் தங்கள் அருகில் நடந்து வருமாறு விரும்பி யழைக்கும் செய்தியைக் கூறும் பருவம் இதுவாகும்.

கடவுள் பழம்பாடல் - கடவுளைப்பற்றிய பழைய பாடல்கள்; அவை : வேதங்கள், சிவாகமங்கள், தேவார திருவாசகப் பாடல்கள் முதலியன. பாடல் தொடை - பாடலாகத் தொடுக்கப்படுவது. பயன் - பொருள். நறை - நறு மணம்; தேனுமாம். துறை தீந் தமிழ் - பல துறைகளையுடைய இனிய தமிழ். அகந்தை - ஆணவம் : ஆகுபெயர். ஆணவம் எல்லாப் பெருங் கேட்டிற்கும் மூலமாயிருத்தல் பற்றி, அதனைக் கிழங்கு என்றார். தொழும்பர் - அடியவர். சிமயம் - உச்சி. பொருப்பு - மலை. பிடி - பெண் யானை. தரங்கம் - அலை. ஒருவன் - சிவபெருமான். ஓவியம் - சித்திரம். மதுகரம் - தேனைத் திரட்டும் வண்டு. குழல் - கூந்தல்.

3. அம்புலிப் பருவம்:—இது பதினைந்தாம் திங்களில் நிகழ்வது கூறுவது. இது, குழந்தையை மங்கையர்கள் தங்கள் இடுப்பில் வைத்துக்கொண்டு அக் குழந்தையுடன் விளையாட வரும்படி சாம பேத தான தண்ட முறையில் கூறிச் சந்திரனை அழைக்கும் செய்தியைக் கூறும் பருவமாகும். சாமம் - இனிமையாகக் கூறல். பேதம் - வேறுபடுத்திக் கூறல். தானம் - ஈகை உணர்த்திக் கூறல். தண்டம் - தண்டித்தலாகக் கூறல். பாடமாக வந்துள்ள பாடல் **சாமத்தால்** அம்புலியை அழைத்தலைக் கூறுவது.

அமுதம் சந்திரனிடமிருந்து கிடைத்தமையின், 'தெய்வக் குழாம் பிழிந் தூற்றிக் குடித்துச் சுவைத்து' என்றார். தெய்வம் குழாம் - தேவர் கூட்டம்.

கோது - சக்கை. அழல் விடம் - நெருப்புப் போன்ற நஞ்சு ; நெருப்பைக் காலு கின்ற நஞ்சு எனினும் ஆம். இரு கோள் - இராகுவும் கேதுவும். உச்சிட்டம் - எச்சில். கலை தோடு - கலைகளாகிய போர்வை. கய ரோகி - க்ஷய ரோகி ; எலும்புருக்கி நோயினன். ' ஒரு நாள் கண்கொண்டு பார்க்கவும் கடவதன்று ' என்றது: விநாயக சதுர்த்தியன்று சந்திர தரிசனம் செய்யலாகாது என்ற விநாயகபுராணத்து வரலாற்றைக் குறிக்கின்றது. கடல் புவி - கடலால் சூழப் பெற்ற உலகத்தி லுள்ளவர் : புவி : ஆகு பெயர். விட்புலம் - விண்புலம் - ஆகாயமாகிய இடம். உடுமீன் கணம் - உடு எனப்படும் விண்மீன் கூட்டம். உடு - நட்சத்திரம். ஆணிப்பொன் வில்லி - ஆணிப்பொன் மயமான மேருவை வில்லாகவுடைய சிவபெருமான்.

4. அம்மானைப் பருவம் :—இது பதினேழாந் திங்களில் நிகழ்வது கூறுவது. தோழிகள் குழந்தையைப் பார்த்து, அம்மானைகளை எடுத்து ஆடியருளும்படி கூறும் செய்தியை இப் பருவம் காட்டும். அம்மானை ஆடுதல் என்பது முத்து பவளம் முதலியவற்றால் ஆன பந்துகளைக்கொண்டு ஆடும் ஒருவகை விளை யாடல்.

குலை - கொத்து. காந்தள் தளிர் கை - காந்தள் மலர்போலும் தளிர் போலும் கை : காந்தள் மலர் வடிவிற்கும், தளிர் மென்மைக்கும் உவமைக ளாக வந்தன. நித்திலம் கோத்த அம்மனை - முத்துக்கள் கோத்து இயற் றப்பட்ட அம்மனை. கோகனகம் - தாமரை. கலைபட்ட - கலைகள் நிறைந்த. வெண் சுடர் கடவுள் - வெண்மையான ஒளியையுடைய கடவுளாகிய சந்திரன். தோய்ந்து - படிந்து ; கூடி. காய் கதிர் கடவுள் - சுடும் கதிர்களையுடைய கடவுளாகிய சூரியன். எய்ப்ப - ஒப்ப. கையில் நின்று முத்தம்மனை முன்னும் செம்மணி யம்மனை பின்னுமாகச் செல்லுதல், ஞாயிறு, தன் மனையாளாகிய தாமரையைச் சந்திரன் தோய்ந்து செல்வதைக் கண்டு மனம் புழுங்கி, அவனைத் துரத்திக்கொண்டு செல்லுவது போன்று இருந்தது என்க. கறங்கு அருவி - ஒலிக்கும் அருவி. ஆரம் - முத்து. திரை - அலை. நால் கோட்டு மத களிறு - நான்கு கொம்புகளையுடைய மதம் பொழியும் ஐராவதம் என்னும் யானை. அனம் பேடை - பெண் அன்னம். ஆகம் - உடல்.

5. ஊசற் பருவம்:—இஃது இருபத்தோராந் திங்களில் நிகழ்வது கூறுவது. குழந்தையை ஊசலி லேற்றிவைத்துத் தோழியர் அவ் வூசலையாட்டும் செய்தியைக் கூறுவது இப் பருவம்.

குழிதல் - உள்வாங்குதல். முசுக்கலை - ஆண் குரங்கு. வெரீஇ - வெருவி ; அஞ்சி. பாரம் - பளுவான. தூங்கும் - தொங்கும். முள் புறம் கனி - முள்ளைப் புறத்திலே உடைய கனி ; பலாக்கனி. கனியின் குடம் - கனியாகிய குடம் : இன், தவிர்வழி வந்த சாரியை. மடைவாய் - மடையில். தட கா - பெரிய சோலை. வள் உகிர் - கூர்மையான நகம். இரிந்து - விட்டு விலகி. மரம் கோடு - மரக் கொம்பு. கீண்டு - கிழிக்கப்பட்டு. மரக் கொம்பு பட்டு சந்திரன் வயிறு கிழிய, அமுதம் அருவியாக விழுதல், திருமால் திரிவிக்கிரம அவதாரம் கொண்ட காலத்தில், அவருடைய கால் வீச்சால், அண்ட கோளகை பிளந்து கங்கை விழுந்தது போன்றது என்க.

8. புலவராற்றுப்படை

1. கா - சோலை. காவில் விளையாடும் மயில் என்க. கடுப்ப - ஒப்ப.

2. நா விளையாடும்..............கவிஞன் - நாவலன்.

3. கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற் கவிகளைப் பாடுவோன். வாதி - காரணமும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறன் கோள் மறுத்துத் தன் மதம் நிறுத்துபவன். கமகன் - அரும் பொருளைச் செம்பொருள் நடையாய்க் காட்டி விளக்குபவன். வாக்கி - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருட் பயன்களைக் கேட்கவும் வேட்கவும் விரித்துக் கூறுவோன்.

4. பழிச்சிய - துதித்த. புலமையாளன் - கல்வியறிவை ஆளுபவன்.

6. திறம்பட - வகைப்பட.

7. ஒல்கா - குறைவுபடாத ; தளராத. பனுவல் - நூல்.

9. பழுத்த - முற்றிய. பவ்வம் - கடல். இலக்கணப் பவ்வம் - இலக்கணக் கடல் : உருவகம்.

10. கலி கடல் - வறுமையாகிய கடல் : உருவகம்.

11. இரு புணை - பெரிய தெப்பம். ஈகை, புணையாக உருவகம் செய்யப் பட்டது.

12. ஓகை - உவகை. செல்வம் என்ற தீவு : உருவகம்.

13. தியாகி - பெருங் கொடையாளி ; வள்ளல் ; தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.

14. மீகான் - மாலுமி ; கப்பலோட்டி. தியாகி என்ற மீகான் : உருவகம்.

15. மாரி சூழ் குடுமி - முகில் சூழ்ந்த மலை யுச்சி. மாரி : ஆகுபெயர். மால் வரை - பெரிய மலை. நேரி - சோழ நாட்டில் உள்ள ஒரு மலை.

16. தரங்கம் - அலை. தாளம் - முத்து.

17. இய லிசை முத்தமிழ் என்றதால் நாடகமும் கூட்டுக.

19. இரை ஊர் - ஒலி தவழும் ; இரையின்பொருட்டு ஊரும் எனவுமாம். வளை - சங்கு.

20. மூவகை முரசு - மண முரசு, வெற்றி முரசு, கொடை முரசு என்பன. அதிர் - முழங்கும். முன்றில் - முற்றம்.

21. ஆழி - கடல். மேழியந் துவசன் - அழகிய மேழிக் கொடி யுடையவன் ; வேளாளன்.

22. சற் குணம் - நற் பண்புகள். லளிதம் - மென்மை. சரச சல்லாபன் - சுவை மிக உரையாடுபவன்.

24. சத்திய வசனன் - மெய்யே கூறுவோன். நித்ய கல்யாணன் - என்றும் இன்பப் பொலிவொடு விளங்குபவன்.

25. அன்பு கனிந்த - அன்பாகிய சாறு சுரப்பதற்குக் காரணமான. இன்பம் கொழு கனி - இன்பமாகிய வளம் மிக்க பழம் : உருவகம்.

26. களஞ்சியம் - பண்டசாலை. கொள் கலம் - கொள்ளும் பாத்திரம்.

27. பிராணன் - உயிர்.

28. கற்பகம் - வேண்டுவது தரும் தேவதரு. மேவலர் - பகைவர். கூற்றம் - நமன்.

29. கலி நோய் - வறுமையாகிய துன்பம். சஞ்சீவி - உயிர் மீட்கும மருந்து.

30. துரைகள் - பெருந் தலைவர்கள். சிகாமணி - முடிமணி.

31. தந்திரம் - உபாயம். விவேகி - நல்லது தீயது பகுத்தறியும் அறிவாளி. யூகி - புத்திசாலி.

32. திறல் - ஆற்றல். சேவகன் - வீரன்.

33. சைவசித்தாந்தம் - சிவாகமத்தின் ஞான காண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்கும் நூல்கள்: அவை பதினான்கு ஆகும். அவை: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா விருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பன. குரிசில் - சிறந்த ஆண்மகன்.

35. கர கம்பிதம் - கையசைப்பு: ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாகச் செய்யும் குறி. சிர கம்பிதம் - தலையசைப்பு.

37–39. நானூற்றுக் கோவை, நாற்கவி வண்ணம், நீடூர்த் தலபுராணம், கலம்பகம்-இவை வடமலையப்பன் பாடிய நூல்கள்.

41. சாருவபௌமன் - சக்கரவர்த்தி; அரசர்கட் கரசன்.

42. தரு - கற்பகத் தரு; ஐந்தருவுமாம். தாரணி - உலகம்.

44. ஞானாகரன் - அறிவுச் சுரங்கம். அபிமானாபரணன் - தன்மதிப்பை அணியாகக் கொண்டவன்.

45. வாரிதி - கடல்.

50. தஞ்சம் - அடைக்கலம்.

53. அவன் பணிந்து - அவனை வணங்கி.

54. களி - களிப்பு.

---

9. சதகங்கள்

தொண்டை மண்டல சதகம்

1. படவு-படகு; தோணி. படவு எங்கு அடல் கடல்-தோணி வருந்துவதற்குக் காரணமான அலை மோதும் கடல். **2-ம் அடி**: 'எங்கிடல்' என்பது திரிபு நயம் நோக்கி 'எங்கடல்' என நின்றது. பனம்பாரர்: அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரில் ஒருவர்; தொல்காப்பியரோடு உடனிருந்தவர்; தொல்காப்பியத்திற்குப் பாயிரம் செய்தவர்.

2. தமிழ் மொழியில் முதன் முதலில் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர் கடைச் சங்கப்புலவர். இவர் இயற்றிய பாரதம் இக் காலத்திற் கிடைப்பதற்கு அரிதாய்ச் சில பாடல்களை பழைய உரைகளில் மேற்கோளாகக்

காணப்படுகின்றன. இங்கே குறிக்கப்பெற்ற பெருந்தேவனுர் கி.பி. எட்டாம் நூற்ருண்டில் நந்திவர்மன் காலத்தில் தொண்டைமண்டலத்தில் இருந்தவர் என்ப; பாரதத்தை, உரைநடையும் ஆசிரியப்பாவும் விரவி வர, வெண்பா யாப்பால் மிகுதியாக, பன்னீராயிரம் பாடல்களால், பாடினவர் இவர். பெரும்பான்மையாக வெண்பாக்களால் அமைந்ததுபற்றி இந் நூலுக்குப் பாரத வெண்பா என்ற பெயர் வழங்குவதாயிற்று. நந்திவர்மன் காலத்திலிருந்த சங்கத்தில் இவர் அரங்கேற்றம் செய்தார் என்று கொள்ளுவர். வித்தகனுர் - அறிஞர். மாருதம் - காற்று.

3. மலி - நிறைந்த. பாக் கிழவோன் - பாக்கிழார்; குன்றத்தூரிலிருந்த வேளாண் குலத்தவர். சேக் கிழவோன் - சேக்கிழார். காராளன் - வேளாளன். கூடல் கிழவோன் - கூடற் கிழார். முதுமொழிக் காஞ்சி - பத்ததிகாரமாய் ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்தாகக் குறட்டாழிசையால் முதுமொழி பயின் றமைந்த நூல். "ஏதமில் அறமுதல் இயல்பிவை யென்னும் மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி" என்பது இலக்கண விளக்கம். சொற்ற - சொன்ன. புரிசை கிழவோன் - புரிசை கிழார்.

4. சனகை - சனகாபுரம். நன்னூல் - சீயகங்கன் என்னும் அரசன் வேண்டுகோளால் பவணந்தி என்பார் இயற்றிய இலக்கண நூல். சின்னூல் - நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் குணவீர பண்டிதராற் செய்யப்பட்ட எழுத்தும் சொல்லும் அமைந்த நேமிநாதம் என்னும் இலக்கண நூல்; நூலாசிரியர், தொண்டைநாட்டில் சிங்களப் பேட்டைக் கருகிலிருக்கும் களந்தை அல்லது கழுந்தையிற் பிறந்தவர்; சைனர்; வச்சணந்திமாலே இயற்றியவரும் இவரே. நூபுரம் - காற் சிலம்பு.

5. கலிங்கப் பரணி - கலிங்கத்துப் பரணி. மேருவில் தீட்டுவித்தோன் - மேருவை எல்லைக் கல்லாகக்கொண்டு எழுதுவித்தவன். கழல் செம்பியன் - கழலணிந்த குலோத்துங்க சோழன். நந்தித் தோன்றல் - நந்தித் தொண்டைமான்; இவனே கருணுகரத் தொண்டைமான் என்பவன். வண்டையர் கோன் - சென்னைக்கும் செங்கற்பட்டிற்கும் இடையில் உள்ள வண்டலூர் மக்களுக்கு அரசன் ஆன கருணுகரத் தொண்டைமான்; சோழன் படைத்தலைவன்; சோழன் பொருட்டுக் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று ஆயிரம் யானைகளை வென்றவன்; 'ஆனை யாயிரம் அமரிடை வென்ற அரசனது வெற்றியைக் குறிக்கும் பரணி' பாடப்பெற்றவன். பரணி பாடினவர் குலோத்துங்க சோழனுடைய அவைப் புலவரான ஜயங்கொண்டார் என்ற கவிச் சக்கரவர்த்தி யாவர்.

6. பொய்யகம் - நிலைபேறு இல்லாத இடம். பிரபஞ்சம் - உலகம். கையகம் நெல்லிக்கனி - உள்ளங்கை நெல்லிக்கனி; தெளிவு என்னும் பொருள் குறிப்பது. கச்சி : காஞ்சிபுரம் என்பதன் மரூஉ. காரிகை - யாப்பருங்கலக் காரிகை. வையகம் என்னும் தமிழ் - வையகம் என்று தொடங்கும் பாட்டு. அப் பாட்டாவது :

> "வையக மெல்லாம் கழனியா - வையகத்துச்
> செய்யகமே நாற்றிசையில் தேயங்கள் - செய்யகத்து
> வான்கரும்பே தொண்டை வளநாடு - வான்கரும்பின்
> சாறேஅந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட

கட்டியே கச்சிப் புறமெல்லாம் - கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்ருன் கச்சி யகம் ” •

என நான்காம் காரிகைப் பாட்டில் பல விகற்பத்தான் வந்த எழடிப் பஃறொடை வெண்பாவிற்குக் காட்டிய எடுத்துக்காட்டு.

7. ‘ குலோத்துங்கன் அவையில், அரச சேவையில் இருந்த வெண் குன்றத்தூர் தவளகிரி முதலியார், தம்முடைய மைந்தன் தமது தோட்டத்தில் பாம்பு கடித் திறந்தபொழுதில், விருந்தினராக வந்த கம்பருக்கு அந்தச் செய்தி தெரியாதபடி மறைத்தது ’ இப் பாடலில் குறிக்கப்பெற்றுள்ளது.
செய்தி தெரிந்தபோது,

“ ஆழியான் பள்ளி அணையே அவன் கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—ஊழியான்
பூணேஅப் பூணுண் புரமெரித்த பொற்சிலையின்
நாணே அகல நட”

என்ற பாடலைச் சொல்லிக் கம்பர் அம் மைந்தனை எழுப்பினுர்.

தவளகிரி முதலியார் மைந்தன் அரச சேவையில் அமர்ந்திருந்த காலத்தில் ஏரெழுபது சிறப்பாக விளங்கக்கேட்ட அரசன், “ வேளாளர் அவ்வளவு சிறப்புடையவரென்று பாடல் பெறத்தக்கரோ ? கம்பர் சொல் மெய்யாமோ ? ” என்று ஐயப்பட்டான். முதலியார் தம் மைந்தன் இளமையாயிருந்தபோது நடந்த வரலாற்றைச் சொல்ல, அதுகேட்ட அரசன் மேலும் ஐயம் அடைய, அவர் காய்ச்சிய நெய்யில் முழுகியெழுந்து, கையில் மழுவேந்தி நின்று அரசன் ஐயத்தை நீக்கினுர் என்ப.

8. அந்தப்புரம் - பெண்கள் இருக்கும் இடம். அறு நான்கு கோட்டகம் - தொண்டை மண்டலத்து இருபத்துநான்கு கோட்டம். கச்சியப்பர் - கச்சியப்ப சிவாச்சாரியார் ; தமிழில் கந்தபுராணம் பாடினவர். குமரர் பொன் சந்நிதி-குமரகோட்டம்.

9. ஈழம் - இலங்கை. இரவி குலம் - சூரிய குலம். கவியென்றது :—

“ இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தகம் ஏந்திஅந்தப்
பொன்னம் பலத்தினில் புக்கிருந் தாளென்ன புண்ணியமோ
கன்னன் களந்தைக் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்சம் ஏடெனக் கற்ருன் ஒருமுத் தமிழையுமே ”

என்பது.

அவன் தேவி பாடல் : அது கிடைக்கவில்லை. வேழம் புரை சொல் - கரும்பொத்த இனிய சொல்.

10. திருக்குறளுக்கு உரை செய்தவர்கள் :—

“ தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லைஉரை செய்தார் இவர். ”

11. நிகண்டு - கலைக்கோட்டுத் தண்டு முதலிய பழமையாகிய நிகண்டுகள். திவாகரம் - திவாகர முனிவரால் இயற்றப்பட்ட தமிழ் நிகண்டு : இது பன்னி

ரண்டு தொகுதிகளை யுடையது. பிங்கலம் - பிங்கலந்தை; பிங்கல முனிவர் இயற்றியது; சூடாமணி நிகண்டு, சேந்தன் திவாகரம் முதலியவற்றிற்கு முந்தியது. உரிச் சொல் - உரிச்சொல் நிகண்டு: தொண்டை மண்டலத்துச் செங்குந்தர் மரபிற் பிறந்த காங்கேயர் இயற்றியது. இன்சொல் - இசைச் சொற்கள். நிகண்டு சூளாமணி - சூடாமணி நிகண்டு; தெய்வப் பெயர்த் தொகுதி முதல் பன்னிரண்டு தொகுதிகளை யுடையது; தொண்டை மண்டலத்துக் குன்றையூரில் சைன சமயத்துத் தோன்றினவரான மண்டலபுருடர் இயற்றியது. இவர் இருந்தது பெருமண்டூர் என்னும் வீரையூர் என்றும் கூறுவர். மண்டலவன் - மண்டல புருடன். குடிகொண்டது - வீரை: இப்போது பெருமண்டூர் என வழங்கும்.

சோழ மண்டல சதகம்

1. பார் - உலகம். இரவி - ஞாயிறு; சூரியன். மதியம் - திங்கள்; சந்திரன். ஒருபான் கவி - பத்துப் பாடல்கள். விறல் - வெற்றி.

2. இதில் சுட்டியிருப்பது, அடியிற் கண்ட வெண்பா :—

“புரந்தர தாரு புதுவைச் சடையன்
இருந்தவிய லூர்தெற்கு மேற்குப்—பரந்தபொன்னி
யாற்றுநீ ரால்விளையும், அப்பால் கிழக்கரிசி
மாற்றுநீ ரால்விளையு மாம்.”

அவ் வூரில் ஒரு கழனி, இன்றும் ‘கழுநீர் பாய்ஞ்சான்’ என வழங்கி வருவதே இதற்குச் சான்று.

3. இதில் சுட்டியிருப்பது, கம்பர் பாடிய வெண்பா :—

“மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதும் காவிரியே—பொய்கழுவும்
போர்வேள் சடையன் புதுவையான் இல்லறத்தை
ஆர்போற்ற வல்லார் அறிந்து.”

இந்த வெண்பா மூவலூரில் சிலா சாசனமாக வெட்டியிருக்கின்றது.

4. வீரசோழியம்:—வடமொழி யிலக்கணத்தைத் தமிழில் முதல் முதலாகக் கூறிய இலக்கண நூல். இஃது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவற்றைச் சுருக்கிக் கூறுவது. இது பொன்பற்றியூர்ப் புத்தமித்திரரால் இயற்றப்பட்டது. இந் நூல் அக் காலத் தாண்ட வீரசோழன் என்ற பட்டந்தரித்த வீர ராஜேந்திரன் பெயரால் செய்யப்பட்ட தாதலின் இப் பெயர் பெற்றது. வீர ராஜேந்திரன் காலம் கி.பி. 1063–1070.

தமிழ்க் கூத்தன் - ஒட்டக்கூத்தன் என்பர் சிலர்; வேறொரு புலவன் என்பர் சிலர்.

5. இங்கே சுட்டிய பாடல், காரிகையில் ‘இரு குறள் நேரிசை வெண்பா’ விற்குக் காட்டிய எடுத்துக்காட்டாம் :—

“தடமண்டு தாமரையின் தாதா டலவன்
திடலண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயின னூர்.”

இது புத்தூர்வேள் என்னும் ஈகையாளனை ஒரு புலவன் பாடியது. யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கணத்தை இயற்றினவர் அமுத சாகரர் என்னும் ஜைனர்.

6. பட்டினப்பாலை : பத்துப்பாட்டில் ஒன்பதாவது ; கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் பாடியது. கலிங்கத்துப்பரணி இராச பாரம்பரியத்தில், "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன் பத்தொ டாறுநூ றுயிரம்பெறப் பண்டு பட்டினப் பாலை கொண்டதும்" என உரைத்திருக்கின்றது.

பாண்டி மண்டல சதகம்

1–2. இவ் விரண்டு பாடல்களும் தஞ்சைவாணன் கோவை பாடினதைக் குறிக்கின்றன. இங்கே, தஞ்சை என்றது மதுரையை அடுத்த தஞ்சாக்கூரை. இவ் வூருக்குத் தலைவனுயிருந்தவன் வாணமரபில் வந்தான் ஒருவன். இவன் இயற்பெயர் தெரியவில்லை. இவன் அக் காலத்திருந்த பாண்டியனுக்கு அமைச்சனுகவோ படைத்தலைவனுகவோ இருந்தவன். இவன் 'வல்லத் தமர் வென்றவன்' என்றும், 'கன்னுடர் மண் கொண்டவன்' என்றும், வேளாளன் என்றும் தஞ்சைவாணன் கோவையால் தெரிகின்ருன். கி.பி. 1588-ல் பட்டந் தரித்த வீரபாண்டியனும் வல்ல மெறிந்தவனென்று தென்காசிக் கல்வெட்டால் தெரிகின்ருன். இவ் விரண்டினுங் குறித்த வல்லப் போர் ஒன்றேயாயின் தஞ்சைவாணன் காலம் 16-ஆம் நூற்ருண்டாகும். தஞ்சைவாணன் கோவை பாடினவர் பொய்யாமொழிப்புலவர் என்பது பெருவழக்கு ; இங்கே இரட்டையர் பாடினர் எனக் கூறப்பட்டுள்ளது ; இஃது ஆராயத்தக்கது.

3. இப் பாடல் கப்பற்கோவை பாடினதைக் குறிக்கின்றது. இக் கோவையினின்றும் சில பாடல்கள் இலக்கண விளக்கத்து அகத்திணையில் சில துறைகட்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள்ளன. இக் கோவை பாடினவர் யாரென்பது தெரியவில்லை. இதில் பாடப்பட்டவன் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தின் தென் பகுதியிலுள்ள கப்பலூரிலிருந்த வீரநாரண னென்னும் பெயருடைய கருமாணிக்கன். இவன், மரபால் இடையன் ; தஞ்சைவாணனைப்போல் இவனும் அக் காலத்திருந்த பாண்டியனுக்கு மந்திரியாகவும் சேனைத்தலைவனுகவும் இருந்தவன் ; பாண்டியனுக்காகக் கன்னுடரையும் காடவரையும் வடமன்னரையும் வென்றவன். இவ் வெற்றிகளைக்கொண்டு இவன் பதின்மூன்ருும் நூற்ருண்டிலிருந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தவனென்று ஊகித்தற்கிடமுண்டு. இக் கோவை 'கருமாணிக்கன் கோவை' எனவும் வழங்கும். இஃதின்னும் அச்சிடப்படவில்லை.

4. இப் பாடல், சௌந்தரியலகரி பாடின கவிராசர், பாண்டி மண்டலத்தார் என்கின்றது. சௌந்தரியலகரி என்பது வடமொழியிலுள்ள தொரு நூல். இதனை இயற்றியவர் ஆதி சங்கராசாரிய ரென்ப. இதனைத் தமிழில் மிக அழகாக மொழி பெயர்த்தவர் வீரைக் கவிராஜ பண்டிதர் என்பவர். வீரை என்பது இராமநாதபுரச் சீமையில் உள்ள வீரசோழன் என்னு மூர். இக் கவிராஜர் தமிழில் வேறு நூல் செய்ததாகத் தெரியவில்லை. தமிழ்ப் புலவருள் கவிராஜர் என்று கூறப்பெறுபவர் பலருளர். அவருள் ஒருவரிலிருந்து மற்ருெருவரை வேறுபடுத்தற்கு அவர் ஊர்ப்பெயரை முதலிற் சேர்த்து வீரைக் கவிராஜர், சேறைக் கவிராஜர், செங்கோட்டைக் கவிராஜர் என்று கூறுப.